On the first three days of festival prayers are offered to mother Durga to destroy our ignorance, faults, and vices. Goddess lakshmi is revered for the next three days as a giver of spiritual and material wealth .The final three days is spent in worshipping sarawati, The goddess of wisdom.

How to observe , Navaratri festival

Navaratri begins on the first day of the bright fort night of the Hindu month of purattasi. A pot with a lit lamp is usually established (ghatasthapanai) in a sanctified place at home or the temple. The lamp is continuously lit for nine days, respresenting the shakti within the Universe.

A number of Hindus observe a fast for purification over the nine days and special prayers. As this period is belived to be auspicious, many Hindus shop for new cloths, jewellery and new pots. Woman dress to gorgeous and elaborate costumers each nights for garba. Many put lot of effort into designing artist(decorated plates with lit lamps) in honour of the goddess. So every year Hindus around the world observe ten days of ceremonies, rituals and dances to worship the supreme mother goddess. Durga is the goddess worshiped along with Lakshmi and Saraswathi as the three manifestations of shakthi is called divine energy.

In my conclusion I believe that the most of the Hindus celebrate this festival not only in their houses but also at their working places to lead a prosperous life with peace and harmony.

C.NADESAN
TUTORIL STAFF
ROYAL COLLEGE.

With Best Compliments From

AKBAR

PREMIUM QUALITY TEA

SIGN OF GOOD TASTE.. AROUND THE WORLD

www.akbar.com

Hinduism and it's Importancy

Religion is no doubt the important subject every sensible man/ woman has to engage his / her attention on..There are people in whose opinion, any attention paid to religion is a waste of time and labour. They think that duty of man is only to work for the well-being of his fellow creatures. The interests of man even in this world have a religious basis, the well-being of our fellow creatures could itself be found to rest on that basis.

We know that morals are highly essential for the welfare of man in this world, and that religion is the back – bone of morals. Morality will be at a great stake of religion is to be overlooked . Fear to God is highly necessary for the maintenance of peace and order among societies.

The necessity of a religion and that of the grace of God and of our love to him being admitted, that the great God who is ever loving us would have given us a religion to enable us to approach him. That religion would no doubt guide us the proper good. That religion is known as true religion. True religion is the religion that help us in discovering the truth. God is the only truth which has an independent existence of its own, and the religion that enable us to see the God, is the true religion. We cannot see him with our physical eye nor even by our mind. It is done through by our practical experiences or enjoyment. A knowledge of the theory may help us in the realization, but it is not the actual realization. The thing necessary for the realization is whole souled develop to God.

Every other religion in the world has a beginning. It has a founder or a person who had preached a basic code that establishes such a religion. .But in the of Hinduism, no one knows when this religion came into being neither a date nor a period can be traced. Mythologcally it is believed that the Hindu religion originated from Lord Siva from the creation of the universe.

Hinduism is a way of life a Dharma. Hinduism is referred to as Sanatana Dharma, the eternal faith. It is based on the practice of Dharma code of life. A Hindu shall be he who has perfect faith in the law of reincarnation Avathara and he who worships the Avatharas and studies the Vedas, is a Hindu.

The Hindu religion instructs us very minutely on the three entities of

1) Pati (God) 2) Pasu (Soul) 3) Pasam (Bondage)

This means the religion adopts for the purpose of realization, are exhaustive and elaborate

.Pati or God is in its nature. He will not be affected by Pasam. He is pure and perfect, just and gracious, almighty, omnipresent, all-merciful and ever-blissful.

Pasu or Soul is the recipient of the grace of God. He is encased in Malam or pasu from eternity. He is ignorant, subject to illution, pain and sorrow, and his condition is therefore wretched &miserable.

Pasam is the bondage of souls and is of three kinds.

A) Anavam is the source of the souls ignorance & arrogance.

B) Karmam is the accumulation of the merits &demerits acquired by the souls & is the cause of their experience & enjoyment.

C) Maya is the seed of the material universe & it has the power of illuming the interllectual power of man to a certain extent when worked up by the Pati in the material plane.

The bondage of the souls by these malam is a condition of the soul from elernity, and not caused at any certain time.

The Hindu religion adopts for the purpose of realization. The stage of realization is far and very far away from us. The Hindu religion therefore tries in the first place to create in us a religion tendency and drag us by degrees into the spiritual plane. All our moral duties, the various rites, manners and even our prayers to God for worldly advancement may be said to have been instituted with this object of creating in us religion leaning. So all religion agreed that we must observe the moral laws and religious duties as a preliminary step to spiritual advancement. But according to the Hindu religion all these observances are but preliminaries are necessary for subsequent realization

Faith is an important factor in the matter of religion and blessed certainly are those who have a strong in their religion. Faith depends fully on circumstances over which man has no control; and without this faith it is not possible with men to follow one religion in preference to another. When the follower of a certain faith has acquired sufficient religion tastes and merits he will be led up to high forms of religion and ultimately to the true religion from which he will be enable to secure final salvation.

Education without religious training is hardly of any use to man, and it is religious training that is of material help to the cultivation of religious faith which would ultimately lead to spiritual realization. It is a great pity that value of faith is

misunderstood by so-called educated people as another word to superstition.

The main object of every religion is worship to God, and this worship will no doubt be accepted by him. What ever its form may be provided such worship is made in good faith. The final salvation is only to be expected through the true religion. The Hindu religion truly allows this and says,

"யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி யங்கே
மாதொரு பாகனார் தாம் வருவர்"

"Which ever God you may worship, in the form of that God will Lord Siva appear Cand bestow his grace"

Those who are observing Hindu religion could be reasonably proud that they belong to the most oldest of the old religion that are in existence to the present date, I too proud of it.

S.RAGAVENTHAN,
13 Math Division .

With Best Compliments From :

A. BRAINDRA

சிவஞான போதம்

திரு.S.சிவக்குமார் B.A.Dip in Edu

சிவஞானபோதம் என்னும் நூலின் ஆசிரியர் மெய்கண்டதெவர்.இந்நூல் பன்னிரண்டு சூத்திரங்களை அடக்கியது.உயிர்,உலகம்.இறைவன் ஆகியவற்றுக்கிடயிலான சந்தேகத்திற்கிடமின்றி விளக்கமாகேடுத்துரைக்கும் சிறப்புடையது சிவஞானபோதம் என்னும் நூல்.

முதலாவது சூதிரத்திலே உயிர் பற்றிய விளக்கம் கூறப்படுகின்றது.

"அவன் அவள் அது எனும் மூவினையின்
தோற்றிய திதியே ஒடுங்கி மலதுளதாம் அந்தம்
ஆதி என்மனார் புலவர்"

உலகதிலுள்ள உயிரினம் அனைத்துள்ளும் ஆண்பாலினத்தை அவன் என்றும்,பெண் பாலினத்தை அவள் என்றும், அஃறினயிலுள்ள அனைதும் அது எனவும் பிரித்து தனித்தனியாக கூரிவிடலாம்.அப்படியாக மூன்று தன்மைகளுடனும் படியக்கப்பட்ட உயிரினம் அனைதும் உயிருடன் கூடிவாழும் காலம் முடிவுற்றபோது,உயிர் உடலை விட்டு பிரிந்த பின் ஆணவமலம் உயிரை விட்டு நீங்காது.உடலுக்கு மட்டுமே தொடக்கமும் முடிவும் உண்டு என்று அறிஞர் கூறுவர்.இவை தமக்கு இறைவனையே மூல காரணமாக உடையன.யாவற்றுக்கும் மூலகாரணனாகிய இறைவனாலே தோற்றுவிக்கப்பட்ட நிலைபேறாக இருந்து பின் கட்புலனாகாத நிலையை அடைகிறது.அழியாத ஆணவமலத்துடன் கூடிய ஆண்மா மீண்டும் உலகம் கட்புலனாகும் போது பிறவி எடுக்கிறது.உலகதின் ஒடுக்கதிற்கும் நிலைப்பாட்டிற்கும் தோற்றதிட்ற்கும் உலக முதல்வராகிய இறைவனே காரணன் நூல்களிற் புலவர்கள் நங்குணர்ந்து முன்பே கூறியுள்ளனர்.

உலகம் தோற்றம் பெற்று நிலைபேறாயிருக்கும் போது ஆன்மாக்கள் பிறக்கின்றன.வாழ்கின்றன, உலகம் ஒடுங்கும் போது ஆன்மாக்களும் மலதுடன் ஒடுங்குகிண்ட்றன.கட்புலனாகாது மறைந்ததை மீண்டும் கட்புலன் ஆக்குவதற்கு தோற்றமும் ஒடுக்கமும் இல்லாத ஒருவனாலேயே முடியும் என்பது " போக்கும் வரவும் புணர்வுமில்லா புண்ணியன்" என்னும் திருவாசக வாிகலினலே உணர்த்தப்பட்டது.அதனால் உலகத்திற்கு முதல்வன் இறைவன் ஆகிறான்.இறைவன் உலகத்தை படைக்கவில்லையயின் உயிர்கள் வாழ்வதற்கு இடமில்லாது போகும்.இதனாலே "அவனின்றி ஓரணுவும் அசையாது"என்னும் வாக்கியம் உருவாயிற்று.

தனது காரியமாக உள்ள உலகம் பார்கும் இடம் எங்கும் ஒரு நீக்கமற நினைந்து கருணையோடு விளங்கும் உலக முதல்வராகிய இறைவன் ஆன்மாக்கள் தனது பிரர்துவ வினைக்கேற்ற சுகதுக்கங்களை அனுபவிக்கும் பொருட்டு அவரவரது கருமவினைக்கொப்ப நியம சக்தியினால் முத்தொழிலையும் புரிகின்ட்றான்.இதனை இரண்டாவது சூத்திரம் தெளிவுபடுத்துகின்றது.

"அவையே தனேயாய் இருவினையின்
போக்கு வரவு புரிய ஆனையின்
நீக்கமுமின்றி நிற்கும் அன்றே"

உலகதிலே பிறவி எடுக்கும் ஆன்ம தொகுதி இறைவனுக்கு வேராகாதவாறு அவையாகவே செய்துகொண்ட பாவ புண்ணிய பலனாக பிறப்பு இறப்பு ஆகியவற்றை அடைகின்றன.இறைவனது நியம சக்தியினால் ஆன்மாக்களுக்கு பேரருள் பொழிவதற்க்கு இறைவனும் உலகத்தை விட்டு நீங்காது இருக்கின்றான்.

முத்தி இன்பம் என்பது மாதா உதிரத்திற் சேர்ந்து பிறத்தலாகிய வரவையும்,இறத்தலாகிய போக்கையும் நீக்கி, உலகின் இன்பம் சிற்றின்பம் என்பதை உணர்ந்து விடுதலை பெறுதலைக்குறிக்கும்.இறைவனது நிலை மனிதரை போன்று பிறப்பும் இறப்பும் பெறாத நிலை,அந்த நிலை பெறுவதே ஆன்மக்களுக்கு பேரின்பமாகின்றது.எப்பொழுதும் ஆன்மாக்கள் பேரின்பனிலை பெருதல் வேண்டும் என்பதற்காகவே இறைவன் சக்தியுடன் கூடிய பலனாக இருக்கிறான் என்று சைவசித்தாந்த நூலகள் சிறப்பிதுக்கூறுகின்றன.

"தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத்தரும் சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்"

(திருவருட்பயன்)

போக்கு என்பது ஆன்மா தனக்கு கரும வசத்தாற் கிடைத்த உடம்பை விட்டு போதல் என்று பொருள் தரும்.வரவு என்பது இறைவன் கருமவசத்தாற் கட்டுவித்த உடம்போடு பிறதல் என்று கொள்ளப்படுகின்ற.இதனாலேயே இருவர் ஒரே விதமாக பிறக்காத திறதையும்,இருவர் வெவேரு விதமாக ஒரே விடயத்தை புரிந்து கொள்ளும் வித்தையும் உலகில் காணக்கூடியதாய் இருக்கின்றது.இது அவரவர் செய்து கொண்ட நல்வினை தீவினைப் பயனக அவரவர்க்கு ஏற்ற்படுவது.இறைவன் தானே விரும்பிப் படைத்தான் என்பது உபசாரமாகக்கூறப்படுவதே தவிர,அதில் உண்மை ஏதும் இல்லை என்பதை சிவஞானாபோதம் இரண்டாம் சூத்திரம் தெளிவு படுத்துகின்றது. பிராரத்துவ வினைப்பயனுக்கேற்றவாறே தனுவாகிய உடம்பும், காரணமாகிய கருவிகரணங்களும்,புவணமாகிய வாழிடமும்,போதமாகிய சுகதுக்கமும் ஒருவருக்கு கிடைக்கின்றனவே தவிர வேரு வகையால் அன்று என்பதை நன்கு தெரிந்து கொள்ளுதல் வேண்டும்.மேலும் உடம்பு கருவி காரணங்கள் யாவற்றுக்கும் வேறாக அவற்றை இயங்கச்செய்து அவற்றை அறியவைக்கும் ஆன்மா உடம்புக்கு வெறாக உள்ளது என்னும் உண்மையை அனுமானித்து வெளியிடலாமே தவிர,இதுவரை கண்ணாலே கண்டவர் யாருமில்லை.எனினும் கண்ணாற் காணவில்லை என்பதால் ஆன்மா என்று ஒன்று இல்லை என்று எவரும் கூறவோ,நிலைநாட்டவோ முன்வரவில்லை என்பதும் தெளிவு.ஆன்மா உளது என்பதில் சிரிது சந்தேகம் உள்ளவர்களும் ஆன்மாவைப்போன்று வேரு ஒன்று உடம்புகு வேறாக உடம்பினுள் உண்டு என்பதை ஏற்றுக்கொண்டுளனர்.சிவ்ஞானபோதத்தின் மூன்றாவது சூத்திரம்

"உளதில தென்றலி னெனதுடலென்றலின்
ஐம்புலனொடுக்க மறித்தலிற் கண்படில்
உண்டி வினையின்மையினுணர்த்த வுணர்தலின்
மாயா வியந்திர தனுவிளான்மா"

எனக் குறிப்பிடப்படுகின்றது.

மாயா காரியமாகத் தானே இயங்கக் முடியாத நிலையிலுல்ல இயந்திரப்பாவை போன்று அமைந்த உடம்பிலே நான் என்று அழிக்கக்கூடிய ஏதோ ஒன்று உடம்புக்கு வேறாகவுள்ளது என்று அருதியிட்டுக்கூறப்பட்டுள்ளது.எனவே உடம்பு என்று வேறுபடுத்திக்கூறப்படுதலால் அவ்வுடம்பு அல்லாத ஆன்மா இருக்கின்றது என்பது பிரித்தறியப்பட்டது.ஞானேந்திரியங்களையும் ,கன்மேந்திரியங்களையும் உணரக் கூடிய மெய்,வாய்,கண்,மூக்கு,செவி ஆகிய ஐந்து புலன்களையுமறிவதற்க்கு அவற்றுக்கு வேறாக ஆன்மா உளது என்பது குறிப்பிடப்பட்டது.கனவு நிலையில் பஞ்சப்புலங்களும்

ஏதும் அறியத நிலையில் புலங்கல் ஒடுங்கிய பின்னரும் கனவு காண்பற்ற்கு உதவுவதாயமைவது ஆதலின் ஐம்புலங்களுக்கு வேறாக ஆன்ம உண்டு.நல்ல உறக்க நிலையில் மூசுக்காது இயங்கினாலும் சுகதுக்க அனுபவங்களையும் செயற்பாடுளையும் உனரும் ஆற்றல் பிராணவாயுவாகிய மூச்சுக்காற்றுக்கு இல்லாமையால் நித்திரை செய்யும் நேரத்திலும் சுகதுக்கத்தை அனுபவத்தை அறியும் ஆன்மா தனியாக உள்ளது.விழிப்பு நிலையுஇல் சற்குருவானவர் ஆன்மாவின் உண்மை நிலையை அறிவிக்க அதனை அறிந்துகொள்ளும் ஆற்றல் ஆன்மாவுக்கு இயல்பாகவே இருத்தலால்,ஆன்மா என்று ஒன்று இருகிரது என்பது நிரூபிக்கப்பட்டது.

அனுமானத்டினாலே மாயா காரிய சம்பந்தமான எந்திரம் போன்ற உடலினுள்ளே ஆன்ம,ஐந்து அவ்த்தைகளையும் அனுபவிக்கும் போதுதான் அனுபவிப்பது போல மயகமுற்றிருகிறது என்பதை நாலவ்து சூத்திரம் கூறுகின்றது.

"அந்தட்க்கரண மவற்றினொன்றன்றவை
சந்தித்தான்மா சகலத்துணரா
தமைசர செய்ப்பனின் நஞ்சவைத்தே"

ஆன்மா என்று உடலின் இருப்பதால் உடல் இயங்குகின்றது எனினும் மனம்,புத்தி,சித்தம்,அகங்காரம் என்னும் அந்தகாரணங்க்கள் நாங்கினுள் ஆன்மாவும் ஒன்றொன்று.அனாதியாகவே ஆணவமலம் ஆன்மாவைப் பற்றியிருப்பதால்,தனது உண்மையான நிலை என்ன,வடிவம் என்ன என்பதை ஆன்மா அறிய மாட்டாது.நாட்டிலுள்ள நிலைமைகளை அமைசர்கல் மூலமாக அரசன் அறிவது போல,உலகியல் நடிமுரைகளை மனம் முதலான அந்த காரணங்களுடன் கூடி நின்று விழிப்பு,கனவு ,நித்திரை,துரியம்,துரியதீதம் என்னும் ஐந்து அவத்தைகளை உடனடியாக ஆன்ம அறிகிறது.

ஆன்மக்கள் தாமகச் சுதந்திரமாக விடயங்களை அறிந்து கொள்ள முடிவதில்லை.உலகம் முழுவதும் ஏகபரி பூரணமாய் விழங்கும் சிவத்தின் சந்நிதான விசேடத்தால் அறிகிண்டறன என்று ஐந்தாவது சூதிரத்தால் விளக்கப்பட்டுள்ளது.

"விளங்கியவுள்ளத்து மெய் வாய் கண் மூக்
களந்த்றியா வாங்கவை போலத்
தாந்த முனர்விற் றமியருல்
காந்தங் கண்ட பசாசத்தவையே"

புறக்கண்கலுக்குக் காணும் வகையில்,காரியமாகிய உலகத்திற்க்கும் அதன் முதற் காரணமான மாயைக்கும் வேறாக உள்ள சிவத்தின் உண்மை நிலையின் தன்மை ஆறாவது சூத்திறதில் கூறப்படுள்ளது.

"உணருரு அசத்தெனின் உணராதின்மையின்
இருதிறன் அல்லது சிவசத்தாமென
இரண்டு வகையினிசைக்கு மன்னுலகே"

மாயயின் தன்மையுடய உலகமும் சடப்பொருள்,முத்தியின்பத்தை அறிந்து அனுபவிக்கும் ஆற்றல் உடயதன்று.சிவம் முதியின்பத்தை ஆன்மாக்களுக்கு அதுவும் முதியின்பத்தை பெறவேண்டியதொன்றென்று.முத்தியின்பன் பெறுதற்குறிய ஆன்மா உலகத்திற்க்கும் சிவத்திற்க்கும் வேறாக உண்டு என்ற் ,ஏழாவது சூத்திரம் விளகுகின்றது.

"யாவையும் சூனியஞ் சத் தெதிராகலின்

சத்தேயறியா தசதிலதறியா
திருதிறனறிவுள திரண்டலாவான்மா"

ஆன்மா உண்மை ஞான விளக்கத்தினால் மட்டுமே முதி இன்பம் பெறுகின்றதே அன்றிப் பிறிதெவ்வகையினாலுமன்று என்று எட்டாவது சூத்திரம் தெளிவுபடுத்துகின்றது.

"ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்த்தெனத்
தம் முதல் குருவுமாய்த் தவத்தினிலுணர்தவிட்
டன்னிய மின்மையின் அரன் கழல் எனுமே"

இறைவன் குருவாக எழுந்தருளி வந்து நல் உபதேசம் செய்து புலன் வ்ழி நுகர்வது உன்மயான சுகம் அல்ல எனத்தெளிவுபடுத்திய மெய்ஞ்ஞானத்தைத் திடப்படுத்திக்கொள்ளும் வழிலியினை ஒன்பதாவது சூத்திரம் விளக்குகிறது.

"ஊனக் கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணினிற்ற் சிறத்தை நாடி
ஊராத்துனைத் தேர்த்தெனப் பாசம் ஒருவத்
தண்ணிழாலாம் பதிவிதி எண்ணும் அருள் செழுதே"

குருவாக எழுந்தருளி வந்து உலக அநித்தியதை எடுத்துணர்திய போது உணர்ந்த ஆனமா இறைவனிடத்துத் தன்னை பரி பூரன சரனாகதியாக ஒப்படைக்கெளம் காலை இறையருள் சுலபமாக கிடைக்கும் என்பதை பத்தாம் சூத்திரம் குறிப்பிடுகின்றது.

"அவனே தானே ஆகிய அந்நெறி
ஏகனாகி இறைபணி நிற்ற்க
மலமாயை தன்னாடு வல்வினை இன்றே"

இறைவன் திருவருள் இன்றித்தன்னால் எதுவும் செய்ய முடியாதென்பதை ஆன்மா உணர்ந்து அவ்விதம் தனக்கு நல்லுணர்வை ஊட்டிய சற்ற் ருவினிடம் நீங்காத அன்பு பூண்டு முதியின் பத்திலே திளைத்திருக்கும் நிலையினை பதினோராம் சூத்திரம் விளக்குகின்றது.

"காணும் கண்ணுக்கு காட்டு உளம் போலக்
காண உளத்தைக்கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன் அழல் எனுமே"

இறைவனது பாதார விந்தங்கலை நாட விடாது தடுக்கும் மல்;அ பந்தங்களை நீக்கிச் சிவனடியாருடன் சேர்ந்து சிவசின்னங்கள் அணிந்த சிவனடியார்களைச் சிவன் எனவே வழிபடல் வேண்டும் எனப் பின்வரும் சூத்திரம் கூறுகின்றது.

"செம்மலர் நோன்றாள் சேரல் ஓட்டா அம்மலாம் கழீஇ அன்பரொடு மரிஇ
மாலறநேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அர்னெனத் தொழுமே"

இறைவந்து கழலினைகளைச் செரவிடாது தடுக்கும் இயல்பினையுடய ஆணவம்,கன்மம்,மாயை என்னும் மும்மலச்சேற்றினைத் தத்துவ ஞானமாகிய நீரினாலே கழுவிச் சுத்தமடைதற்ற் பொருட்டு,சிவபெருமானிடத்து உள்ளன்புடன் கூடிய மெய்யடியார்களிடத்து சிவ வேடப்பொழிவினை கண்ணுற்ற போதும்,சிவாலயங்களை

க்கண்ணுற்ற போதும் சிவமெனவே கருதி வழிபடல் வேண்டும்.

"இறைவனோ தொண்டர் தம் உள்ளத்துள் ஒடுக்கம்"ஆதலின் சிவனடியார்களை வணங்குதல் சிவனை வணங்குதற்கு ஒப்பாகும்.நல்லார் இணக்கம் நன்மை பயக்கும்.சிவனடியார்கள் ஓடும் செம்பொனும் ஏக்க நோக்கும் நெறியினர்.கூடும் என்பினின் கும்பிடலே அன்றி வீடும் வேண்டா விறலினர்.விருப்பு வீறுப்பு அற்றவர்.அவர்களுடன் கூடுவதால் அவர்களைப் போன்ற நிலை எய்துவதற்க்கு ஏனையோருக்கும் வாய்ப்பு ஏற்ப்படும்.சரியை,கிரியை,யோகம்,ஞானம் என்னும் நாங்கு நெறிகளிலும் நின்று இறையருள் பெற்றவர்கள் ஏனையோரால் இறைவானாகவே போற்றப்படக் கூடியவர்கள்.இறைவனை இடையறாது தமது இதயத்தில் இருத்தி வழிபாடு செய்து வருவோர் நடமாடும் கோயிலாக விளங்குவர்.

With Best Compliments From :

Malora Impex (Pvt) Ltd.

(Importers & Distributors of Educational Goods)

No. 46, Lauries Road,
Colombo - 04.
Tel : 2595017
Fax : 2503601
E-mail : malore@eureka.lk

திருவிளக்கு

மாகாலக்ஷ்மியின் அம்சமால்
மங்கலத்தின் சின்னமால்
நோய், தரித்திரம் நீங்குமாம்
நீ ஒளி பரவும் இட மெல்லாம்

விரத, பண்டிகை விசேட நாட்களில்
சைவ இல்லங்களில் திருமணங்களில்
பெரியோர்களை வரவேற்றலில்
மங்கல ஒளியை வீசுவாய்.

திருவிளக்கின் ஐந்து இலக்கணங்கள்
சகிப்புத்தன்மை, வைாக்கியம், பொறுமை
சமயோசிதபுத்தி, விட்டுக்கொடுப்பது சேர்ந்தது தான் பெண்மை!

ஒரு முகம் ஏற்றுவாதல் மத்தியபலனும்
இரண்டு முகமால் குடும்ப ஒற்றுமை வளர்ந்திடுவாய்!
மூன்று முகமென்றால் புத்திசுக பலனும்
ஐந்து முகமால் செல்வத்தை பொழிந்திடுவாய்!

நம் அக இருளை நீக்கும் விளக்கே!
நற்சிந்தனை உண்டாக்கும் விளக்கே!
புரநலச் சிந்தனை மிளிரச் செய்யும் விளக்கே!
பாவங்களை போக்கும் விளக்கே!

சௌபாக்கியமும், செழிப்பும் தருவாய்
தெய்வீக ஒளி தருவாய்
காரியத்தி பெற வழி வகுப்பாயி
மனநிறைவும் பூரணமும் தருவாய்!

Ashwin Ganesu Balaratnarajah
6 "C"

With Best Compliments From :

ASHWIN
GANESU
BALARATNARAJAH

சிவமயம்
2010

பகவானுக்கும் பக்தனுக்கும் ஒரு போட்டி

என்ன! பகவானுக்கும் பக்தனுக்கும் போட்டியா! கடவுளுக்கும் மனிதனுக்கும் போட்டி சாத்தியமா, அது எங்கே நடக்கிறது. யார் இதை நடத்துகிறார்கள் ? இன்றைய நிலையில் தொழிலில் போட்டி கணவன் - மனைவிக்குமிடையே போட்டி, குழந்தைகளிடம் போட்டி அடுத்த வீட்டுக்காரரோடு என்று சமூகத்தில் நடக்கும் போட்டிகள் பல இவை எனக்கும் பிறருக்கும் போட்டி என்ற வகையைச் சேர்ந்தவை.

எனக்கும் இயற்கைக்கும் நடப்பது அடுத்த வகை போட்டி ஏற முடியாத மலை ஏறுவது , பொங்கும் கடலைக்கடப்பது என யனஎநவெரசழரள ஆகப் பல போட்டிகள் உள்ளன. சற்று சிந்தித்துப் பார்த்தால் சில நேரம் எனக்கும் எனக்குமே போட்டி நடப்பது தெரியும். காலையில் நமக்குள் சுறுசுறுப்பு பகலில் இருப்பதில்லை. அதே சுறுசுறுப்பை மீண்டும் பெறுவது எப்படி,? எனக்கும் எனது உபாதைகளுக்கும், எனக்கும் எனது குறைப்பாடுகளுக்கும் நடக்கும் போட்டியில் நான் வெல்வது எப்படி? இப்படி எனக்கும் பிறருக்கும் , எனக்கும் இயற்கைக்கும், எனக்கும் எனக்குமே போட்டி என்று மனிதன் நடத்தும் போட்டிகளிலேயே அவனது வாழ்நாள் முழுதும் கழிந்து விடுகின்றது. மேற்கூறிய கூரிய மூன்றும் புறப்போட்டிகளிலிருந்து சிறது விலகி நம்முள் நாம் ஆழமாக நோக்கும் போது நம் அகத்தில் காண்பது தான் பகவானுக்கும் பக்தனுக்கும் நடக்கும் போட்டி.

பகவானுக்கும் பக்தனுக்கும் போட்டியா? சாத்தியமா? இறைவன் எப்படிப்பட்டவன்? விபு நீக்கமற நிறைந்தவன் சர்வ சக்திமான் எல்லாம் அறிந்தவன், நாம் எப்படி? அனு மிகச்சிறியவர்கள், அற்பசக்தி . இப்படிப்பட்ட மனிதனுக்கும் இறைவனுக்கும் போட்டி நடக்கிறது என்பதை எப்படித் தெரிந்து கொள்வது?

தியானம் செய்தால் மனம் எங்கேயோ அலைகிறது. கை, கால் ஒத்துழைக்க மறுக்கிறது. இறைவனை தவிர வேறு விஷயங்களே ஞாபகத்திற்கு வருகின்றன. உடனே எழுந்து துடிக்கிறோம். நாம் அமைதியின்றி தவிக்கும் போது இந்த போட்டி நடக்கிறது. வீண் பரபரப்பு இருந்தாலே அங்கு பகவானுக்கும் பக்தனுக்கும் போட்டி நடக்கிறது என்று அர்த்தம். இந்தப் போட்டி நமக்கு மட்டும்தானா? இல்லை நம் ஒவ்வொருவருக்கும் நடக்கக்கூடியது தான் மேலும் இது காலங்காலமாக நடக்கும் ஒன்று என்பதற்கு வரலாற்றில் சான்றுகள் உள்ளன.

முதல் வகைப் போட்டி : ஆதாரமா? ஆதாயமா ?

ராவணன் சிறந்த வீரன். ஐஸ்வர்யமும் தேஜஸும் கொண்டவன். கல்விக் கேள்விகளில் நிபுணன் அழகில் மன்மதன், கற்புள்ள மனைவிக்கு கணவன்.

செல்வமிக்க நாட்டையும் சிறந்த வீரர்களையும் உடையவன். இப்படி நல்லவற்றையெல்லாம் தன் வாழ்க்கையின் ஆதாரங்களாக ரவணன் கொண்டிருந்தான். இறைவன் அருளால் கிடைத்த இந்த ஆதாரங்களைக் கொண்டு மேலும் பெருக்கிக் கொள்வதற்கு பதிலாக பேராசையின் காரணமாக ஆண்டவனிடமிருந்து மேலும் ஆதாயத்தைப் பறிக்க பார்த்தான். - அநியாயமாக !

இறைவன் வழங்கியவற்றைக்கொண்டு ராவணன் தன் மக்களையும் முன்னேற்றாமல் இருப்பதையும் காக்காமல் ராமரின் சிறந்த சொத்தான சீதையைக் களவாடியதால் வதைக்கப்பட்டான். செல்வம், அறிவு , வாழ்க்கை போன்ற ஆதாரத்தை இறைவன் நம்மிடம் வழங்கும் போது நாமோ அவரிடமிருந்து இன்னும் என்ன ஆதாயத்தை அடையலாம் என்றல்லவா ஏங்குகிறோம். இறைவன் தந்த ஆதாரத்தை காப்பதா? இன்னும் ஆதாயத்தை அவரிடமிருந்து தேடுவதா? என்ற ஒரு போட்டி நடக்கிறது. ஆதாரமா? ஆதாயமா?

அப்படியென்றால் இறைவனிடமிருந்து செல்வங்களை நாம் எதிர்பார்ப்பது தவறு என்று புரிந்து கொள்ளக் கூடாது. இறைவனாக நமக்குத் தேவையானதைத் தருகிறார். ஏதோ ஒரு செல்வம் ஒவ்வொருவரிடமும் உள்ளது ஆனால் உள்ளதை சரியாக பராமரிக்காமல் மேற்கொண்டு பேராசை பிடித்து அலையும் போது நமக்கு தேவையற்றதையெல்லாம் கேட்கிறோம். அதனால் வருவது ஐஸ்வர்யம் அல்ல அனைஸ்வர்யம்! அதை அளிப்பது ஸ்ரீ தேவி அல்ல அவளது அக்காள். " தன்னைத் தந்த கற்பகம் " என்றார் ஆழ்வார். அப்படி இறைவன் தன்னையே தரத் தயாரக இருக்கும் போது நாம் ஆசைப்பட்டு, அவசரப்பட்டு இது தான் வேண்டும் என்று கேட்கிறோம். அது தான் பிரச்சனையின் துவக்கம்.

எனக்கு இது தான் வேண்டும் என்று குறிப்பிட்டு கேட்பது ஆன்மீகத்திற்கு முரனானது. இறைவன் தருவது எதுவானாலும் அதை ஏற்றுக்கொள்வதே புத்திசாலித்தனம். அப்படி ஏதாவது வேண்டாதது வந்தாலும் இறையருளால் வந்த விஷமும் அமிர்தமாகும். பிரச்சணையே பூஷணமாகும்.

அடுத்த போட்டி: ஆவணமா ? ஆணவமா ?
கைலாயத்தில் சிவனுக்கு அனுக்கத் தொண்டராக இருந்தவர் சுந்தரர். சிவனால் மிகவும் நேசிக்கப்பட்டவர். அப்படியிருக்கையில் அவர் அங்கிருக்கும் இரு பெண்களில் மையல் கொண்டதால் சிவலோகத்தை விட்டு பூலோகம் வர நேரிட்டது. பூலோகத்தில் ஒரு செல்வந்தர் வீட்டில் சுந்தரராக வளர்ந்தார். ராஜ போகத்துடன் வளரும் அவருக்கு திருமணம் நடந்தது. அந்த சமயத்தில் சிவனே அங்கு சிவனடியாராக கையில் ஓர் ஓலையுடன் வந்தார்.

வந்தவர், " சுந்தரா நீ என் அடிமை " என்றார். சுந்தரரை அடிமை என்றதும் அவர் ஆத்திரத்துடன் " யார் இந்த பித்தன் " என்று கேட்டார். " முதியவரோ உன் பாட்டனார்

எழுதி தந்த ஓலை இது " என்று தான் கொண்டு வந்த ஓலையைக் காட்டினார். அதில் நானும் என் சந்ததியினரும் திருவெண்ணைநல்லூரிலுள்ள உனக்கு அடிமை என எழுதியிருந்தது. " ஓலை ஒன்றே சாட்சி என்பதால் , ஓலையைக் கொடுங்கள் நான் படிக்க வேண்டும்," என்றார் சுந்தரர். முதியவரோ நான் ஓலையை தரமாட்டேன் என மறுத்தார். ஆவணமாகிய ஓலைச்சுவடி தான் ஒரே சாட்சி. அந்த ஆவணத்தை இவர் பிடித்து இழுக்க அவர் தர மறுக்க சுந்தரருக்கும் , முதியவர் வேடத்தில் வந்த சிவனுக்கும் அங்கு ஒரு போட்டி நடக்கிறது. சிவகாரியம் செய்வதற்காகவும், பக்தியை பரப்புவதற்காகவும், கைலாயத்திலிருந்து வந்த சுந்தரர் எல்லாவற்றையும் மறந்து விட்டார். காரணம் தான் பெரும் செல்வந்தன், அழகன் போன்ற ஆணவம் அவரிடமிருந்தது. சிவபெருமானிடமிருந்து சுந்தரர் ஆவணத்தைப் பறிக்கப்பார்க்கிறார். ஆவணத்திற்கும் - ஆணவத்திற்கும் போட்டி தொடர்வரத் தொடர்ந்து வந்து நன்புல மறையோ முன்னர் நாம் தடுத்தாண்டோம்.

முன் பிறவியில் நீ எமக்கு தொண்டன். நீ மங்கையர் மீது விருப்பங் கொண்டதால் நம் ஆணைப்படி இப்பிறவியை அடைந்தாய் துன்பமான உலக வாழ்வு உன்னைத் தெடர்ந்திருக்க உன்னைத் தொடர்ந்து வந்து நாமே தடுத்தாற் கொண்டோம். தெய்வ காரியம் உனக்காகக் காத்திருக்கும்போது தேக வாழ்வில் நீ ஈடுபட இருந்தாயே சுந்தரா? என்று பெருமான் உண்மையை உரைத்தார்.

முதலில் யார் இந்தப் பித்தன் என்று கேட்டதை வைத்தே " பித்தாப்பிறைசூடி பெருமாளே அருளாளா" என்று சுந்தரர் பாடிப் பணிந்தார்.

இறைவன் மனிதனிடம் வைத்துள்ள தெய்விகத் தன்மையை மீட்டெடுக்கப்பார்க்கிறார். மனிதனோ அவரை மறப்பதற்கும் மறுப்பதற்கும் முயல்கிறான்.

ஒவ்வொரு பக்தனுக்கு உள்ளேயும் நடக்கும் இப்போட்டியிலிருந்து எவன் விலகி மேலெழுந்து வருவானோ அவனுக்கே ஆனந்தம் கிடைக்கும்.

பொதுவாக நாம் ஒரு போட்டியில் ஜெயித்தால் தான் ஆனந்தம் என்போம். ஆனால் இறைவனுக்கும் நமக்குமான போட்டியில் இறைவனிடம் தோற்பவர்கள் தான் உண்மையில் வெற்றி பெறுவார்கள். Ego Vs God ஆண்டவனது சக்திக்கும் அகங்காரத்திற்கும் இடைவிடாது ஒரு போட்டி நடக்கிறது. முன் போட்டிகளை போல் - ஆதாரம் ஓ ஆதாயம்: ஆவணம் ஓ ஆணவம் - இங்கு ஓர் எழுத்து மாற்றம்.

போட்டி எனில் sponsorship தேவை . போட்டியாளர்களின் உடைகளில் பெரிய நிறுவனங்களின் பெயர்கள் உழுதப்படும். ஆணவத்திற்கும் ஆவணத்திற்குமிடையே நடக்கும் போட்டியாளர்களின் மீது அகங்காரம் நுபழளைஅ என்று எழுதி இருக்கும்.

ஸ்ரீ ராம கிருஷ்ணர் கூறுவார் "ஒரு யானை போய்க்கொண்டிருந்த போது " ஏ யானையே " இது என் தெரு ஒதுங்கி போ " என ஒரு தவளை கூறியதாம். யானை லேசாக

மிதித்தாலே தவளை என்னவாகும் ? அனுவான மனிதனுக்கும் விபுவான இறைவனுக்கும் போட்டி நடக்கும் போது இறைவன் இந்த யானை மாதிரி இறைவன் தவளை போல !

இறைவன் எப்படியாவது மனிதனைத் தன் அகங்காரத்திலிருந்து மீட்டெடுக்கப் பார்க்கிறார். ஸ்ரீ ராமானுஜனுடைய குரு புத்திரன் ஒருவர் வேண்டாத இடத்திற்கெல்லாம். போகிறார். நல்ல குலத்தில் பிறந்து தன் மகன் இப்படி ஆகிவிட்டானே என்று குரு தவிக்கிறார். அப்போது ஸ்ரீ ராமானுஜர் அங்கு சென்று, நீ என் குருபாயி என்னுடன் வா என்று சொல்லி அவரைத் திரும்பக் கொண்டு வந்தார்.

மீட்டெடுக்கும் பண்பு ஓர் ஆசாரியருக்கே இருக்கும்போது ஆண்டவனுக்கு எவ்வளவு இருக்கும் ! ஸ்ரீரங்கத்தில் சர்வபூஷித அலங்காரத்துடன் விளங்கும் ரங்கநாதப் பெருமான் , சில சமயங்களில் ஈரமான மஞ்சள் ஆடை உடுத்தி துளசிமாலை அணிந்திருப்பாராம். இதற்கு பட்டரின் வியாக்யானம் உன்னதமானது. விரதம் மேற்கொள்ளும்போது அல்லது ஒரு பிரகடனம் செய்யும் போது மஞ்சள் ஆடை அதுவும் ஈர ஆடை உடுத்தி துளசி மாலை அணிவார்கள். ஸ்ரீரங்கநாதர் ஏன் அப்படி செய்கிறார் என்றால் பக்தர்களே ! நீங்கள் என்னைச் சார்ந்தவர்கள். அனாதைகளாக நீங்கள் அங்குமிங்கும் அலைய வேண்டாம். நீங்கள் என்னைச் சேர்ந்தவர்கள் என நம்மிடம் கூறி பிரகடனம் செய்கிறாராம். "த்வம் மே" - நீ என்னைச் சேர்ந்தவன்" - என் குடும்பம், பிள்ளை, தொழில், பணம் என்று ஏதேதோ கூறி அதிலேயே போய்விடுவோம். இறைவனை மறப்பதில் மனிதனுக்கு ஒரு தனி சுகம் உண்டு.

மூக்குப்பொடி விநோதம் :- அகங்காரம் என்ன செய்யும்.? ஸ்ரீராமகிருஷ்ணரின் உறவினர் ஹலதாரி. நல்ல பண்டிதர். குருதேவரை தரிசிக்கச் சாதகர்களும், பக்தர்களும் வரும் போது இவரிடம் ஏதோ ஒரு தெய்வீக சன்தி உள்ளது. என்று மனநிலையில் ஹலதாரிக்கு தோன்றும். ஆனால் அவருக்கு ஒரு பிரச்சனை. அவர் அத்யாத்ம ராமாயணம் படிப்பதுண்டு. ஜபம், தியானம் போன்ற அனுஷ்டானங்களை முறையாகச் செய்யாமல் வேதாந்தம் படித்தால் விசாரம் வரும். கூடவே வேதனையும் வரும். ஆணவத்தை வளர்க்கும். அது ஹலதாரிக்கும் வந்தது.

ஹலதாரி சாஸ்திரத்தை படிக்க ஆரம்பிக்கும் முன் படாடோபமாக கால் மேல் கால் போட்டுக்கொண்டு கம்பீரமாக அமர்வார். மூக்குப்பொடி போடும் பழக்கம் அவருக்கு இருந்தது. இது உள்ளே போனதும் அவரது குரல் மட்டுமல்ல குணமும் மாறி விடும். அதற்கு முன்வரை, அடக்கமாகப் பேசுபவர் பொடி போனதும் என்ன நடக்குமோ தெரியாது!

"ஏய் ராமகிருஷ்ணா ! உன்னை நீ பெரியஅவதார புருஷன் என நினைத்தாயா? என்று கேட்பார். குருதேவரிடம் யாரேனும் இது பற்றிக் கேட்டால்அவர் , கவலைப்படாதே ! அவர் பேசவில்லை. பொடி பேசுகிறது என்பார். சிரித்தபடி.

இங்கு கடவுள் தோற்கவில்லை: அகங்காரமும் ஜெயிக்கவில்லை. என்றாலும் ஜெயித்ததாக அது நம்பும் பிறரை நம்பவைக்கும் முயற்சிக்கும்.

நம்மை அறியாமலே நாம் இந்தப் போட்டியில் ஈடுபட்டிருக்கிறோம். இதில் நம்மை நாமே பிடித்துக்கொண்டிருப்பபது சமஸ்காரம் தான். அகங்காரத்தை ஆண்டவனிடம் சமர்பித்தால் வேண்டாத சமஸ்காரங்கள் விரைவில் தொலையும்.

ஸ்ரீராமகிருஷ்ணர், பவதாரிணி தேவிக்கு நைவேத்தியம் படைத்து, அதற்குரிய மந்திரம் கூறும் முன்பே, பழங்கள், - பலகாரங்கள் முதலியவற்றை எடுத்து தேவி வாயில் போட்டுக் கொள்வான்.

ஸ்ரீராமகிருஷ்ணரோ, பொறு அம்மா! மந்திரம் சொல்கிறேன் பிறகு சாப்பிடலாம் என்பார். உண்மையான பக்தனிடமிருந்து ஏதாவது பெற வேண்டும் அல்லது பக்தனிடமுள்ள வேண்டாததை விலக்க வேண்டும் என்று தெய்வம் வருகிறது.

கௌரி பண்டிதர் ஒரு நல்ல சாதகர் அவருக்கு சில சித்திகள் இருந்தன. " சித்திகள் ஆண்மிக வாழ்விற்கு தடைகள் என்பார் குருதேவர். பண்டிதர்கள் நிறைந்த அவையில் கௌரி பண்டிதர் வருகிறார் என்றால், கமண்டலம் தூக்கிக் கொண்டு அதிலிருக்கும் நீரைத் தெளித்தப்படி, ஹா, ரே, ரே, ரே, நிரா லம்போ லம்போதர ஜனனி கம்யாமி சரணம்! என்ற ஆதிசங்கரரின் வரியை உச்சரித்தவாறு வருவார். அதனால் பிற பண்டிதர்களுக்கு பயம் வந்து விடும்.

கௌரி பண்டிதரின் சித்தியால் அவர் சொல்வது தான் அங்கு நடக்கும். அவரை தோற்கடிக்க முடியாது. ஆனால் அது அவரின் ஆன்மீக முன்னேற்றத்திற்கு தடை என குருதேவர் நினைத்தார்.

அன்று அந்த அவையில் ஸ்ரீராமகிருஷ்ணர் இருந்தார். கௌரி பண்டிதரும் வழக்கம் போல மந்திரத்தைச் சொல்ல குருதேவர் அவரைக் காட்டிலும் பெரிதாக உரக்க அம்மந்திரத்தைச் சொன்னார். தன்னைக்க காட்டிலும் பெரிய ஆள என பண்டிதர் வேகமாக கூற அதை விட வேகமாகவும், பலமாகவும் குருதேவர் கூற ஒரு கட்டத்தில் அவரால் குருதேவருடன் போட்டியிட முடியாமல் அமைதியானார்.

எதிரணித் தலைவனா இறைவன் ?

பகவானுக்கும் பக்தனுக்கும் நடக்கும் போட்டியில் பக்தன் தெய்வம் முன்பு பணிந்தால் போதும் தெய்வம் அப்படியே ஏற்றுக்கொள்ளும். ஏனெனில் அது போட்டியே கிடையாது.

ஆழ்ந்து நோக்க நோக்க, மனிதனுக்கும், இறைவனுக்கும் போட்டி என்பதே சாத்தியமில்லாத ஒன்று இறைவனுடன் நம் போட்டியிடவே முடியாது என்பதைப் புரிந்து கொள்வோம்.

இறைவன் உனக்கு உகந்தவர் நான் அவரைச் சேர்ந்தவன். என்னைப் பாதுகாக்க அவர் உள்ளார் என்பதை புரிந்து கொள்ளும் போது நமக்கு பரபரப்பு வருமா? அவருடன் போட்டியிட முடியுமா?

இறைவன் எதிரணித் தலைவன் என்று நாம் நினைக்கக் கூடாது. அவன் நமது அணியைச் சேர்ந்தவன். அது மட்டுமல்ல , ஆழமாகக் கவனித்தால் நம் அணித்தலைவரே அவர்தான் என்பது தெரியும். அப்போது உண்மையிலே நாம் போட்டியிட வேண்டிய இடம், விஷயங்கள் என எல்லாமே நமக்கு மாறி விடும். இறைவனுடன் போட்டி போடாமல் அவரின் பிரதிநிதியாக இருந்து நாம் போட்டியிடுவோம். யாரிடம்? எவற்றிடம்?

காம குரோத, மோக, லோப, மத, மாத்சர்யத்துடன் போட்டியிடுவோம். சுயநலப் பேயுடன் போட்டியிடுவோம். அகங்காரத்தை ஒழித்து ஆண்டவனை நம்முள் வரவழைப்போம்.

ஜெய் ஸ்ரீகுருமஹராஜ்கீ ஜெய் - பொருள் என்ன ? பக்தர்கள் " ஜெய் ஸ்ரீ குருமஹராஜ்கீ ஜெய் அல்லது " ஜெய்மா என்பார்கள். ஸ்ரீ ராமகிருஷ்ணரின் படையில் இருப்பவன் நான் அன்னை ஸ்ரீ சாரதையின் அன்புப் புதல்வி நான் என்று அவர்களின் பிரதிநிதியாக செயல்படுகின்றேன். அதனால் எனக்கு எல்லா இடங்களிலும் வெற்றி தான் என்பது தான் இதன் அர்த்தம்.

இப்படி பகவானுக்கும், பக்தனுக்கும் நடக்கும் போட்டியை நாம் நன்கு புரிந்து கொண்டால் இறைவனது திருச்சபையில் போட்டியில்லாமலே அவரால் நாம் தேர்ந்தெடுக்கப்படுவோம். அந்த நிலை நம் அனைவருக்கும் வாய்க்க இறைவன் அருள வேண்டும்.

ஸ்ரீ.அபிலாஷ்
13 கணிதப்பிரிவு

With Best Compliments From :

SKY Jewellery

Dealers in Wholesale & Retail Jewellery

138/5, Aysha Complex, Sea Street, Colombo - 11. Tel : 011-2394626

Religion and Science

The concept of religion and science are always contradictory and the ideas that they express are believed to be conflicting throughout the human life well that's what most people think. In this article I would like to reveal some important facts related to this contradiction on why both the religion and science have been questioned throughout the history.

Religion is the belief in and worship of a god or gods or even a set of beliefs concerning the origin and purpose of the universe. No one is still sure when the ideology of religion arouse but it is believed that it was used as answers to the ever curious man kind on the birth of everything and most importantly used as a moral guide on how to live their lives and fulfill their satisfactions. Science on the other hand, is an enterprise that builds and organizes knowledge in the form of testable explanations and predictions about the natural world.

The relationship between religion and science has been one focus of the demarcation problem. Somewhat related is the claim statements about the world made by science and religion may rely on different methodologies. Religion is often argued, relies on revelation and faith. The methods of science are elaborated. As a result the conflict began from the birth of science and technology when man finally questioned the almighty. The study of science against the concepts of religion certainly has its consequences. One important event is the trial of the famous scientist Galileo Galilee who came up with new findings regarding the planetary motion which was against the concept of church at that time.

Even though people have been fascinated by the wonders of science, the relief and comfort given by the belief of god especially as a source of mental strength is immeasurable. It's not necessarily have to be a specific god , but even the most strongest atheist (a- without, theism- beliefs on god) tend to have a hope is some mystical force when it comes to facing problems, some refer it to as luck and some refer it to as god. Rituals and identity are components of religion which acts as a mean of reminding us of its morals and values. Up to now, it is important to understand that religion cannot be completely explained by science just the way the modern man wants. But it should be accepted as two different pathways for better life in which we should not compare the values of each other.

According to the new findings, most of the religious environments are often silent and peaceful and even the preaching in a rhythmic tone has a calming effect on people which relives their stress. All those prayers they make give them an opportunity that there is some one or some force will be there to take care of their problems which also has it's psychological values on their level of confidence and to be more optimist towards the problems they are facing. The traditions and rituals which have been followed by most of the religions have maintained the balance of the nature which was the great fall back found in the use of modern science and technology.

Sadly superstitions have been contaminating some of these rituals; it's up to us as followers to emphasize the importance of following the ethical practices as mentioned in the morals of a religion. In addition to that the misunderstanding between the followers of different religions has created an inequality which has disrupted the unity among man kind.

In this modern world, it is actually hard for a person to decide which side to choose; to be more precise to believe in religion or science. The clash won't be over as man starts to question both science and religion. So in this never ending crisis it's up to us to adjust our lifestyle compatible to both the methodologies to create a unity among the people and make way for a better future.

Harendra Puviharan.
(Old Boy)



ஹரியும் ஹரனும்!

வைகுண்டவாசன்-கயிலைவாசன்
சேஷாசலன்-ஸ்ரீசைலன்
ஜலசயனன்-ஜலகண்டேசுவரன்
பாற்கடல்நாதன்-பனிமலைநாதன்
நாகசயனன்-நாகபரணன்
திரிவிக்ரமன்-திரிபுரம் எரித்தவன்
பத்ரிநாராயாணண்-சங்கரநாராயணன்
அலைமகள் நாயகன்-மலைமகள் நாயகன்
பூமகள்மார்பன்-உமையோருபாகன்
அர்ச்சாரூபி-லிங்காரூபி
கமக்கண்ணன்-முக்கண்ணன்
அலங்காரப்பிரியன்-அபிஷேகப்பிரியன்
பீதாம்பரதாரி-புலித்தோலாடைதாரி
நீலமேகவண்ணன்-பொன்னார்மேனியன்
திருமண்காப்பு அணிபவன்-திருநீறு அணிபவன்
துளசிமாலை அணிபவன்-கொன்றைமாலை அணிபவன்
சங்குசக்கரதாரி-மான்மழுவேந்துபவன்
துளசிப்பிரியன்-வில்வப்பிரியன்
ஆஷ்டாக்ஷரன்-பஞ்சாக்ஷரன்
வேணுகானப்பிரியன்-சாமகானப்பிரியன்
அச்சுதானந்தன்-சின்மயானந்தன்
மண்ணை உண்டவன்-நஞ்சை உண்டவன்
யமுனாதீரவிஹாரி-கங்காதரன்
காளிங்கநர்த்தனன்-நடனசபாபதி
நரசிங்கமூர்த்தி-சரபமூர்த்தி
ராசலீலைபுரிந்தவன்-திருவிளையடல்புரிந்தவன்
அளிக்கும் அருளாளன்-அழிக்கும் ருத்திரன்
ஹிரண்யசம்ஹாரன்-கஜசம்ஹாரன்
கருடவஹனன்-நந்திவாஹனன்
வைகுண்ட ஏகாதசிநாயகன்-சிவராத்திரிநாயகன்
குசேலனுக்கு பொருள் தந்தவன்-தருமிக்கு பொற்கிழி ஈந்தவன்
சபரிக்கு முக்தி ஈந்தவன்-காரைக்கால் அம்மைக்கு முக்தி ஈந்தவன்
மண்ணை அளந்தவன்-மண் சுமந்தவன்

S. ஹரிஹரன்
13 COM T

சிவவாக்கியர் பாடல்

ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய
ஓம் நமசிவாய ஓம் ஓம் நம்சிவாய;

சரியை விலக்கல்

ஓடி ஓடி ஓடி ஓடி உட்கலந்த ஜோதியை
நாடி நாடி நாடி நாடி நாட்களும் கழிந்து போய்
வாடி வாடி வாடி வாடி மாண்டுபோன மாந்தர்காள்
கோடி கோடி கோடி கோடி எண்ணிறைந்த கோடியே (ஓம்)

ஞான நிலை

என்னிலே இருந்த ஒன்றையான் அறிந்ததில்லையே
என்னிலே இருந்த ஒன்றையான் அறிந்து கொண்டபின்
என்னிலே இருந்த ஒன்றையான் காணவல்லரோ
எனெனுலே இருந்திருந்து யான் உணர்ந்து கொண்டனே (ஓம்)

இதுவுமது

நனதேது நீயதேது நடுவில் நின்றதேதடா
கோனதேது குருவதேது கூறிடும் குலாமரே
ஆனதேது அழிவதேது அப்புறத்தில் அப்புறம்
ஈனதேது ராம ராம ராமவென்ற நாமமே (ஓம்)

யோக நிலை

அஞ்செழுத்திலே பிறந்து அஞ்செழுத்திலே வளர்ந்து
அஞ்செழுத்தை ஓதுகின்ற பஞ்சபூத பாவிகாள்
அஞ்செழுத்திலோர் எழுத்து அறிந்துகூற வல்லீரேல்
அஞ்சல் அஞ்சல் என்று நாதன் அம்பலத்தில் ஆடுமே (ஓம்)

விராட் சொரூபம்

இடதுகண்கள் சந்திரன் வலது கண்கள் சூரியன்
இடக்கை சங்குசக்கரம் வலக்கை சூலமான்மழு
எடுத்தபாதம் நீள்முடி எண்திசைக்கும் அப்புறம்
உடல்கலந்து நின்ற மாயம் யாவர்க்காண வல்லரோ (ஓம்)

தெய்வ சொரூபம்

உருவுமல்ல வெளியுமல்ல ஒன்றைமேவி நின்றதல்ல
மருவுமல்ல காத மல்ல மற்றதல்ல அற்றதல்ல
பெரியதல்ல சிறியதல்ல பேசுமாவி தானுமல்ல
அரியதாகி நின்றைநேர்மை யாவர்க்காண வல்லரே (ஓம்)

தேக நிலை

மண்கலங் கவிழ்ந்தபோது வைத்து அடுக்குவார்
வெண்கல்ங் கவிழ்ந்தபோது வேணுமென்று பேணுவார்
நண்கல்ங் கவிழ்ந்தபோது நாறுமென்று போடுவார்
எண்கலந்து நின்றமாயம் என்னமாயமீசனே (ஓம்)

அட்சர நிலை
ஆனவஞ் செழுத்துளே அண்டமும் அகண்டமும்
ஆனவஞ் செழுத்துளே ஆதியான மூவரும்
ஆனவஞ் செழுத்துளே அகாரமும் மகாரமும்
ஆனவஞ் செழுத்துளே அடங்கலாவ லுற்றதே (ஓம்)

இதுவுமது
நினைப்பதொன்று கண்டிலேன் நீயலாது வேறிலை
நினைப்புமாய் மறப்புமாய் நின்றமாய்கை மாய்கையை
அனைத்துமாய் அகண்டமாய் அனாதி முன் அனாதியாய்
எங்க்குள் நீ உனக்குநான் இருக்குமாருளங்ஙனே

ஞான நிலை
பண்டுநான் பறித்தெறிந்த பன்மலர்கள் எத்தனை
பாழிலே செபித்துவிட்ட மந்திரங்கள் எத்தனை
மிண்டராய்த் திரிந்தபோது இரைத்தநீர்கள் எத்தனை
மீளவும் சிவாலயங்கள் சூழவந்தது எத்தனை (ஓம்)

ஞானம்
அம்பலத்தை அம்புகொண்டு அசங்கென்றால் அசங்குமோ
கம்பமற்ற பாற்கடல் கல்ங்கென்றால் கல்ங்குமோ
இன்பமற்ற யோகியை இருளும்வந் தணுகுமோ
செம்பொன் னம்பலத்துளே தெளிந்த சிவாயமே(ஓம்)

அட்சர நிலை
அவ்வெனும் எழுத்தினால் அகண்டம் ஏழுமாகினாய்
உவ்வென்னும் எழுத்தினால் உருத்தரித்து நின்றனை
மவ்வெனும் எழுத்தினால் மயங்கினார்கள் வையகம்
அவ்வும் உவ்வும் மவ்வுமாய் அமர்ந்ததே சிவாயமே (ஓம்)

பிரணவம்
மூன்று மண்டலத்திலும் முட்டினின்ற தூணிலும்
நான்றபாம்பின் வாயினும் நவின்றெழுத்த அட்சரம்
ஈன்றதாயும் அப்பரும் எடுத்துரைத்த மந்திரம்
தோன்றுமோர் எழுத்துளே சொல்ல வெங்குதிலையே (ஓம்)

பஞ்சாட்சர மகிமை
நமச்சிவாய அஞ்செழுத்தும் நிற்க்குமே நிலைகளும்
நமச்சிவாய மஞ்சுதஞ்சும்பு ராண மானா மாய்கையை
நமச்சிவ்வாய அஞ்செழுத்தும் நம்முள்ளே இருக்கவே
நமசிவ்வாய உண்மையை நங்குரைசெய் நாதானே (ஓம்)

கடவுளின் உண்மை கூறல்
இல்லை இல்லை இல்லை இல்லை என்று இயம்புகின்ற ஏழைகாள்
இல்லையென்று நின்றஒன்றை இல்லை என்னலாகுமோ
இல்லையல்ல என்றுமல்ல இரண்டும் ஒன்றி நின்றதை
எல்லைகண்டு கொண்டோரினிப் பிற்ப்பதிங்க் கில்லையே (ஓம்)

இராமநாத மகிமை
கார கார கார கார காவல் ஊழிக்கரவலன்
போர போர போர போர போரில் நின்ற புண்ணியன்
மார மார மார மார மரங்கள் ஏழும் எய்த
ராம ராம ராம ராம ராம என்னும் நாமமே (ஓம்)

அத்துவிதம்
விண்ணிலுள்ள தேவர்கள் அறியொணாத மெய்ப்பொருள்
கண்ணில் ஆணியாகவே கலந்துநின்ற எம்பிரான்
மண்ணிலாம் பிறப்பறுத்து மலரடிகள் வைத்த பின்
அண்ணலாரும் எம்முளே அமர்ந்து வாழ்வதுன்மையே (ஓம்)

அம்பலம்
அகாரமான தம்பலம் அனாதியான தம்பலம்
உகாரமான தம்பலம் உண்மையான தம்பலம்
மகாரமான தம்பலம் வடிவமான தம்பலம்
சிகாரமான தம்பலம் தெளிந்ததே சிவாயமே (ஓம்)

பஞ்சாரட்சரம்
உண்மையான மந்திரம் ஒளியிலே இருந்திடும்
தண்மையான மந்திரம் சமைந்த ரூபமாயே
வெண்மையான மந்திரம் விளைந்து நீறதானதே
உண்மையான மந்திரம் தோன்றெளமே சிவாயமே (ஓம்)

ஓம் நமசிவாயமே உணர்ந்துமெய் உணர்ந்துபின்
ஓம் நமசிவாயமே உணர்ந்துமெய் தெளிந்தபின்
ஓம் நமசிவாயமே உணர்ந்துமெய் தெளிந்தபின்
ஓம் நமசிவாயமே உட்கலந்து நிற்குமே (ஓம்)

ஜீவிதுஷன்
10 " C "

With Best Compliments From :

Sankavi Jewellery

සංකවි

சங்கவி

Genuine 22Kt Gold Jewellery

No. 4/A, Vauxhall Street, Colombo - 02. Tel : 2472762 Mob : 077-3051412

Concept of Hinduism and its Philosophy

The philosophy of Hinduism has the depth and extent that cannot be delved into nor traversed in a lifetime. It has in its fold many faces as would be necessary to benefit all mankind in its lifetime and to enable those who wish to discover the truth, which is God. It speaks of rules to follow, the path to take and life to lead to benefit the fruits of lifetime on earth spiritually be elevated to join God in union.

To gain this unbounded peace the enlightened sat in meditation to find answers to their own questions. Their concentration brought them the answers which were revealed to them by God. These says in turn revealed this knowledge to those who listened to them to answer the money questions in their own minds to experience the obsolete ultimate peace that comes only through the union of man with God.

Hinduism is based on these teachings, which God had revealed to these says who were known as Rishis. Rishis are holy men of pure mind and thoughts. Their hearts are pure and free from wickedness. The knowledge of God which was placed in their mind as a gift was called the Veda.

The word 'VEDA' means "KNOWLEDGE' the true divine knowledge which is the highest wisdom basis of Hinduism. This 'Veda' which was written in the oldest scriptures in the world was transferred by word of mouth from teacher to disciple. It is the most important scripture of Hinduism and Hindus take their directives from these Vedas.

Sage Vyasa who was later known as 'Veda Vyasa' organized this knowledge and divided into four main parts such as the Rig Veda-called the Veda of verses, Yajur Veda-knowledge of rites or sacrificial texts, Sama Veda-knowledge of chants or songs derived from Rig Veda and Atharva Veda-knowledge given by atharvan the mythical priest.

The Upanishads contain the essence of the Vedas and were retold for the easier understanding of the Philosophical teaching of the ultimate spiritual truth of Vedas.

"Life is a perennial scratch for truth
The restless swan-the human soul-
Is on the journey infinite to find the truth"

Hinduism has no founder, nor was it based on teachings of any preacher. In Hinduism principles of life with rituals and rules extends itself to all people and at all situations with Vedic authority to lead a fruitful life. Belief and faith in god is on important part of the Hindu religion. God made this world and there is a divine power called god that controls the actions of the world. This is the faith which was revealed by the sages and followed by us until now.

Even though we have got different types of prayers, worshipping methods and places, gods, Vedic chants , our religion is not a mere thing of these. It preaches us the ultimate divine truth of love and when we understand this basic it would eliminate deception, greed, jealousy and such attitudes that hinder the development of one's humaneness and respect for human values and sustain life.

Behave with others as you would with yourself.
Look upon all the living beings as your friends,
For in all of them there resides one soul.
All are but a part of the Universal soul.
A person who believed that all are his soul mates
And loves them all alike
Never feels lonely
Then divine qualities of forgiveness,
Compassion and service will make him
Lovable in the eyes of all.
He will experience intense joy
Throughout his life.

(Yajur.40.6)

Thank you.

Bibliography:

The Indian Theogony_ Sukumari Bhattacharji
The Holy Vedas_ Pordit Satyakam Vidyalonkar

V.Vithushan
12 MSE

With Best Compliments From :

Kay Jay Traders

Dealers in Empty Plastic Barrels & Steel Barrels, Tins, Cans, Crown Cork, Cork, Plastic Caps, R.O.P.P

No. P-187C, Central Road,
Colombo - 12.
Tel : 011-5764958

நல்வினை,தீவினை

சிவபெருமான் எல்லா உயிர்களுக்கும் பரம தந்தையாவார்.ஆகயால் மற்ற உயிர்கள் எல்லாம் நமக்கு சகோதரங்களாகும்.இவ்வாரு இருந்தும் நாம் சில உயிர்களை வருத்துகின்றோம்.சிலவற்றை கொலை செய்கின்றோம்.நாம் இவ்வாறு செய்வதற்க்கு காரணம் நமது ஆசையே ஆகும்.ஆசையானது எல்லையை கடக்கும் போது நாம் செய்வது தீவினையாகும்.வினைகள் இருவகைப்படும்.அவை நல்வினை, தீவினை என்பன.உலக இன்பத்தை கெடுத்து ஆன்ம நலத்தைக் கெடுக்கும் செயல்கள் தீவினை எனப்படும்.ஆசை,கோபம்,செருக்கு,பொறாமை,நீதியீனம்,வன்சொல் முதலியன தீவினைகளாகும்.

தீவினை செய்தோர் இம்மையிலும் மறுமையிலும் துன்பத்தை அடைவர்.குருடர்செவிடர்,முடவர்,அங்கவீனர்,நோயால் வருந்துவோர் முதலானோர் முற்பிறபில் தீவினை செய்தவராவர்.நாம் தீய செயல்களைச் செய்யாதவாறு ஒழுகுதல் வேண்டும்.இளமைப் பிராயத்தில் இதனை மேற்கொள்ளுதல் எளிது. நேர்மை, சத்தியம், அடக்கம், மன உறுதி,மனத்திருப்தி ஆகிய நற்பண்புகளை நடோறும் கைக்கொண்டு ஒழுகுதல் மிக இன்றியமையாதது.அவ்வாரு கைக்கொண்டு ஒழுகிவருவோமாயின் நாம் தீவினைகளைச் செய்யமாட்டோம்.

பெற்றோர்க்குக் கீழ்ப்படிதல், நீதி நூலகளை கற்றல், அடியார் சரித்திரங்களை வாசித்தல்,ஆசிரியர், குரு முதலியோருக்கு பணிந்து நடத்தல்,பிற உயிர்களுக்கு இறங்குதல் ஆகியன தீவினை புரியாதிருக்க துணையாகும். அல்லும் பகலும் ஈசனை வணங்கிப் பணிந்து நடத்தலே தீவினையினின்று நீங்குதற்குச் சிறந்த சாதனமாகும்.

ஆணவத்தை அடக்கி ஆன்மாவுக்கு நன்மை பயக்கும் செயல்களைப் புரிதல் நல்வினைகளாகும்.நல்வினை செய்பவர்கள்,இம்மையிலும் மறுமையிலும் இன்பத்தை எய்துவர்.நாம் செய்யும் நல்வினைகள் நமக்கு நல்ல பலனை கொடுக்கும். தீய செயல்கள் புரிவோமாயின் அவை துன்பத்தை கொடுக்கும்.இவ்வினைகள் மனம்,மொழி,மெய் எனும் மூன்றினாலும் செய்யப்படும்.கடவுள் வழிபாடு,ஏழைகளுக்கு இரங்குதல்,பிறர் பிழை பொருத்தல்,இன்சொல்,நற்போதனை புரிதல் ஆகியன நல்வினைகளாம்.

நாம் நாள் தோறும் நல்வினை செய்து வருவோமாயின்,அதிலுள்ள பற்று மேலும் ஓங்கும்.அப்போழுது ஆணவம் வழிமை குன்றும். உண்மையறிவு உண்டாகும்.இறைவன் திருவருள் பாலிப்பான்.ஆதலின், நாம் தீவினைகளை ஒழித்து, நல்வினைகளை செய்து வருவோமாக.

"நன்மை கடைப்பிடி"தீவினையகற்று"
பொல்லாங்கென்பவை யெல்லாந் தவிர்"

A.சஞ்சயன்
8 " C "

With Best Compliments From :

MODERN HARDWARE CENTRE

IMPORTERS, DEALERS
&
STOCKIEST OF IRON AND STEEL

43, ABDUL JABBAR MAWATHA,

COLOMBO - 12, SRI LANKA.

TEL : 2435468 (Hunting)

FAX : +94 11 2431890

E-MAIL : modern43@sltnet.lk

சீவரத்தி
2010

ஓங்காரமும் அறிவியலும்

"வாழ்க்கை என்னும் பயணத்தை – வாழ
நெறிமுறைகள் வேண்டுமப்பா!
நெறிமுறைகளை மேம்படுத்த
சைவம் என்னும் வேண்டுமப்பா"

வாழ்க்கை என்பது சமுத்திரத்தின் மீது செய்யும் பயணம். வாழ்க்கையை சிறப்புடன் வாழ நெறிமுறை எனும் படகை செலுத்துகிறோம். நெறிமுறை எனும் படகை செலுத்த சைவம் எனும் துடுப்பை பயன்படுத்த வேண்டும்.

'கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திற்கும் முன் தோன்றிய எங்கள் மூத்த தமிழ் மொழியோடு சேர்ந்து உருவாகி, பின்னிப் பிணைந்து, தழைத்து ஓங்கி வளர்வதே சைவ சமயம்' ஆகும். ஆகவே தமிழ்த்தாய்க்கும், சைவத்திற்கும் எனது வணக்கங்களை தெரிவித்துக் கொண்டு எனது இந்த அநுபவக் கட்டுரையை ஆரம்பிக்கின்றேன்.

"ஒரு சமயம் என்றால் என்ன?" என்ற கேள்விக்கு பலரது பதில் "பூஜை புனஸ்காரங்களைச் செய்தல், பலியிடல், கடவுளை வங்குதல்,..." என்பதாகவே உள்ளது. ஆனால் சமயம் அதோடு மட்டும் நின்றிடாது. "எமது அன்றாட வாழ்க்கையை சீராகவும், சிறப்பாகவும், திட்டங்களுடனும் செய்வதற்கு உதவும் ஒரு வாழகாட்டியே சமயம் ஆகும்." ஆனால் எமது சைவ சமயம் அதைவிட ஒருபடி மேலே உள்ளது. "எமது அன்றாட வாழ்க்கையில் அறியாமையை விலக்கி அறிவியலை ஊட்டி சமயத்தை மேம்படுத்தும் சமயமே சைவமாகும்."

இருபத்தோராம் நூற்றாண்டிலே கண்டுபிடிக்கப்படும் விஞ்ஞான விந்தைகள் கிறிஸ்துவுக்கு முன் எழுதப்பட்ட புராணக் கதைகளிலேயே கண்டுபிடிக்கப்பட்டு இருந்தன. உதாரணமாக எடுத்துக்கொண்டால் ஆயிரத்து எண்ணூற்று ஐம்பதுகளில் கண்டுபிடிக்கப்பட்ட கூர்ப்பு விதியானது, பரம்பரை பரம்பரையாக, வம்சம் வம்சமாக, கூறப்பட்டுவரும் விஷ்ணுவின் ஏழு அவதாரங்களில் ஏற்கனவே குறிப்பிடப்பட்டு விட்டது.

உண்மையான கூர்ப்பு விதியின்படி விலங்குள் யாவும் கடலிருந்து தோன்றியமைக்கு ஆதாரமாக முதலாவது அவதாரமான மீன் அவதாரம் காணப்படுகின்றது. கடலிலிருந்து விலங்குகள் தரைக்கு இடம்பெயர்ந்தமை வாமன அவதாரமாக (ஆமை) சைவசமயம் முற்கூட்டியே குறிப்பிடுகின்றன. கடல் வாழ் விலங்குகள் தரைக்கு ஏற்றவாறு இசைவாக்கம் அடைந்தமை மூன்றாவது அவதாரமான நரசிம்ப அவதாரம் எடுத்துக்காட்டுகின்றன.

அதன்பின் ஆதிமனிதனின் அறிவையும், உருவத்தையும், வேடராக வாழ்ந்ததையும் சுட்டிக்காட்டுகின்றது, பரசுராம அவதாரம். அதன்பின் வந்த இடையர் வாழ்க்கையை செல்கிறது, கண்ணனின் அவதாரம். இந்தப் பண்டைய அவதாரங்களிலிருந்தே சைவம் எவ்வளவு முற்போக்கானது என்பதை அறிந்து கொள்ளலாம்.

இவ்வாறாக விஞ்ஞானத்துடன் பின்னிப் பிணைத்திருக்க சைவத்தின் ஒவ்வொரு கலாச்சார, சடங்கு, வணக்கமுறைகளிலும் ஆழ்ந்த விஞ்ஞானத் தத்துவங்கள் புதைந்துள்ளன. நெற்றியானது மூளையின் முக்கியமான பாகமொன்றாகும். நெற்றியை எந்நேரமும் குளிர்ச்சிகரமாக வைக்கவே வெண்நிறமான திருநீற்றை இந்து மக்கள் அணிகின்றனர், என்று விஞ்ஞான பூர்வமாகவும் கூறலாம்.

விநாயகக் கடவுளுக்காக நெற்றியில் ஐந்து அல்லது மூன்று முறை குட்டுவதில் வணக்க முறையோடு, வைத்தியச் சிந்தனையும் ஊறியுள்ளது. நெற்றியின் இரு புறமும் குட்டுவதால் நாடி, நாளக் கலங்களில் தடைஇன்றி இரத்தம் ஓடவழிவகுக்கும். சைவ சமய ஆசிரியரிலிருந்து, கோயில் குருக்கள் வரை கூறும் அறிவுரை இதுவாகும். மேலும் சைவ சமயத்தில் குறிப்பிடப்படும் முக்கியமானதோர் விடயம் யோக பயிற்சியாகும். இதனால் உடலில் இரத்த ஓட்டமும் மனதில் அறிவு ஓட்டமும் சிறப்படையும் என்பது பெரியோர்களின் மொழி ஆகும். அதோடு மட்டும் இல்லாது மன ஒருமைப்பாடும், எளிமையும், ஆக்கச் சிந்தனையும் ஏற்படும் என்பது திண்ணம்.

விரதம் என்பது 'உணவை விடுத்து மன ஒருமைப்பாட்டால் இறைவனை வணங்குதலுமாகும். மேலும் அட்டாங்க நமஸ்காரம், பஞ்சாங்க நமஸ்காரம், அங்கப் பிரதட்சணம் என்பற்றையும் விரதத்தோடு சேர்த்து செய்தால் உடலின் சகல பாகங்களுக்கும் இரத்தம் தடையின்றி செல்லும் என்பது விஞ்ஞானத் தத்துவம், பிராணயாமம் எனும் வணக்க முறையானது ஒரு மூக்கால்வளியை உள்ளெடுத்து மற்றைய மூக்கால் வெளிவிடல் ஆகும். இதனால் எமது சுவாசப்பாதை சுத்தம் அடைந்து சுவாசம் சிரமமின்றி நடைபெறுகின்றது.

சைவ மக்களின் வாழ்க்கையில் காணப்படும் கிரியைகள் மனிதனின் மனதைக் கட்டுப்படுத்தி ஒரு ஒழுங்கு முறையைஎமது வாழ்வில் விதைக்கின்றது. கோள்கள் யாவும் சூரியனையே சுற்றி வருகின்றது என்ற கப்லரின் கோட்பாட்டிற்கு முன்பே சூரியனை மையமாகக்கொண்ட நவகிரக பூஜைகள் ஆலயங்களில் நடைபெற்று வந்தன. முற்போக்கான சைவ ஞானிகள் அருணகிரிநாதர் போன்றோர் பல முக்கியமான விஞ்ஞானத் தத்துவங்களை சைவத்தின் மடியில் சமர்பித்து நியூட்டன், ஐன்ஸ்டைன் போன்றவர்களை விஞ்சி விட்டனர். இந்தயாவில் கட்டப்பட்டு இருக்கும் சைவசமய ஆலயங்கள் சில ஒலி அலைகளை ஓர் இடத்திலிருந்து இன்னோர் மண்டபத்திற்கு தெறிக்க வைத்து விஞ்ஞானிகளை வியப்பில் ஆழத்துகின்றது.

இவ்வாறான சைவ விஞ்ஞான தத்துவங்களை 'இன்றும்' ஏன்? 'என்றும்' அறிஞர்களால் கண்டுபிடிக்க முடிவதில்லை. ஆகவே, 'சைவத்தின் சிந்தனைகளை புறக்கணிக்காமல், மதிப்பளித்து, கடைப்பிடத்து நன்மையும் நலனும் பெற்று வாழ்ந்து வையகத்தில் சைவத்தை நிலை நாட்டுவோமாக' என்று கூறி அனைவருக்கும் தமிழுக்கும் சைவத்திற்கும் நன்றி கூறி விடை பெறுகிறேன்.

T.மயூரன்
7 "C"

சுவாமி துரியானந்தரின் ஆத்ம சிந்தனைத் துளிகள்

இச் சிந்தனைத் துளிகளின் படி நாமும் நடப்போமானால் மன அமைதியுடன் வாழ்க்கையில் முன்னேறலாம்.

- இறைவனே அவனது இச்சை இன்னதென்று அறிவான். அது எமது அறிவுக்கு எட்டாத ஒன்று.

  இறைவனே எல்லா நலன்களுக்கும் இருப்பிடம் என்பதே சாஸ்திரங்கள் மற்றும் ஞானிகளின் வார்த்தைகளிலிருந்து நாம் அறிவது.

  கொடியதாகவும், புரியாததாகவும் காணப்படுவதிலிருந்தும் இறைவன் நல்லதை வெளியே கொண்டு வருகிறான். இந்தக் கருத்தில் ஒருவனுக்கு உறுதியான நம்பிக்கை இருக்குமானால் அவன் சாந்தி அடைகிறான். இல்லாவிட்டால் தவிர்க்க இயலாத அமைதியின்மையையும் கஷ்டத்தையும் தான் ஒருவன் அனுபவிக்கின்றான்.

- எல்லாவற்றையும் இறைவனிடம் அர்ப்பணித்துவிடு

  மனைவி, மகன், மகள் அனைவரும் இறைவனுக்கு உரியவர்களே, உன்னுடைய கடமை அவர்களைப் பாதுகாப்பது மட்டுமே இந்த நினைவு எப்போதும் உன் மனதில் இருக்கவேண்டும்.

- எரிபொருள் இல்லாவிட்டால் நெருப்பு அணைந்து போவதைப் போல காமமும் ஒருவனை விட்டு நீங்குகிறது. அதற்கு நீ இன்ப அனுபவங்களைத் தராமல் போனால் அது உன்னை விட்டு விலகிப் போய்விடும்.

  காமம் தலை தூக்கும் போது இறைவனிடம் பிரார்த்தனை செய். அவனது உதவிக்காகக் கதறி அழு, பிறகு காமம் தலை தூக்காமல் இருப்பதை நீ அறியலாம்.

  இறைவனை வழிபடுத்துவதான் மிகவும் முக்கியமான விடயம். இதை நீ செய்வாயானால் நாக்கையும் மற்ற புலன்களையும் கட்டுப்படுத்துவதற்கு தனியாக நீ முயற்சி செய்ய வேண்டியதில்லை. அவை தானகவே கட்டுப்படுத்தப்படும்.

- உன்னை நீ பலவீனமானவர் என்று ஒருபோதும் நினைக்காதே. நீ பலவீனமானவனாக இருக்கலாம். ஆனால் நீ யாரைச் சரணடைந்திருக்கிறாயோ அந்த இறைவன் சர்வ சக்திமான். அவருடைய எல்லையற்ற ஆத்ம சக்தியால் உன்னை சக்திமானாக நினைத்துக்கொள்.

  இறைவனே தனக்கு சகலமும் என்று முழுமையாக உணர்ந்து கொள்பவன் தனது உள்ளத்திலிருந்து மிகவம் உயர்ந்த வலிமைப் பீறிட்டுக் கிளம்புவதை உயர்கின்றான்.

- எல்லாப் பிரச்சினைகளுக்கும் மூல காரணம் மனம்தான் மனம் கோணலாக இருக்குமானால் எல்லாம் எதிரிடையாக இருக்கின்றன.

  "மனமும் வார்த்தையும் ஒன்று போலவே இருக்குமானால், எல்லா ஆன்மீகச் சாசனைகளிலும் வெற்றி காணலாம்." என்று ஸ்ரீராம கிருஷ்ணர் கூறுவது வழக்கம்.

  மனதையும் வார்த்தைகளையும் ஒன்றுபடச் செய்வது என்பது மிகவும் உயர்ந்த ஆன்மீகச் சாதனையாகும்.

  உள்ளும் புறமும் ஒன்று படாதபோதுதான் எல்லாத் தொந்தரவுகளுக்கும் அமைதியின்மையும் ஏற்படுகின்றன.

  ஜபம் செய்யும்போது, இறைவனது நாமமும் ஒன்றே என்ற எண்ணத்துடன் இறையுணர்வில் மூழ்கியிருக்கவேண்டும்.

  ஒருவரது பெயரை உச்சரிக்கும் போது அவரது உருவம் தோன்றுகின்றது. அதுபோல் இறைவன் நாமத்தை ஜபம் செய்யும்போது அவனது உருவத்தையும் நினைவில் கொள்ள வேண்டும்.

- இறைவனை அடைய வேண்டும் என்ற அருள் தாகம் நல்லது என்றாலும், மனம் அமைதி அடையவில்லை என்று பொறுமை இழப்பதும், மனமுடைந்து போவதும் நல்லதல்ல.

  இறைவனை அடைய வேண்டும் என்ற அருள் தாகம் எமக்கு வாய்த்திருந்தால் அதன் பொருட்டு நம்மைப் பாக்கியசாலிகளாகக் கருதிக் கொள்ளவேண்டும்.

  ஏனென்றால் மன அமைதியின்மையும் காரணமாக ஆன்மீகப் பாதையிலிருந்து தவறிவிடக் கூடிய வாய்ப்பு இருக்கிறது.

T. பிரியதர்ஷன்
2010 A/L வர்த்தகப்பிரிவு
பிரதான இதழாசிரியர் 2009/2010

சிவசின்னங்கள்

சைவசமயத்தவர் ஒவ்வொருவரும் அணிய வேண்டிய சிவசின்னங்களுள் விபூதி, உருத்திராக்கம் என்னும் இரண்டுமாகும். அவற்றிலே நாள்டோறும் அணியப்படுவது விபூதியாகும்.

விபூதி என்ற சொல்லின் பொருள் மேலான செல்வம் ஆகும். வி-மேலானது. பூதி – செல்வம். இங்கு மேலான செல்வம் என்பது முக்கிய பேற்றைக் குறிப்பதாகும். விபூதிக்கு திருநீறு, பசுமம், பசிதம், இரட்சை என்னும் பெயர்களும் உண்டு. பாவங்களை நீக்கி முத்திச் செல்லத்தை கொடுப்பதால் விபூதிக்கு திருநீறு என்னும் பெயர் வழங்கப்படுகிறது. பசுமம் என்பதன் பொருளும் அதுவாகும். சிவஞானத்தை விளக்குவது பசிதம். ஆன்மாக்களை துன்பத்திலிருந்து விடுவிப்பதால் இரட்சை எனப்படும். பசுவின் சாணத்திற்கு அக்கினி இட்டு நீறாக்கப்பட்டதே விபூதியாகும். வெண்மையான விபூதியே அணியத்தக்கது. வெண்மை தூய்மையின் அறிகுறியாகும். இத்தகைய விபூதியை நல்ல பாத்திரம் ஒன்றில் மல்லிகை, முல்லை முதலான நறுமணப்பூக்களை இட்டு வைத்திருத்தல் நன்று.

விபூதி இரண்டு விதமாக அணியப்படும். ஒன்று உத்தூளனம் மற்றையது திரிபுண்டரலம். ஊத்தூளமாவது விபூதியை நெற்றியில் பரவிப் பூசுதலாகும். எல்லோரும் இவ்வாறு விபூதி அணியலாம். திரிபுண்டரம் என்பது விபூதியை மூன்று குறிகளாக பூசுதலாகும். திரி-மூன்று புண்டரம் - குறி, சமயதீட்சை பெற்றவர்கள் மாத்திரமே இவ்வாறு அணியத் தகுதியுடையோர், ஆவர். விபூதியை அணியும் போது வடக்கு அல்லது கிழக்கு நோக்கி நின்று நிலத்தில் சிந்தா வண்ணம் அண்ணார்ந்து "சிவசிவ" என்று சொல்லித் தரித்தல் வேண்டும். குரு, சிவனடியார் முதலானோரிடமிருந்து பெறும் விபூதி தெய்வீகத்தன்மை பொருந்தியது. தினந்தோறும் விபூதி அணிவதால் இறையுணர்வு ஏற்படும். காலை, நண்பகல், மாலை ஆகிய மூன்று வேளைகளிலும் கடவுள் வழிபாட்டிற்கு முன்னும் உண்பதற்கு முன்னும் பின்னும், நித்திரைக்கு முன்னும் நீராடிய உடனும் விபூதி அணியவேண்டும்.

சிவசின்னங்களுள் உருத்திராக்கமும் ஒன்று, சிவபிரானின் இரக்கத்தின் அடையாளமாக இது விளங்குகிறது. உருத்திரன் சிவபிரான் அக்கம் - கண்ணீர். உருத்திராக்கம் அணிவோர் சிவபிரானின் கருணைக்கு உரியராவர். உருத்திராக்கம் இமய மலையிலுள்ள ஒரு வகைத் தேவ விருட்சத்திலிருந்து பெறப்படுகிறது. உருத்திராக்கங்களில் ஒரு முகமணி முதல் 16 முகமணி வரை பல வகைகள் உள. ஒவ்வொரு முகமணிக்கும் ஒவ்வொரு அதிதெய்வம் உண்டு.

உருத்திராக்கத்தை தனியாகவும் அணியலாம். உருத்திராக்கத்தை சிவமந்திரச்செபம், சிவபூசை, சித்வத்தியானம், ஆலய வழிபாடு, சந்தியா வந்தனம், திருமுறைப் பாராயணம், புண்ணிய தீர்த்தமாடல். விரதம் அனுட்டித்தல், புராண படனம், சிரார்த்தம் ஆகியவை செய்யும் காலங்களில் அணிய வேண்டும். நித்திரை கொள்ளல், மலசலங்கழித்தல் தீட்டு ஆகியவற்றிற்குரிய நேரங்களில் உருத்திராக்கம் அணிதலாகாது.

N.செந்தூரன்
6 "D"

WITH BEST COMPLIMENTS FROM :

New

Ramani Jewellery

රමණී ජුවලරි

ரமணி ஜுவலரி

Genuine 22Kt Gold Jewellery

1108, Maradana Road,
Borella, Colombo - 08.
Tel : 0112-667131

தசாவதாரம்

1. மச்சாலதாரம் - மகாவிஷ்ணு எடுத்த முதல் அவதாரம் இது. இந்த அவதாரம் வேதங்களை அபகரித்துக்கொண்டு போய் கடலில் ஒளித்து வைத்திருந்த சோமுகாசுரனைக் கொன்றது; வேதங்களை மீட்டது. இந்த அவதாரத்திலேயே மகாப் பிரளயம் வர ஏழாவது மனுவும், சப்த ரிஷிகளும் மீன் உருக்கொண்டு தம் உயிர் பிழைத்திருக்க மற்ற எல்லா உலகங்களும் அழிந்து ஒழித்தன.

2. கூர்மவதாரம் - அமிர்த மதனத்தின் பொருட்டு மந்தரமலையைத் தாங்குமாறு விஷ்ணு எடுத்த ஆமை வடிவு, ஆதி கூர்மம், மலை அசைகலினால் தம் சொறி தீர்த்து நன்கு பிரபு தூங்கினாராம்.

3. வராக அவதாரம் - கற்பாந்திரத்திலே எல்லாப் பொருள்களும் தண்ணீரில் மூழ்கிப் போயின. அப்போது அந்த நீரின் மேல் ஆலிலை மேல் அறிதுயில் கொண்ட விஷ்ணு சுவேத வராகமாக உரு எடுத்து பூமியைக் கவர்ந்திருந்த இரண்யாட்சனைக் கொன்று அந்தப் பூமியைத் தன் கொம்பில் தாங்கி மேலே கொண்டு வந்து சேர்ந்துக் காத்தார்

4. நரசிம்ப அவதாரம் - இரண்ய கசிபனைக்கொன்று பிரகலாதனை இரட்சிக்கும் பொருட்டு கல்தூணில் அவதரிதத அவதாரம் இதுவே. கண்டத்தின் கீழே நரரூபமும், அதற்கு மேல் சிங்க ரூபமுமாதலால் இது நரசிங்க அவதாரம் எனப் பெயர் பெற்றது.

5. வாமன அவதாரம் - ஏழாவது மன்வந்தரத்தில், பிரகலாதன் பேரனாகிய பலிச் சக்கரவர்த்தி என்ற அசுரராஜன் பெருமாள் எடுத்த குள்ள அவதார புருஷருக்கு பூமியை ஓரடியால் அளக்கப் கொடுத்து விட்டான். மறு மன்வந்தரத்தில் இவன் இந்திர பதவி பெற்றான்.

6. பரசுராம அவதாரம் - ஜமத்கினி முனிவருக்கும் ரேணுகைக்கம் பரந்தாமன் பரசுராமன் என்ற பெயரில் பிறந்த அவதாரம் இது. இவர் உக்கிர தவம் செய்து சிவனிடம் அனேக திவ்யாஸ்திரங்களைப் பெற்றவர். இன்றும் மகேந்திர மலையில் சிரஞ்சீவியாகத் தவம் செய்கிறார் எனக் கூறுவர், திருமால் அவதாரத்தில் இது ஆறாம்.

7. இராம அவதாரம் - தசரத புத்திரனாக அயோத்தில் பிறந்து ஜனகன் மகள் சீதாவை மணந்து இராவணனை அழித்து அவதாரம்.

8. பலராம அவதாரம் - கோகுலத்தில் விஷ்ணுவின் அம்சமாக வசுதேவருக்கும் ரோகிணிக்கும் அவதரித்தவர் (இராமாவதாரத்தில் இலக்குவனாக இருந்து அரிய தொண்டாற்றிய காரணத்தால் இராமன் தனக்குத் தமையனாகக்

கிரஷ்ணாவதாரத்தில் இருக்கும்படி ஏற்ற அவதாரம் இது என்றும் கூறுவர்) வெண்ணிறத்தில் ஹரி தோன்றிய அவதாரம் பலராம அவதாரம்.

9. கிருஷ்ணா அவதாரம் - யதுகுதிலனாக கிருஷ்ணன் பிறந்து கம்சனை வதம் செய்த அவதாரம். கரு நிறத்தில் ஹரி தோன்றிய அவதாரம்

10. கல்கி அவதாரம் - முடிவில் யஷிஸ் என்ற பிராமணனுடைய மகனாக குதிரை முகத்தோடு தோன்ற இருக்கும் அவதாரம் இது.

S.A.S. சர்மா
8 "H"

With Best Compliments From :

SARAVANA HOTEL

Vegetarian Hotel

254, Messenger Street,
Colombo - 12,
Tel : 4593292
Mobile : 072-3256527

இரைதேடுவதோடு இறைவனையும் தேடு

ஔவையார் ஒரு சமயம் காட்டுவழியே நடந்து சென்றார். வழியில் ஒரு நாவல் மரத்தின் மீது ஒரு சிறுவன் அமர்ந்திருந்தான். அங்கு இளைப்பாற எண்ணிய ஔவையார் மரத்தடியில் அமர்ந்தார். ஔவையாரிடம் நல்ல பாடல்களைக் கேட்கவேண்டுமென்று முருகப் பெருமான் ஒரு மாடு மேய்க்கும் சிறுவனாக மரத்தில் அமர்ந்து காத்திருந்தான்.

அவனைப் பார்த்து "தம்பி என் பசி தீர சிறிது பழம் போடப்பா" என்று கேட்டார் ஔவை. சிறுவன் "பாட்டி, சுட்டபழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?" என்று கேட்டான். "சுடாத பழமே போடென்றார் ஔவை. சிறுவன் மரத்தை உலுக்க பழங்கள் மணலில் வீழ்ந்தன. கனிந்த பழங்களில் மணல் ஒட்டிக்கொண்டது. அவற்றைப் பொறுக்கிய ஔவையார், பழங்களில் மணல் ஒட்டியிருந்தமையால் அவற்றை வாயால் ஊதினார். இதைப் பார்த்த சிறுவன் "பாட்டி, சுடாத பழம் கேட்டுவிட்டு சுட்டப்பழத்தை எடுக்கிறாயே? என்று கேட்டான்.

'சுட்ட பழம்' என்பதன் பொருளை உணர்ந்த ஔவையார், ஒரு மாடு மேய்க்கும் சிறுவனிடம் தோற்றுவிட்டோமே என மனம் வருந்தினார். உடனே சிறுவனாக வந்து திருவிளையாடல் புரிந்த முருகன் தன் திருவுருவக் காட்சியை ஔவையாருக்கு அளித்தருளினான். முருகனைத் தரிசித்த ஔவை அளவற்ற ஆனந்தமடைந்தார். ஆவரிடம் தீந்தமிழ்ப் பாடல்கள் கேட்க இதுவே தக்க தருணம் என்று திருவுளம் கொண்டு அவரை மேலும் சோதிக்க "அரியது எது? பெரியது எது? கொடியது எது? இனியது எது?" என்று பல கேள்விகளின் விடையால் மகிழ்ந்த முருகப்பெருமான், மனித குலத்திற்கு அறிவு புகட்ட ஔவையாரின் புலமையை பயன்படுத்தினார் என்று தான் எண்ணத்தோன்றுகிறது. ஔவையை பாடம் புகட்டுவதற்குரிய கருவியாக பயன்படுத்தியிருக்கிறார் எம்பெருமான்.

"எழுவகையான பிறப்புக்களில்
மனிதராய்ப் பிறப்பது அரிது
மனிதராய்ப் பிறந்தாலும் எவ்வித ஊனமும்
இல்லாத நல் உடம்புடன் பிறப்பது அரிது.
அப்படிப் பிறந்தாலும் ஞானுமும்
கல்வியும் பெறல் அரிது
அதற்கு மேல் தானமும் தவமும்
செய்தல் அதனிலும் அரிது'

ஔவையார் அறிவுரைப்படி மனிதர் இவற்றை முறையாகப் பெற்றால் மட்டுமே விண்ணலக வாழ்வு கிட்டும். முக்கியமாகப் புண்ணியத்தின் மீதும் கடவுளின் மீதும் நம்பிக்கை கொண்ட தானமும் தவமும் செய்கிறார்கள் சிலர் கடவுள் ஏது? புவ புண்ணியம் ஏது? நரகம் சுவர்க்கம் ஏது? கண்ணில் காணாதவற்றை எல்லாம் ஏன் கற்பனை செய்து குழம்பவேண்டும். கண்ணால் கண்டு அனுபவிக்கும் இன்பமே

இன்பம் வேறு இன்பம் தனியாக ஒன்றுமில்லை என வாய் கூசாமல் பேசித் திரிகின்றர்கள்.

எமது உடலானது நாம் உட்கொள்ளும் உணவினாலானது. ஊடலை வளர்க்க உணவை மட்டும் உட்கொண்டால் போதுமா? உடல் உள்ளவரை பசியும் தாகமும் இருந்து கொண்டுதானிருக்கும். உடம்பை காப்பாற்ற அதன்மூலம் உயிரைக் காப்பாற்ற உணவு தேட வேண்டியது அவசியம். ஆனால் தேடும் போது தணுகரண புவன கோலங்களை கொடுத்தவர் யார்? என்று சிந்திக்க வேண்டாமா?

"இரை தேடுவதோடு இறைவனையும் தேடப்பா! அரிய மனிதப் பிறவியை வீணாக்கி விடாதே" என்கிறார்.

நிலம், நீர், காற்று நெருப்பு, ஆகாயம் ஆகியவற்றை நம் முன்னோர் தேடி வைத்தார்களோ? இவற்றின் கலப்பால் உண்டாகும் பொருள்களை நம் முன்னோர் செய்துவைத்தனரா? இவற்றை எல்லாம் நம் ஒருவராலும் செய்ய முடியாதென்பதை, கடவுள் இல்லை என்பவனும் ஒப்புக் கொள்வான். அப்படியானால் மனிதர்களுக்கு மேலான ஒரு பெரும் சக்தி அல்லவா அதைச் செய்திருக்க வேண்டும். அது காந்த சக்தியை போல, மின் சக்தியைப் போல, பழத்தின் சுவையைப் போல, மலரின் மணம் போல கண்ணுக்குத் தெரியாமல் இயங்குகின்றது.

கண்ணுக்குத் தெரியாத எத்தனையோ பொருள்களை அனுபவத்தாலும், அனுமானத்தாலும் ஏற்கிறோம். அவ்வாறே ஒவ்வொரு தொழிலையும் செய்ய வல்ல மாபெரும் சக்தியை உவமையிலா இறை என்று கூறுவதால் என்ன தவறு? "பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து" காத்து வரும் இறைவனை மறக்கலாமா? இரையை மட்டும் தேடுவது ஒன்றே ஏனைய உயிரினங்களின் இயல்பு. அந்த அளவே அவற்றிற்கு அறிவு அமைக்கப்பட்டுள்ளது. மனம் எதை சிந்திக்கும் அறிவான ஆறாவாது அறிவைப் பெற்ற மனிதனும் இரையை மட்டும் தேடிக் கொண்டிருக்கலாமா? இறைவனைத் தேட வேண்டாமா?

ஒவ்வொரு ஜீவனும் செய்யும் நல்வினையும் தீவினையும் இறைவனது ஆட்சியில் கணக்கு வைக்கப்படுகின்றன. இறைவன் தீர்பிலிருந்து யாரும் தப்பமுடியாது. ஈசனை மெய்யடியார் நறுமலர்கள் கொண்டு அர்ச்சனை செய்து அவன் பொருள் புகழ் சேர புகழைப்பாடித் சஜித்து இரு கரம் கூப்பி, பஞ்சாங்க அல்லது அட்டாங்க வணக்கம் செய்கின்றனர். அவர்கள் யாயாரென அறிந்து அவரது புண்ணிய செய்களை வரவு வைக்கிறான் இறைவன். புண்ணியத்தின் பயனாக இம்மையில் புகழும் செல்வமும், மறுமையில் சுவர்க்கமும் கிடைக்கின்றன.

தம் வாழ்நாளை வீணாக்கி, வெற்றுப் பேச்சுப்பேசி, சுவர்க்கத்திற்கு போய் வந்தவரை நீர் பார்த்ததுண்டா? என வாதம் செய்து இறைவனை ஒரு பொழுதும் நினைக்காமல் இருப்பவனையும், இறைவன் என்று ஒருவன் இல்லை என்று புறக்கணிப்பவர்களையும் இறைவன் தன் கணக்குப் புத்தகத்தில் நாள்தோறும் குறிப்பு வைக்கின்றான். அவர்கள்

செய்த நன்மை தீமைகளுக்கான பலனையும் தருகின்றான்.

இறைவனின் திருவடிக்குத் கரங்களால் மலர்களை அர்ச்சித்த வழிபடுவதுமில்லை, நாவால் திருநாமத்தை கூறுவதுமில்லை, தம் வாழ்நாள் முழுவதும் ஒரு வேலையை தவறாது செய்கிறார்கள் எனில், அது உடம்புக்கு இரை தேடும் வேலை தான்.

இரை தேடி உடம்பை வளர்த்துக் காத்து வந்தாரே, அதை அழியாமல் காக்க முடிந்ததா? அவரது உடம்பு காக்கைக்கும், கழுகுக்கும், நாய்க்கும், நரிக்கும், புழுவுக்கும், தீக்கும் இரையாகி விடுகின்றதே. இந்த உண்மையை உணர்ந்தாரா?

மனிதப் பிறவியாகப் பிறந்தவர்கள் எல்லாம் அருளாளர்கள் கூறும் வரைகளைக் கேட்டு "இரை தேடுவதோடு மட்டும் நின்றுவிடாது" இறைவனையும் தேடத் தலைப்படல் வேண்டும்.

S.அனுசன்
11 "D"

WITH BEST COMPLIMENTS FROM :

K. GOWDHAMAN
&
K. SABESHAN

மஹோற்சவம்

ஆலயங்களில் இடம் பெறும் கிரியைகள் நித்திய கிரியை, நையித்திய கிரியை, என வகைப்படுத்தப் படுகின்றன. இவற்றுள் நைத்திய கிரியை முக்கியத்துவம் பெறுகின்றது. இந்த வகையில் ஆலயங்களில் நிகழும் மஹோற்சவம் வருடமொரு முறை நிகழும் பெருங் கிரியைகள் ஆகும்.

மஹோற்சவமானது இறைவனின் ஐந்தொழில்களை நினைவூட்டுகின்றது. மகா உற்சவம் என்பது பெரிய, உயர்வான, படைத்தல் முதலிய காரியங்கள் எனப் பொருள்படும். திருவிழாக் காலங்களில் கொடியேற்றம் வரையுள்ள கிரியைகள் படைத்தலையும் வாகனத் திருவிழாக்கள் காத்தலையும், தேர்த் திருவிழா அழித்தலையும், மௌனோற்சவம் மறைத்தலையும், தீர்த்தோற்சவம் அருளலையும் குறிக்கும்.

உற்வங்களின் ஆரம்பித்தில் விக்னேஸ்வரர் பூஜையும் ஊர் நன்மை பெறுவதாற்காக "கிராம சாந்தி" செய்யப்படும். அதன் பின் வைக்கோல் தருப்பை முதலியவற்றால் செய்யப்பட்ட உருவம் ஒன்றை சிவாக் கிளியோடு சேர்த்து வீதி வழியே இழுத்து "வாஸ்து சாந்து" நடைபெறும். இதன் பின்னர் சுத்தமான புற்றுமண் எடுத்து உலகிலே தானிய விருத்திக்காக முளையிடுதல், விழாக்கள் இடையூறு இன்றி நிறைவேற வேண்டுமென ஆச்சாரியார் தமக்கும் உற்சவ மூர்த்திக்களுக்கும் காப்பு கட்டுதலும் நிகழும்.

மஹோசவ காலங்களில் ஆலயங்களில் வழிபாடானது தம்பம், விம்பம், கும்பம் என்ற அடிப்படையாக இடம். இத்துடன் சுற்றுப்பலி இடும் வழக்கமும் காணப்படும். அதாவது இச்சுற்றுவேலி இருத்தலின் நோக்கம் என்ன வென்றால் ஆலய உற்சவமானது இனிதாக நிறைவேறுவதற்காக காவல் தெய்வங்களாகிய அட்டதிக்குப் பாலகர்களை (இந்திரன், அக்கினி, யமன், நிகுதி, வருணன், வாயு, குபேரன், ஈசான்) திருத்திப் படுத்துவதே ஆகும்.

கொடியேற்றம்

விழாக்காலங்களில் ஆலயத்தில் கொடியேற்றம் ஆகம விதிக்குட்பட்டது. ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலர்களில் மூழ்கிக் கிடந்து உழலும் ஆத்மா திருவருள் பெற்ற பேராசானின் அருள் பெற பந்தம் - பாசம் என்பன நீக்க முற்ற நிலையினை அடைகின்றது. அதனால் பேரறிவு வடிவான பெரும் பொருளை அடைந்து இன்புறுகின்றது. இதனை விளக்கும் தத்துவக் குறியீடாக கொடியேற்றம் அமைந்துள்ளது. கொடிமரம் முதற் பொருளாகிய பதியினையும், கொடிக்கயிற்றிலை ஆற்றலையும், தரும்பைக் கயிற்றினை பாசமாகவும், கொடிச்சீலையில் எழுதப்பட்ட உருவம் (இடம், சிம்மம்) உயிரின் குறியீடாக அமைகின்றது.

இரதோற்சவம்.

மஹேற்சவ காலங்களில் இடம்பெறும் முக்கிய உற்சவம் இரதோற்சம் (தேர்த் திருவிழா) ஆகும். இறைவன் தனது அழித்தல் தொழிலை மேற்கொள்ளகின்ற தன்மையினை எடுத்துக் காட்டுவதேயாகும். இப் பிரபஞ்சத்தில் ன்மாக்களைப் பீடித்துள்ள மலர்களை செயலிழக்கச் செய்கின்ற தத்துவத்தை எடுத்துக் காட்டுவதற்கே இரதோற்சம் இடம்பெறுகின்றது. இரதோற்சவத்தின்போத இறைவன் ஆவேசத்துடன் இரதத்தில் எழந்தருளி பவனிவரும் போது அக்காட்சியினை அடியார்கள் கண்டு களித்து உள்ளம் தூய்மை அடைகின்றது. இறைவன் ரதத்தின் மீது எழுந்தருளி வலம் வந்து சந்திதானத்தை அடைந்தவுடன் ஆவேசத்தைத் தணிப்பதற்காக பச்சை சாத்துதல் வைபவம் இடம்பெறும். ஆதன் பின் இறைவனை இரத்திலிருந்து ஆவரோகணம் (இறக்கம்) செய்து ஆலய வாயிலில் விசேட தீபாராதனை செய்து ஆலயத்தினுள் பிரவேசிப்பதாக அமையும்.

தீர்த்தோற்சம்

மஹேற்சவங்களின் இறுதி நாளான தீர்தோற்சத்தில் பச்சு கீருத்தியங்களின் இறுதியான அருளைக் குறிக்கும் அருளல் என்பது பரிபக்குவம் வாய்ந்த ஆன்மாக்களுக்கு இறைவன் பரமுத்தி கொடுத்தல் ஆகும். முக்தியை பெறுவதற்கு குருலிங்க சங்கம் சேவை முக்கியமானது. அதனையே தீர்தோற்சம் குறிக்கும். அபிஷேகம் செய்த தீர்த்ததை அடியார்கள் உள்ளே பருகியும் புறத்தே புரோட்சித்தும் அந்நீரிலேயே மூழ்கியும் தமது பாவங்களை கழுவி திருவருள் பெற்றுக் கொள்வர்.

சண்டேஸ்வர உற்சவம்

கொடியிறக்கம் முடிவடைந்த பின்னர் வைரவர் சண்டெஸ்வரர் பூசைகள் நடந்து உற்சவமூர்த்தி வீதிஉலா வருவர். சண்டேஸ்வரர் உற்சவம் சங்கம வழிபாடாகக் கருதப்படும்.

ஆச்சாரிய உற்சவம்

மஹோற்சவங்களின் இறுதிக் கட்டமாக அமைவது ஆச்சாரிய உற்சவம். மஹேற்சவ காரியங்களைச் செவ்வனே நிறைவேற்றி வைத்து திருவருட் பேற்றினைத் தந்தருளும் மூர்த்தியாகிய சிவாச்சாரியாரைப் பூமாலை அணிவித்து மங்கள வாத்தியம் சகிதம் வீதி வலமாக அழைத்து வந்து மண்டபத்தின் அமரச் செய்து ஆசீர்வாதத்தை பெற்று கொள்வதாக இந்த உற்சவம் இடம்பெறும்.

வைரவர் பூஜை

இந்த வைரவர் பூஜை மகோற்சவம் முடிந்து முதலில் வருகின்ற செவ்வாய் கிழமை அல்லது வெள்ளிக் கிழமைகளில் இடம்பெறும் வைரவர், கோயில் காவல் தெய்வமேன்பதால் உற்சவங்கள் சிறப்பாக இடம்பெற காவலாளியாக இருந்து இனிதே நிறைவேற்றி வைத்ததற்காக வைரவருக்கு மடைபரவி, வடைமாலை சாத்தி அவரைச் சாந்தப்படுத்தும் பூஜையாக இடம்பெறும்.

S.பாலகஜன்
10 "D"

வாழ்க்கையின் வழி அது சமய நெறி!

ஒருவரின் அறமான வாழ்விற்கு அடித்தளமாக இருப்பது சமயமாகும். வாழக்கையை வளத்தோடு வாழ்வதற்கு ஒவ்வொரு படிமுறைகளிலும், செயற்பாடுகளிலும் இரண்டறக் கலந்து மனித வாழ்வை மானிட நேயமிக்க சீரான பாதையை அமைத்துத் தருவது சமய நெறிகள் என்றால் மிகையாகாது.

வாழ்க்கையை எப்படியும் வாழலாம், தவிர்த்து வாழ்க்கையை இப்படித்தான் வாழ வேண்டும் என்பதை எடுத்தியம்புவது சமயமாகும். சமயத்தோடு இரண்டறக் கலந்த இதிகாசங்கள் இதை போதிப்பது நாம் அறிந்த விடயமாகும். மண்ணாசையால் விளைந்த விளைவுகளை மகாபாரதமும், பெண்ணாசையால் வந்த வினைகளை இராமாயணமும், பொன்னாசையின் விளைவுகளை சிலப்பதிகாரமும், மானுடனுக்கு அறிவுபுகட்டும் பாடங்களாகும். சமயம் என்பது வெறும் ஆன்மீகவாதம் மட்டுமல்ல அறிஞர்களையும், நாயன்மார்களையும் சான்றோர்களையும் வாழ்க்கை நெறிக்கு முன்னுதாரணமாக்கியுள்ளது. இதிகாச புராணங்களும் சமய சான்றோர்களும் படைத்த வரலாறுகளும் நம் வழி வழி வந்த முன்னோர்கள் சமயத்தோடு சார்ந்த போதனையாக புதிய தலைமுறைகளுக்கு போதித்து வந்தமையால்தான் இன்றைய சந்ததியினர் கலை, கலாச்சாரத்தை சமயத்தையொட்டியதாக பின்பற்றி வாழவழிவகுத்துள்ளது என்பது ஐயமற்ற தெளிவாகின்றது.

வைரத்தை பட்டைத் தீட்டத் தீட்டத்தான் அதன் மகிமையும், பெருமையும் புலப்படுவது போல எம் மனமும் எண்ணங்களும் அவையீறான வாழ்வும் சமயம் என்ற வைரத்தை நம் அறிவு, பண்பு, பழக்கவழக்கம், நம்பிக்கை என்பவற்றால் பட்டை தீட்டத்தான் அதன் பெருமை துலங்கும். பகுத்தறிவைக் கொண்டு பிறந்த மானிட வாழ்வில் அவனது ஒவ்வொரு அங்குல வளர்ச்சியிலும் சமயநெறி பின்னிப் பிணைந்திருக்கின்றது.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்பது வள்ளுவப் பெருந்தகையின் பொய்யா மொழி. ஆம்! சமய நெறியோடு வாழ்பவனின் வாழ்க்கை தெய்வ திருப்பாதங்களில் போற்றப்படும் அளவிற்கு உயரும்.

வாழ்விற்கு தேவையான இனிப்பான பதார்த்தங்களை வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல மிக மென்மையாகச் சொல்லி தருகிறது சமயம். சமயத்தின் அடிப்படையில் செயல்படும் ஒவ்வொரு செயலும் அர்த்தமுள்ளதாக காணப்படுகின்றது.

B.சாருந்தன்
9 "C"

சைவம் கூறும் அன்பு வழிகள்

"அன்பே சிவம்" இதுவே சைவம் கூறும் வேதாந்த வாக்காகும். சிவபெருமானை முழு முதற் கடவுளாக வழிபடும் சைவசமயிகள் கூறும் அன்பு வழிகளை நிச்சயம் பேண வேண்டும். உலகம் அன்பினால் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. அன்பு பல பெயர்களில் பல ரூபங்களில் சித்தரிக்கப்படுகின்றது. இறைவன் மீது நாம் வைக்கும் அன்பு பக்தி என்றும், இறைவன் எம்மீது வைக்கும் அன்பு கருணை என்றும் அழைக்கப்படுகிறது. உயிர்கள் மீது நாம் செலுத்தும் அன்பு ஜீவகாருண்யம் என்றழைக்கப்படுகிறது. "தன்னுயிரைப் போல மன்னுயிரையும் நேசி" என்பது சைவம் கூறும் அன்பு வழிகளில் ஒன்று, வாயில்லாப் பிராணிகளை வதைக்கக்கூடாது. எமது சைவம் கூறும் ஜீவகாருண்யத்தின் பாற்படும்.
மனுநீதிச் சோழன் தன் மகன் கன்றுக் குட்டியை கொன்றதற்கு தன் மகனையே தேரால் கொல்ல ஆணையிட்டான் என்பது எம் அன்னை நிலாச் சோறு ஊட்டிய காலங்களில் கூறிய கதையாகும். "நண்டின் காலை ஒடிக்காதே, நாயைக் கல்லால் அடிக்காதே" என்பது நாம் இளமையில் கற்ற பாடலாகும். ஜீவகாருண்யம் காரணமாகவே சைவநெறி மாமிசம் புசித்தலை பஞ்சமா பாதங்களில் ஒன்றாக கூறுகின்றது.

ஏழை எளியவர்களுக்கு உதவுதல் சைவம் கூறும் இன்னொரு நெறியாகும். சிவபெருமானுக்குத் தொண்டுசெய்யும் சிவனடியார்களுக்குதவுதல் மற்றுமொரு அன்பு வழியாகும். சிவகாரியங்களான கோவில் கட்டுவதற்கு நிதி திரட்டவருபவர்களுக்கு முடிந்தளவு நிதி கொடுத்து உதவுதல், கோயில்களில் சிவனடியார்களுடன் சேர்ந்து மாலைகட்டல், கோயில்தனைச் சுத்தமாக்குதல் போன்ற சரியை நெறிகளுக்கு உதவுதல் இவ்வன்பு வழியினை சாரும். திருமூலர் திருமந்திரத்தில் பொருள் கொடுக்காவிட்டாலும் இன்சொல் கூறி உபசரித்தல் ஓர் அன்பு வழி என்று கூறியுள்ளார். பிறரை வருத்தாமல் கருமம் ஆற்றுதல் ஓர் அன்பு நெறியாகும். சைவம் கூறும் அன்பு நெறிகள் எல்லோராலும் கடைப்பிடிக்கக்கூடியது. பிறருக்கு உதவுதல் பிறர்உயிரையும் தன்னுயிர் போல் நேசித்தல், பஞ்சமா பாதகங்களை செய்யாதிருத்தல், எல்லோரும் செய்யக் கூடியவை என சைவம் கூறுகின்றது. எனவே நாமும் பிறருக்கு உதவி செய்து சைவம் கூறும் அன்பு வழிகளை பின்பற்றி வாழ்ந்து உயர்வடைவோமாக!

J.விதுசிகன்
5 "D"

With Best Compliments From :

DEVI
JEWELLERS

No. 269, Galle Road,
Wellawatta, Colombo - 06.
Tel : 2580011, 2360728

Inter School Competition 2010

Essay (Tamil)

Junior	1st Place	-	S.Mahima	Holy Family Convent
	2nd Place	-	K.Mathushanth	Hindu College
	3rd Place	-	F.Prabhu	St.Lucias College
			R.Sajeevani	Wolfendal Girls High School
Intermediate				
	1st Place	-	V.Sivarubini	Vivekananda College
	2nd Place	-	R.Ramya	Ramanathan Hindu Ladies College
	3rd Place	-	S.Kanjana	Nugegoda Tamil Maha Vidyalayam
			P.Ashwini	Vivekananda College
Senior				
	1st Place	-	K.Prashanthi	Wolfendal Girls High School
	2nd Place	-	K.Nishanthini	Kanapathy Hindu Ladies Maha Vid.
	3rd Place	-	S.Suganthini	Ramanathan Hindu Ladies College

Short Story (Tamil)

Junior				
	1st Place	-	M.Akkshana	Wijeyaratnam Hindu Central College
	2nd Place	-	P.Agana	Hindu Ladies College
	3rd Place	-	R.Anushiya	Vivekananda College
Intermediate				
	1st Place	-	T.Mythily	Kanapathy Hindu Ladies Maha Vid.
	2nd Place	-	S.Rushandani	Wijeyaratnam Hindu Central College
	3rd Place	-	K.Thevakaran	Ratmalana Hindu College
Senior				
	1st Place	-	S.Viraj Shervin	Wijeyaratnam Hindu Central College
	2nd Place	-	S.Catherame	Kanapathy Hindu Ladies Maha Vid.
	3rd Place	-	S.Dhanusha	Wolfendal Girls High School

Poetry (Tamil)

Junior

1st Place	-	K.Yathurshiya	Hindu Ladies College
2nd Place	-	R.Hamshalini	Ramanathan Hindu Ladies College
3rd Place	-	S.Rushanthan	Hindu College

Intermediate

1st Place	-	T.Arulpriya	Ramanathan Hindu Ladies College
2nd Place	-	J.Shrishabarshya	Wijeyaratnam Hindu Central College
3rd Place	-	P.Nareshaanth	St.Peters College

Senior

1st Place	-	D.Arjun	Vivekananda College
2nd Place	-	S.Sharmila	Hindu Ladies College
3rd Place	-	S.Lalitha	Kanapathy Hindu Ladies Maha Vid.

Speech(Tamil)

Junior

1st Place	-	Hemarasheeka	Ramanathan Hindu Ladies College
2nd Place	-	Shambavi	Holy Family Convent
3rd Place	-	M.Keerthika	Ramanathan Hindu Ladies College
		P.Jeevanopriya	Wijayaratnam Hindu Central College

Intermediate

1st Place	-	S.Varun	Hindu College
2nd Place	-	S.Nivethitha	Ramanathan Hindu Ladies College
3rd Place	-	K.Vinoshiya	Wolfendal Girls High School
		C.Sanjika	Wijeyaratnam Hindu Central College

Senior

1st Place	-	V.Sivaharanee	Ramanathan Hindu Ladies College
2nd Place	-	J.Ganatharan	Hindu College
3rd Place	-	K.Krishanthakumar	Wijeyaratnam ahindu Central College
		B.Satheeskumar	Ratmalana Hindu College

Essay (English)

Junior

1st Place	-	V.Abirami	Ramanathan Hindu Ladies College
2nd Place	-	V.Lukshika	Ramanathan Hindu Ladies College
3rd Place	-	S.Dhanushanth	Wijeyaratnam Hindu Central College

Intermediate

1st Place	-	T.Subanemi	Holy Family Convent
2nd Place	-	K.Abiraam	Hindu College
3rd Place	-	T.Balachandran	Hindu College

Senior

1st Place	-	M.Lishanthi	Wijeyaratnam Hindu Central College
2nd Place	-	V.Vithiya	Wijeyaratnam Hindu Central College
3rd Place	-	N.Pavithra	Wijeyaratnam Hindu Central College

Short Story (Engilsh)

Junior

1st Place	-	P.Adshayini	Ramanathan Hindu ladies College
2nd Place	-	S.Nilesha Ranjini	Wijeyaratnam Hindu Central College
3rd Place	-	T.Sayanuja	Wijeyaratnam Hindu Central College

Intermediate

1st Place	-	B.Thivyaa	Holy Family Convent
2nd Place	-	K.Narayanan	Holy Family Convent
3rd Place	-	T.Hithusa Dilma	Wijeyaratnam Hindu Central College

Senior

1st Place	-	S.Rushanthan	Wijeyaratnam Hindu Central College
2nd Place	-	G.Rusagimy	Wijeyaratnam Hindu Central College
3rd Place	-	M.M.Dhanya	Wijeyaratnam Hindu Central College

Speech(English)

Junior

1st Place	-	S.Thushani	Ramanathan Hindu Ladies College
2nd Place	-	T.Aberame	Ramanathan Hindu Ladies College
3rd Place	-	K.Shanthiya	Vivekananda College
		C.Vidurshan	Hindu College

Intermediate

1st Place	-	S.A.M.Gowshini	Wijeyaratnam Hindu Central College
2nd Place	-	V.Vithushan	Hindu College
3rd Place	-	S.Vijendra	Vivekananda College
		J.Saitharshan	Hindu College

Senior

1st Place	-	T.Dharshika	Wijeyaratnam Hindu Central College
2nd Place	-	S.Innpa	Wijeyaratnam Hindu Central College

Thirukkural

Junior

1st Place	-	S.Sahana	Hindu Ladies College
2nd Place	-	S.Karubalni	Wijeyaratnam Hindu Central College
3rd Place	-	S.Aarani	Hindu Ladies College

Pannisai

Junior

1st Place	-	J.Partheepan	Dehiwala Tamil Maha Vidyalayam
2nd Place	-	J.Thulasi	Hindu Ladies College
3rd Place	-	S.Susmetha	Ratmalana Hindu College
		I.Sangeetha	Ratmalana Hindu College

Intermediate

1st Place	-	S.Narayani	Hindu Ladies College
2nd Place	-	V.Chadrika	Ratmalana Hindu College
3rd Place	-	S.Sooriyapiragash	Hindu College

Senior

1st Place	-	R.Thisananthini	Ratmalana Hindu College
2nd Place	-	T.Lavanya	Ratmalana Hindu College
3rd Place	-	R.Sulakshani	Ratmalana Hindu College

Quiz

1st Place	-	Vivekananda College, Kottahena.
2nd Place	-	Colombo Hindu College, Ratmalana.
3rd Place	-	Nugegoda Tamil Maha Vidyalayam, Nugegoda.

"CONGRATULATIONS FOR ALL THE WINNERS"

பாடசாலைகளுக்கிடையிலான போட்டியில் கீழ்பிரிவில் முதலாமிடம் பெற்ற கவிதை.

அன்பின் வலிமை

அன்பு என்னும் முன்றெழுத்தில் அமுதம் இருக்குது
அம்மாவின் அன்பில் உள்ளம் சிலிற்குது
அம்மாவின் அன்பு வளரும் வரை
உறவினர் அன்பு நாம் பருவமடையும் வரை
நண்பனின் அன்பு உயிர் வாழும் வரை

உடம்பின் வலிமை நாம் ஆரோக்கியமாக உள்ள வரை
உள்ளத்தின் வலிமை நாம் நிம்மதியாக உள்ள வரை
உறவினர் வலிமை எம்மிடம் பணம் உள்ள வரை
பணத்தின் வலிமை உழைப்பு இருக்கும் வரை
அன்பின் வலிமை உயிர் வாழும் வரை

சிறியதொரு அன்பின் பயன் உலகத்தை மிஞ்சியது
அழகான அவ்வார்த்தைதான் எம் உள்ளத்தில் எஞ்சியது
அன்பின் மகிமைதான் இவ் உலகத்தை ஆளுது
அன்பெனும் முன்றெழுத்தில்தான் அகிலமே அடங்குது
அகிலத்தை ஆளும் இவ் அன்பை புகழவா?
அகிலத்தை அடக்கும் இவ் அன்பை வாழ்த்தவா?

கண்கள் மூடும் காலம் வரை அன்பே ஆளும்
மனக்கோயில் தனை
எமது மூச்சுநிற்கும் காலம் வரை
அன்பே எமக்கு மூலத்துணை

K. யதுர்ஹியா
சைவ மங்கையர் வித்தியாலயம்
கொழும்பு

பாடசாலைகளுக்கிடையிலான போட்டியில் மத்திய பிரிவில் முதலாமிடம் பெற்ற கவிதை.

சிவனே எனது சிந்தை

உன்னை அன்றி வேறொரு தெய்வம் என் நெஞ்சில்
ஒரு போதும் குடி கொண்ட நாளில்லை – மற்றொன்றும்
சொல்வதற்கு நீ படைத்த தமிழில் சொல்லில்லை
என் இதயம் இங்கில்லை ஏனெனில்
என்னுள்ளே பரந்தாமன்.

உன்னை நினைக்காத நாளில்லை – உன் புகழ்
பாடாத நாளில்லை : உன் கோபுரம் குடி கொண்ட
கோயிலுக்கு தலை சாய்க்காத நாளில்லை : உன்னை
மனம் உருகி வாழ்த்தாத நாளில்லை என் உடையவனே

சித்தர் தம் சிரத்தானே உமைக்கோர் இடப் பாகம் போல்
இப் பேதைக் கோர் மனப்பாகம் - உன் திருவடியில்
என் சிரம் தாழ்த்த அருள்வாயோ? என் சிந்தையில்
இப்போது என்ன மாற்றம் அது உன்னால் தானடா இறைவா

தாமாக இயங்கிய கால்கள் கோவிலன்றி வேறு இடம்
செல்ல மறுக்கும் மாயம் என்ன? ஏதேதோ பேசிய
இத் திருவாய் திருவைந்தெழுத்து இன்றி மற்றவற்றிக்கு ஊமையாகுதே?
ஏதேதோ பொருளிற்கு செவிசாய்த்த என் செவி உன்
திருநாமன்றி மற்றவற்றிற்கு செவிடாகின்றதே? ஏது நேர்ந்தது?

ஏதேதோ இரசித்த என் கயல் மீன் கண் இப்போ உன்னையன்றி
வேறு பொருள் பார்க்க குருடாகுதே ஏன்?
பார்த்ததையும், கேட்டதையும் சிந்தித்த என் சிந்தை
உன்னையன்றி சிந்திக்க வேறதும் இல்லாமல் தவிக்கிறது
அரண்டு புரண்டு துடிக்கிறது என் சிவனே நீயே என் சிந்தை.

சிவனே நீ எந்தன் சிந்தையில் உறைய
கல்லாமலே தமிழ் எனக்கு உணர்கின்றதே!
அருவி போல் கவி எனக்குக் கொட்டுதே! இசைக் குயில்
போல் பா எனக்குத் ததும்புதே என் இறைவா

"சித்தம் எல்லாம் எனக்கு சிவமயமே" இறைவா எனக்குக் கற்றறியா
வித்தை எல்லாம் மடைதிறந்து வெள்ளம் போல்
என் சிவன் அருளினால் கொட்டு கொட்டு என்று கொட்டி
கரையில்லா இன்பத்தில் தவிக்கிறேன் என் பித்தா

புத்தனும் சைவனே ஸ்ரீ ராமகிருஷ்ணனும் சைவனே மண்ணில்
பிறந்த ஒரு உயிரும் உன் அருளின்றி இயங்காது
உன்னை சிரம் மேல் இருத்தி உன் வழியிலே செல்கிறேன்
தமிழ் போல் ஒரு மொழி வேண்டும் இச் செயலைப் பாட

தமிழில் உள்ள வார்த்தைகள் போதாது உன் புகழ் பாட
என் வாழ் நாள் போதாது உன் பணி செய்ய
"கற்றுணர்ந்து மெய் பொருள் காண்பதிலும் இன்பம்" உன்னை
மனத்தால் இரசித்தலில் உள்ளது என் பரந்தாமனே

"பித்தன்:" எனவும் "பேயன்" எனவும் பாடி உன்னிடம்
ஊயிர் நீகங்காத் தோழன் ஆனார் சுந்தரர்
உழவாரம் கொண்டு சரியை செய்து உன்னிடம் சேர்ந்தார்
திருத்தாண்டக வேந்தர் அப்பர் சுவாமிகள்

நரியைப் பரியாக்கி அருள் செய்தாய் வாதவூரருக்கு
மூன்றிலே ஞானம் கொடுத்தாய் குழந்தைக்கு
யாம் வேண்டுகிறேன் இறைவா என் உள்ளத்தை
கவர்ந்த நீ என்முன்னே தோன்றுவாயா?

ஆலவாய் எதிர்பார்க்கிறேன் என்னுள் தோன்ற
இக் கவியைப் படித்தேனும் மனமிரங்கி
என் முன் தோன்றுவாயா என் மனம் கொண்ட
சதாசிவனே உமைபங்கன் சிவபெருமானே.

வியத்தகு விஞ்ஞானத்தால் விளைத்திட்ட விளைவுகளை
உனை நம்பியிருந்த பேதை நான் - அனுபவிக்கின்றேன்
உயிர் கொல்லும் கிருமி யொன்றை தடுக்க மருந்தின்றி
தினம் தினம் உன்னை வேண்டுகின்றேன்.

இப்பேதை இன்னும் இப்புவியில் வாழப்போவது இரண்டு ஆண்டுகள்
என் உயிர் பிரியும் நேரம் முன்பே உன்
திருமுகத்தைக் காட்டாயோ? ? ? நம்பினேன் [illegible]கவிடப்படார்
என்ற கூற்றை செம்மையாக்க என் முன் தோன்றாய்யா

இன்னும் இரண்டு ஆண்டுகளில் புற்றுநோயால் என் ஆயுள் முடிந்து விடும்
இப் பூமியில் எஞ்சியிருக்கும் அனைவருக்கும் அருள் மழையை
நீ தினம் தினம் பொழிய வேண்டும் என் போல் கெதி இனி
யாருக்கும் நீ அருள வேண்டாம்.

என் உயிர் மூச்சு உள்ளவரை சைவத்திற்க்கு நான்
தொண்டாற்றுவேன். இன்னும் இரு வருடத்தில் நான்
விட்டுச் சென்ற பணியை தொடரத் இன்னும் ஒரு யுவதியை
நீ உருவாக்கி இப்போதே என் முன் காட்டுமையா.

என் இறுதி ஆசையை எனக்கு அருள் வரம் தாருமையா
உன்னை ஒரு முறை பார்த்து விட்டால்
இப் புகழுடம்மை அக்கணமே துறந்திடுவேன்.
உன் முகம் காண தவியாய் தவிக்கின்றேன் சிவனே

இனி ஏதும் பேச எனக்கு வார்த்தை வரவில்லை
என் உள்ளக் கிடக்கையை கொட்டி விட்டேன்
நீ என்றும் என் சிந்தையில் உள்ளவரை எனக்கேது
காலனுக்குப் பயம்.....?????

சிவனே எனது சிந்தையில் குடி கொண்ட அற்புதம்
அவன் வழியில் சென்று அவனை சில காலத்தில்
அடைய சிவனே எனக்கு அருள் செய்வாயாக – அவ்வாறு
அன்றில் என் விதியை நானே நொந்து கொள்வேன்.

என் மூச்சுக் காற்று உள்ளவரை என் வாயில் சிவ நாமம்
என் சிந்தையில் முடிவிலாப் பரம் பொருள்
என் உயிர் பிரியும் கணத்திலும் கூட என் சிந்தையில்
அழிவில்லா சிவனே அமர்ந்திருப்பார்

சிவனைச் சிந்தையில் வைத்தால் குறையேதும் வராது
இது நான் கண்ட உண்மை. என் சிவன்
தன் திருமுகம் காட்ட ஓடோடி வருவான் என்ற
நம்பிக்கையில் என் பணி தொடர்கிறேன் என்றும்

T. அருள்பிரியா
இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி
கொழும்பு

பாடசாலைகளுக்கிடையிலான போட்டியில் மேற்பிரிவில் முதலாமிடம் பெற்ற கவிதை.

இனி ஒரு விதி செய்வோம்

வாளெடுத்து போர் தொடுத்து
பார் தன்னில் புகழ் பரவ
கார்மேகம் மழை பொழியும்
இனி ஒரு விதி செய்வோம்

வாக்கெடுப்பில் வெற்றி அடைய – போர்
தந்திரங்களை பயன்செய்து
பாலைவனத்தை சோலைவனமாக்குவோம் - இனிதே
இனி ஒரு விதி செய்வோம்

சுழன்றடிக்கும் புயல் காற்றில்
புத்தி எனும் கத்தியை கூராக்குவோம்
புது வண்ணம் தீட்டி புவிக்கு
இனி ஒரு விதி செய்வோம்

கரும்புத் தோட்டத்தில் இரும்பு மல்லிகையை நட்டோம்
நாளை காலை நன்மை தருமென்று
தொங்கு தோட்டத்தில் தூக்குக்கயிறு இட்டோம்
துவண்ட மனங்கள் தூரம் செல்வதற்கு

அக்கினிப் பழத்தில் நாவினை தேய்த்தோம் - மாசற்ற
மனங்களை வீணாய் மாய்த்தோம்
மாதுளைக்குள் முத்து இருப்பதோ – கடல்
மீன்கள் தேடும் சிப்பிகள் மறைவிடத்தில்

நேற்று என் எதிரிலே நிழல்களின் ராஜ்ஜியம்
இன்று என் அருகிலே நிழல்களின் தரிசனம்
வரும் காலம் வசந்த காலம் நாளும் மங்களம் - மனிதா
எழுத்தாணி பொய்சொல்லும் இனி ஒரு விதி செய்

அசுர தாண்டவம் ஆத்ம ஜோதி தடைகள் தேடும்
இத் திருமுகம் சென்நிரும்பள்ளி கொண்டு கர்வம்
அண்டசராசரம் அடைந்து அலைமேல்வாய் நலம்
பூக்க இனி ஒரு விதி செய்

தோட்டாக்கள் துளைக்காது அணுகுண்டும் தகர்க்காது
அவமானம் உன் உயிரை அழிக்காது
இல்லை நீதி இந்த கலி உலகத்தில் - வீண்
பேச்சில் அர்த்தமில்லை இனி ஒரு விதி செய்

இடரை அழித்து இமயம் செல்ல - இத்தனை
கால காத்திருப்பு ஒத்திகை முடிவுக்கு வந்தது

முரண்பாட்டின் உச்சத்தில் முதல்வர் இருக்கை
அழியவேண்டும் இனி ஒரு விதி செய்வோம்

நரசிம்ம வருகை நாட்டிற்கு அவசியம்
அவிழவேண்டும் கண பூதங்களின் ரகசியம்
வாய்திறந்த பேச்சுவார்த்தை வலிகள் தராது – மனித
தோளில் சாயும் ஆயுதங்கள் முடிவு தராது

பொறுமையை மாத்திரையாக்கி வாய்களில் போடு
ஆறு அறிவுகளை கூர்மையாக்கி நாண்களில் போடு
உதிரம் சிவக்கும் வேளை வரும் வெற்றியை தேடு
நாளும் கூடும் உந்தன் சுமைகள் தானே மூட்டையைத் தேடு

களைகளை அகற்றி கிணற்றினுள் போடு
எதிர்ப்பின் கண்கள் மிரள
செழித்த அழகில் சிவந்து நிற்கும் தம்புகழ் காக்க
இனி ஒரு விதி செய்

கண்களில் மின்னலாய் இரவில் பகலாய்
உழைத்து உயர்வை பெறுகையில்
உன் விழி தன்னில் பல்லி போல் குறுக்கிடுவோர்க்கு
இனி ஒரு விதி செய்

வேளை அமைந்தது வெற்றியைத் தேட
முடவர் கண்ணில் மண்ணைத் தூவு
வாரி வழங்கும் பாரியை நினைத்து
இனி ஒரு விதி செய்

தோழா நம் இனம் காக்க இனி ஒரு விதி செய்வோம்
இச்சகத்திலோரெல்லாம் எதிர்த்து நின்ற போதிலும்
தோழா நம் ஈழம் காக்க இனி ஒரு விதி செய்வோம்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே

வாதம்செய்யும் மாதர்போக்க
இனி ஒரு விதி செய்வோம்!

D. அர்ஷன்
விவேகாந்தா கல்லூரி
கொட்டாஞ்சேனை

The Essay which got the first place in the Inter School Competition (Intermediate)

Help ever hurt never

Human beings are considered as one of the marvelous creation by the almighty God, the supreme being above everything existing in this world. To make his world beautiful and colourful he created variety of creatures, such as flora, fauna, insects, trees, reptiles and many more. In the same manner human being are too one of his creations. The specialty in human being is that God gifted them with the sixth sense, wisdom. The knowledge to differentiate what is just and what is unjust.

But nowadays we find that human never appear to use their sixth sense, instead they tend to adjust their lives with their other five senses. And the consequence is that human being lead a life worse than animals as the sixth sense is shut in a room, moral values and traditions have lost its place. Human beings try to harm and torture the other creatures and attempt at any cost to achieve their ultimate goal. According to the Seattle all living and nonliving things are similar to strands which built a mighty weed. If we destroy one and it will demolishes whole weed.
Similar to those human beings harm other creatures but forget that they also will suffer for the results. Currently human beings minds are filled with vices. They've now been transformed into selfish, merciless creatures, who are greedy and aren't self content. They have forgotten the word sharing and the word my own has taken its place.

By sharing with the poor, helping the disabled and handicapped we never lose anything from us, instead we gain something. We become the cause for the smile in a person's place, we would be blessed and more over we would be honored by god. Helping people in need could also be done in another way. When a person is in distress, a few consoling words may give a new strength to that person. Encouragement is also a way of helping someone who feels he's a loser corcerned or rejected.

Helping can be done in many ways. Even a simple smile is appreciated when we come across a disturbed person. Love, friendship, unity all develops when tend to help others. Helping may throw out all the divisions in society when divisions are put out social misbehaviour acts such as crimes and murders will also decreases. As a result the world would be a free place for the enjoyment to roam.

"Charity begins at home". We must start helping the people from home itself. It's a vital moral value we should cultivate in us during young ages. Hurting anyone could

be done verbally or physically, but to help a person our mind, body, heart should all coordinate together.

We must stop hurting others and start helping the needy people. We may be the younger generation to keep the world free from riots and war. Help could be lended irrespective of caste, creed and race. It may develop unity among various situations. All religions too say the same point but in different ways help ever hurt never is a single, cross cultured tradition related by all religions. We must always see God in all creatures so then we can avoid hurting people.

T. Subanemi
Holy Family Convent

With Best Compliments From :

VARATHAN RICE MILL

VRM

The Essay which got the first place in the Inter School Competition (Senior)

Science and Spirituality

The world of today is quite different from the world of tomorrow. In other words, the world is changing with time. According to this saying, we can come to the conclusion, that the world is not a permanent thing. It improves in day by day. We called it as civilization. So the science is regarded as the basic foundation of this world.

In earlier the man lived in large forests, caves and near the river bank. He wore the leaves of trees, and the furry of animals as his clothes. And he ate the flesh of animals as his meal. He spent his life without any purpose or aim.

But step by step he started to achieve his goals. First he invented the fire, by crashing of two stones. And he began to build some houses by the use trees and animals. After introduced the fire he started to got his meal after, boiled. And finally he became a modern person.

But now he is continuing his researches and invents thousands of electronic of this progress, he invented more and more information technologies. Such as telephone, fax, computer, e-mail (electronic mail) and internet. And they are regarding as the miracles of modern science.

Anyone can get communication with his relations, through these information technologies. It is the easy and the cheaper way to communicate. We can get to know all the information, in around the world, through these machines. It saves our valuable time and energy. It makes us happy too.

Now let look at the disadvantages of this science technology. There are some worst things too as good things in technology. Most of these machines programs are not suitable for the children and teenagers. Such as, murders, blackmail, kidnap and etc. so the children motivate to do those anti social activities, and some children, enjoy with their friends, by watching some blue films, and pictures. So they excite and complex the children's healthy mind and finally they addict to do those things.

And some teachers are complaining that the students never get care about their studies and home work. They always get care about television programs and computer cartoon games. So it is the very sad state of affairs. Everyone should know the value of these machines and technologies, and try to use it in a good moral way.

But some children concentrate on their studies, and achieve success through cheer determination.

In view of these above fact we can come to the conclusion that for future depends on how good this science is. So it is important to know the values of this science,

And it is the bounden duties of every citizen to got only the advantages of science, and prohibit the disadvantages, and try to be a good moral life.

M.Lishanthi
Wijeyaratnam Hindu Central College

With Best Compliments From :

MICRO WORLD

All kind of Cable TV Accessories,
Head End Systems & Satellite Equipment

Office :
No. 136, Dam Street, Colombo - 12, Sri Lanka.
Tel : 0094 11 2473744, 2478163, 5644571, 5644643
Fax : 0094 11 2478172
Email : shivacmb@hotmail.com
Web : www.microworldsat.com

பாடசாலைகளுக்கிடையிலான போட்டியில் கீழ்பிரிவில் முதலாமிடம் பெற்ற கட்டுரை

விபூதியின் மகிமை

இந்துசமயம் என்று கூறும்போது எம்மனதில் தோன்றுவது விபூதி தான் விபூதியின் மகிமையை சொல்லிக்கொண்டே போகலாம் இவ் விபூதியானது பசுவின் சாணத்தை எரித்து அதற்கு பல மூலிகைகளை இட்டு பெறப்படுகிறது.

இவ் விபூதியின் மகிமை எல்லையற்றது நாற்குரவரில் ஒருவரான திருஞானசம்பந்தர் 'மந்திரமாவது நீறு' எனத்தொங்கும் திருநீற்றுப் பதிகத்தைப்பாடி விபூதியின் சிறப்பினை எடுத்துக்காட்டினார். இது தவிர விபூதியின் மகிமையைக் காட்ட வேறெதும் சான்றிதழ் வேண்டுமா?

திருநீற்றால் செய்ய முடியாதது எதுவும் இல்லை. அது எமக்கு ஏற்படும் எவ்வித நோயையும் குணப்படுத்தும் வலிமை மிக்கது அக்காலத்தில் மக்கள் பலவித நோய்நோடிகளை திருநீற்றால் குணப்படுத்தினர்.

தருமசேனர் எனும் பெயருடன் சமணசமய திருவாகத் திகழ்ந்த மருண்நீக்கியாரின் நிலை எண்ணி அவரது அக்கா மிகவும் வருந்தினார். திருவீரட்டானத்துறை ஈஸ்வரனை வணங்கினார். உடலில் தருமசேனருக்கு சூலை நோய் ஏற்பட்டது. சமண சமய குருக்கள், புரோகிதர்கள், அரசவைத்தியர் எவராலும் குணப்படுத்த முடியாத சூலை நோயை அவரது அக்கா திலகவதியார் திருநீறு பூசிக் குணப்படுத்தினார். பிறமதம் சென்ற உழவாரப் படையாளியையே குணப்படுத்திய விபூதி நிச்சயம் எம்மையும் குணப்படுத்தும் என்பது திண்ணம்.

இவை மட்டுமா திருநீற்றின் சிறப்பு? இல்லவே இல்லை. திருஞானசம்பந்தரை பாண்டிமாதேவியான மங்கையற்கரசியார் மதுரைக்கு அழைத்தார். இதையறிந்த சமணர்கள் அவர் தங்கிய மடத்திற்கு தீமூட்டினர். அது உடனே பாண்டிய மகாராஜாவிற்கு வெப்பு நோயை உண்டாக்கியது. அதன் பின் என்ன? எவராலும் அவரைக் குணப்படுத்த முடியவில்லை. மக்கள் வருந்தினர். பாண்டிமாதேவி திருஞான சம்பந்தரை அழைத்தார். அக்குரவர் 'மந்திரமாவது நீறு' எனும் தேவாரத்தைப் பாடியவண்ணம் திருநீற்றை வயிற்றில் பூசினார். என்ன அதிசயம்? வெப்பு நோய் உடனேமறைந்து விட்டது. பாண்டிய அரசன் இந்துசமயத்தினதும். விபூதியினதும் சிறப்பைக் கண்டு இந்து சமயத்தைத் தழுவினார். பிறமதக் கைகொள்கையை பின்பற்றிய பாண்டியராஜனே இந்து சமயத்தைத்தழுவினார் என்றால் திருநீற்றின் சிறப்பைப் பாருங்கள்.

திருநீறு என அழைக்கப்படும் விபூதி அக்காலத்தில் நீறு என அழைக்கப்பட்டது. அதன் சிறப்பைக் கண்ட பாமரரும் பண்டிதரும் அதற்கு'திரு' என்ற சிறப்புப்பதத்தை வழங்கி 'திருநீறு' என அழைத்தனர். இவைமட்டுமல்ல, விபூதியின் சிறப்பு இன்னும் பல உண்டு.

ஈழத்து சைவப்பெரியார்கள் எனும் வரிசையில் ஞானப்பிரகாசர், விபுலானந்தஅடிகளார் எனும் பெரியார்களுக்கு அடுத்தாக இருப்பவர் 'ஐந்தாம் குரவர்' என அழைக்கப்படும் ஆறுமுகநாவலர். இவர் பாலருக்கான 'சைவ வினாவிடை' எனும் நூலில் மூன்றாவது அத்தியாயமாக 'விபூதியியல்' எனும் இயலை இணைத்துள்ளார். 'ஐந்தாம் குரவர்' என அழைக்கப்படும் ஆறுமுகநாவலரே விபூதியின் சிறப்பை இணைத்துள்ளார் என்றால் திருநீற்றின் சிறப்புகள் எவ்வளவு?

இவ்வாறு பல எடுத்துக்காட்டுகளைக் கூறி விபூதியின் சிறப்பை விரித்து விபரித்து இரசித்து எழுதிக்கொண்டே போகலாம். இவ்வாறு பல சிறப்பைக் கொண்ட திருநீற்றை நாம் தினமும் பூசவேண்டும். வடக்கு அல்லது கிழக்கு திசை நோக்கி நின்று நடு மூன்று விரல்களால் 'சிவ சிவ' எனக் கூறியவண்ணம் திருநீறு அணியவேண்டும். எல்லையற்ற சிறப்பைக் கொண்ட விபூதியை பூசி நன்மை பெறாதவர்கள் எவருமில்லை. இறைசிந்தனையுடன் திருநீறு தரித்து வாழ்வில் உயர்வோம் ; புகழ்பெறுவோம் ; வளம் பெறுவோம்.

S.மஹிமா
புனித அன்னம்மாள் கல்லூரி
கொழும்பு

With Best Compliments From :

HARINATH

பாடசாலைகளுக்கிடையிலான போட்டியில் மத்திய பிரிவில் முதலாமிடம் பெற்ற கட்டுரை

தாயினும் நல்ல தலைவர்

"தாயினும் நல்ல தலைவ றென்றடியார்
தம்மடிப் போற்றிசைப்பார்கள்
வாயினும் மனத்தும் மருவி நின்றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயினும் பிணியும் தொழிலர் பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமாமலை யமர்ந்தாரே"

என்பது தேவாரப் பாடல். ஆம் இறைவன் எங்கும் எதிலும் நீக்கமற நிறைந்துள்ளான். அனைத்து இடங்களிலும் சர்வபியாபகமாய் பரவி ஆன்மாக்களுக்கு அருள் புரியும் எம் தலைவர் காற்றாகி, கனலாகி, நீராகி, நிலமாகி, வானாகி, பஞ்சபூதங்களிலும் நிறைந்து, அதேவேளை எம்முள் உறைந்தும் காணப்படுகிறார். இதனாலேயே அவரை நாம் 'கடவுள்' என அழைக்கிறோம். எம் உள்ளத்தைக் கடந்தும், எம்முள்ளத்தினுள்ளும் வாழ்கின்ற எம் இறைவன் சிவனாவான்.

"அவனன்றி ஓர் அணுவும் அசையாது" என்பதற்கிணங்க இந்த உலக செயற்பாடுகள் அனைத்தையும் தாங்கி நின்று நடத்தும் சிவனுக்கு ஈடாக எந்தக் கடவுளும் இல்லை. சைவசமயம் சிவனை முழுமுதலாகக் கொண்டு வழிபடும் அதேவேளை, இந்து சமயமானது ஆறு பிரிவுகளுக்குள் வெவ்வேறு தெய்வங்களை குறிப்பிடுகிறது. இருப்பினும் எம் இந்து சமயத்தின்படி,

"பல தெய்வ வழிபாடு; ஒரு கடவுட் கோட்பாடு" என்னும்

அடிப்படையில் சிவனே, ஆதியும் அந்தமும் அற்றவரான அந்த பெருஞ் சோதிப் பிழம்பே முதல்வராகிறார். தேவர்களும் காண்பதற்கரிய அந்த தாயினும் நல்ல தலைவருக்கு நிகரேது? இந்த லோகம் மட்டுமல்ல, இன்னும் ஈரேழு லோகங்களிலும் அவரே எம் தலைவர்.

"அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே"

என்பதற்கிணங்க எம் தலைவர் எமக்கு அம்மையாகவும், அப்பனாகவும், ஆசானாகவும் ஒரு சிறந்த தோழனாகவும் நின்று அருள் பாலிக்க வல்லவர். உதாரணமாக பன்றிக்குட்டிகளுக்கு தாயாக வந்து பசி தீர்த்தமையைக் கூறலாம். அது மட்டும் தானா? தாய் வெள்ளத்தின் பிடியில் சிக்கிக்கொண்டு தவிக்கும்போது,

பிரசவ வேதனை தாளாத மகளை தானே மாறுவேடம் பூண்டு தாயாகச் சென்று பிரசவம் பார்த்தாரன்றோ? இந்த கருணை, இந்த அன்பு எங்கு கிடைக்கும்? பக்தர் தன் மேல் வைத்துள்ள பக்திக்காக பக்தருக்கு உபகாரம் புரியும் கருணையின் இருப்பிடமே எம்பெருமான் எனின் அது மிகையல்ல ; தகையே.

இப்படிப்பட்ட எம் சிவபெருமான் பக்கதர்களுக்கு அருள் புரிவதற்காகவும், ஆன்ம ஈடேற்றத்திற்காகவும் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்துதொழில்களைப் புரிகின்றார். அது தவிர குறித்த நேரத்தில் தன் பக்தனுக்கு காட்சி தந்து, அவரின் பெருமையை உலகமே போற்றும் வண்ணம் திருவிளையாடல்களை நிகழ்த்துவதிலும் அவரை மிஞ்சிய சக்தி இல்லை.

"ஏகனுமாகி ஆனேகனுமாகி நாதனுமானவன்" என்கிறது திருவருட்பயன் "ஏகன் அனேகன் இறைவனடி வாழ்க" என்கிறது திருவாசகம். இவ்வாறு தனித்து நிற்கும் எம்பெருமான் எண்குணங்களை உடையவராவார். தன்வயத்தராதல், தூய உடம்பினராதல், இயற்கை உணர்வினராதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களினின்னும் நீங்குதல், பேரருள் உடைமை, முடிவில் ஆற்றலுடைமை, வரம்பில் இன்பமுடைமை என எண்குணங்களோடு தாயினும் நல்ல தலைவர் தன் சேய்களுக்கு அருள் பாலித்து உய்யும் வண்ணம் வாழ்விக்கிறார்.

"சிவனொடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை
அவனொடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை"

என்கிறது திருமந்திரம். ஆம். சிவனுக்கு ஒப்பாரும், மிக்காரும் என்றும் யாம் கண்டறிய இயலாத விடயமாகும். சுந்தரருக்கு சித்தவட மடத்தில் தீட்சையளித்த எம்பெருமானின் கருணையோ கருணை! மாணிக்கவாசகர் படும் துன்பம் தாளாது அவருக்காக பிரம்படிபட்ட எம்பெருமான் அவர்! சம்பந்தர் பசியுடன் தந்தையை காணாது அழுதபோது அவருக்கு ஞானம் அளிப்பதற்காக உமையுடன் இடப வாகனத்தில் எழுந்தருளிய கருணையின் வடிவமவர்! அப்பரின் வாழ்வில் சமணர்களால் ஏற்படுத்தப்பட்ட சகல துன்பங்களையும் போக்கி, இவ்வுலகமே வியந்து பார்க்கும் வகையில் அவற்றை அற்புதங்களாக மாற்றி, சைவமே மெய்ச்சமயம் என நிரூபித்த எம் சிந்தையில் நின்றாடுகின்ற பாவையானவர்.

இப்படிப்பட்ட எம்பெருமான்

"எங்கும் எவையும் எரியுறு நீர்போல் - ஏகம்
தங்குமவன் தானே தனி"

என்பதற்கிணங்க தன்னை வழிபட்டவர்களை கைவிடாத பெருந் தலைவர். தன்னை வெறுப்பவர்களையும் அரவணைத்து, அவர்களுக்கு அருள் பாலிக்கும் எம் கடவுளின் பெருமையுணர்ந்தே, திருமுறைகளும், அறுபத்து மூன்று நாயன்மார்களும்

எழுந்தனர். சிவனருள் பெற்ற செம்மல்களான அவர்களையும், அவர் தம் பக்தியையும் சோதித்து தன் திருவடிநிழலை அளித்த எம்பெருமானின் பெருமை வார்த்தைகளால் அடங்காது.

இப்படிப்பட்ட எம்பெருமான் தடத்த லக்கணம், சொரூப லக்கணம் என்னும் இரு நிலைகளில் நின்று அருள் பாலிக்கிறார். குணங்குறி, நாமம், உருவமற்ற எம் இறைவன் ஆன்மாக்களுக்காக ஒருபடி கீழிறங்கி தடத்த லக்கணத்தில் அருள் பாலிக்கின்றமை அவரின் பெருந்தகைமையையே சுட்டுகிறது.

இன்னும் எத்தனை எத்தனையோ விளக்கங்களும், வரைவிலக்கணங்களும் கூறிக்கொண்டே, போகலாம். அதனால் சிவனின் பெருமை ஓங்குமே தவிர தாளாது. எனவே நாமும் சிவனை வணங்கி அவனருள் பெற்றவர்களாக மாறவேண்டும். சிவனின் பெருமையறிந்து, அவனின் பஞ்சாட்சர நாமத்தை நாம் உச்சரிப்போமேயானால், தீவினை அகலும். நல்வினை நம்மை வந்து சேரும்!

"வாழ்க சிவன் நாமம்!
ஓங்குக சைவ சமயம்!"

V. சிவரூபினி
விவேகானந்தா கல்லூரி
கொட்டாஞ்சேனை

With Best Compliments From :

APPOLO OPTICIAN

Eye Testing and Dispensing

317-B, Galle Road, Wellawatte,
Colombo - 06, Sri Lanka.
Tel / Fax : +94 (11) 4516609
E-mail : appolo.opti@yahoo.com
Web : www.appolooptician.com

Head Office :
Appolo Opticals
297C, George R. De. Silva Mawatha,
Kotahena, Colombo - 13. Sri Lanka. Te / Fax : +94 (11) 4610459

பாடசாலைகளுக்கிடையிலான போட்டியில் மேற்பிரிவில் முதலாமிடம் பெற்ற கட்டுரை

நாட்டார் தெய்வ வழிபாடு

ஆண்டுகள் ஆயிரமாயினும்
ஆண்டவன் அழிவதில்லை – சிந்தனை

என்ற கூற்றுக்கு இணங்க பண்டைய நாகரீகம் தொட்டு காலம் காலமாக இன்றய நவீன யுகம் வரையும் பற்பல யுகங்கள் கடந்து வந்த தெய்வ வழிபாட்டு முறையே "நாட்டார் தெய்வ வழிபாடு" ஆகும். இன்றய காலப்போக்கில் நகரமயமாக்கலின் மூலம் சமூக அங்கத்தின் பல தெய்வ வழிபாடுகளை மேற்கொண்டாலும், ஒவ்வொரு சமூகத்தினரும் ஒவ்வொரு சூழல், ஒவ்வொரு கலாச்சாரம், ஒவ்வொரு கிராமம், ஒவ்வொரு குலம் என்ற அடிப்படைக் காரணிகளில் இருந்து தோற்றம் பெற்றவர்கள் ஆதலால் ஒவ்வொரு சமூகத்தினருக்கும் ஒவ்வொரு வகையான கிராமியத் தெய்வங்கள் அதாவது நாட்டார் தெய்வங்களுடன் தொடர்பான வழிபாடுகளுடன் தொடர்புபட்டு காணப்படுவார்கள். ஆகவே நாட்டார் தெய்வ வழிபாடானது இன்று வரை வளர்ச்சி பெற்று காணப்படுகிறது.

நாட்டார் தெய்வ வழிபாடு என்று கூறும் போது நாட்டார் தெய்வங்கள் அதாவது கிராமிய தெய்வங்கள் பற்றிய சில விளக்கங்கள், கோயில்கள், வழிபாட்டு முறை என்பவற்றை கட்டாயமாக எடுத்துக் காட்டவேண்டும். ஆகவே முதலாவதாக நாட்டார் தெய்வங்கள் பற்றிய சில விளக்கங்கள், நாட்டார் தெய்வங்களாக வணங்கப்படும் தெய்வங்கள், கண்ணகி அம்மன், வீரபத்திரர், முனியாண்டி, வைரவர், பத்திரகாளி, அம்மன், திரௌபதி போன்ற தெய்வங்கள் கருதப்படுகின்றன.

மேலும் இத் தெய்வங்களை வணங்க வேண்டியதன் காரணங்கள் அல்லது நோக்கங்களை பார்த்தோமானால், நாட்டில் நல்ல மழை தர வரம் வேண்டி பெண்கள் வழிபடும் தெய்வம் கண்ணகி அம்மனைக் குறிப்பிடலாம். காவற் தெய்வங்களாக வீரபத்திரர், முனியாண்டி, வைரவர், கருப்பசாமி போன்ற தெய்வங்களை தாம் தமது கிராமத்தை விட்டு வேறு ஊர்களுக்கு செல்லும்போது தமக்கு துணையாக என்றும் தம்மோடு இருக்க வேண்டும் என்று இக்கிராமத்து தெய்வங்களை வணங்கி, பூஜைகளை மேற்கொண்டு வெளி இடங்களுக்கு தமது பயணத்தை ஆரம்பிப்பார்கள்.

இது போன்றே வீரம் வேண்டி பத்திரகாளியையும், தமக்கு நோயற்ற நல்வாழ்வும், நல்ல குடும்ப வாழ்க்கை, இவற்றை எல்லாம் வேண்டி அம்மனையும் வழிபடுவார்கள். இது போன்று நாட்டார் தெய்வங்களை குல தெய்வாமாக வைத்து வழிபடும் கட்சியினரும் காணப்படுவார்கள். குல தெய்வமாக, மாரியம்மன் வைரவர், கருப்பசாமி, அம்மன் போன்ற தெய்வங்கள் குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

இன் நாட்டார் தெய்வங்களை, ஒவ்வொருவரும் ஒவ்வொரு முறையாக வழிபடுவர். முதலில் பெண் தெய்வமான கண்ணகி அம்மனை எடுத்துக்கொண்டால் இத்

தெய்வத்தை வழிபடும் நோக்கம் மழை வரம் வேண்டிப் பெண்களால் பெரும் பூஜைகள் செய்யப்பட்டு பொங்கல் செய்து, மடைபரவி, தெய்வீக பாடல்களைப் பாடி, திருவிழா போன்று ஊர் மக்கள் அனைவரும் ஒன்று கூடி பெண்கள் கும்மி நடனமாடி இத் தெய்வ வழிபாடு நடைபெறும்.

இது போன்றே ஏனைய நாட்டார் தெய்வங்களுக்கும் திருவிழா போன்று நடாத்தப்பட்டு அவ் அவ் தெய்வங்களின் ஆலயத்தில் நாற்பத்து எட்டுநாள் விரதம் அல்லது இருபத்து மூன்று நாள் விரதங்கள் மேற்கொள்ளப்பட்டு பொங்கல் செய்து, மடை பரவி, கூழ் காய்ச்சி, நாட்டார் தெய்வங்கள் வழிபட்டு வரப்படுகின்றன.

முன்யை காலத்தில் மழை, நீர், சமுத்திரம், சூரியன் போன்றவற்றை தெய்வங்களாக வணங்கி வந்த நம் சமூகத்தினர் காலப்போக்கில் உருவான தெய்வங்களை பக்தியுடன் வழிபட்டு அவற்றிற்கு நாட்டுபுற தெய்வங்கள் என்ற அந்தஸ்து கொடுத்து அவற்றிற்கு பூஜை செய்து, நேர்த்திக்கடன்கள் நிறைவேற்றி, ஆலயங்கள் அமைத்து வழிபட ஆரம்பித்து இன்றுவரை அந் நாட்டார் தெய்வங்களின் வழிபாடு நடைபெற்றுக் கொண்டே வருகின்றன. மண்ணின் அடிப்பகுதியில் புதைக்கப்பட்ட தெய்வங்களை தோண்டி எடுத்து அவற்றிற்கு பூஜை செய்து இன்று ஆலயங்களை அமைக்க ஆரம்பித்து விட்டனர். அவ்வாறான ஆலயங்கள் ஆவன,

"வற்றாப்பளை கண்ணகி அம்மன்" ஆலயம் குறிப்பிடதக்க தென்றாகும். நாட்டார் தெய்வங்களுக்கு பூஜை செய்வோரை பூசாரி என்றும், சாமி என்றும் அழைப்பதுண்டு உதாரணமாக மாரியம்மனுக்கு பூஜை செய்பவரை பூசாரி என்று அழைப்பர். அவர் மாரியம்மனுக்கு பூஜை செய்யும்போது கையில் உடுக்கை ஏந்தி அடித்துக்கொண்டே மாரியம்மன் பாடல்களைப் பாடிக்கொண்டே பூஜை செய்வார்.

இது போன்று எல்லா வகையான நாட்டார் தெய்வ வழிபாடு நடைபெறும் போது அந்தந்த தெய்வங்களுக்கு விருப்பமான வாத்தியங்கள் அல்லது ஆயுதங்கள் வைத்து நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டு பூஜைகள் நடைபெறும். மாரியம்மனுக்கு பூஜைசெய்யும்போது உடுக்கை வாசிக்கப்படும், ஆண்களும் பெண்களுமாக சேர்ந்து கரகம் எடுத்து கரகாட்டம் ஆடுவர். இதுபோன்றே ஆண்நாட்டார் தெய்வங்களுக்கு தப்பாட்டம் போன்ற நடனங்கள் ஆடப்பட்டு வழிபாடு நடைபெறும்.

பொதுவாக கிராமத்து தெய்வங்களுக்கு "கும்பி, ஆடவர் கும்பி, கோலாட்டம், கரகாட்டம், தப்பாட்டம், வசந்தன் கூத்து" போன்ற நாட்டிய நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டு "வேல் குத்துதல், அலகு குத்துதல், கரகம் எடுத்தல், தீ மிதித்தல் அல்லது பூ மிதித்தல், தீச்சட்டி ஏந்துதல் போன்ற நேர்த்திக்கடன்களும் நிறைவேற்றப்பட்டு நாட்டார் தெய்வங்களை வழிபடுவர். நாட்டார் தெய்வ வழிப்பாட்டு முறையுடன் பிரசித்தி பெற்ற ஆலயங்களாக வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம் தலவாக்கலை திரௌபதி அம்மன் ஆலயம் போன்றன உள்ளடக்கப்படுகின்றன.

எம் பண்டய சமூகத்தினர் வாழ்ந்து காட்டிய நெறியில் நாமும் நமது நாட்டார் தெய்வங்களை வழிபட்டு நாட்டார் தெய்வ வழிபாட்டை சிறந்த முறையில் வளர்ச்சி பெறச் செய்து சைவ சமயத்தையும், தெய்வ வழிபாட்டு முறையையும் ஓங்கி வளரச் செய்வோம்.

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்"

K. பிரசாந்தி
புளுமன்டல் மகளிர் உயர் பாடசாலை
கொட்டாஞ்சேனை

With Best Compliments From :

GTV ENTERPRISES (PVT) LTD.

VIJEYA ENTERPRISES **MAHARAJA FOOD PRODUCTS**

Importers Exporters, Food Producers Forwarding &
Clearing Agents Cargo Services to all Countries by
Air & Sea, Courier Service, Sri Lankan Airline Cargo Agent

No. 18/3, Dr. E.A. Cooray Mawatha, Colombo - 06.
Tel : 0112-360926, 0112-559849 Fax : 0112-361139
E-mail : info@maharajafoodproduct.cm, gtvcourier@yahoo.com

The Short Story which got the first place in the Inter School Competition (Intermediate)

Service to Man is the Service to God

It was a beautiful early morning time in Srirangam the village situated in India. A baby boy was born in a poor house after a few minutes on the boy's birth his mother was dead. The baby boy already lost his father when her mother was pregnant. So, the small baby now became an orphan. The people who were living in Srirangam came to that house by hearing the boy's crying voice. They all decided to handover the baby to the chief priest of Srirangam temple, because the boy's father also a priest of that temple. At the beginning the temple people did not agree to keep that child with them. But after they thought about the boy's poor situation and his father's services to the temple so, they accepted to keep that boy as a servant. The chief priest of that temple Narayanan aiyar who named the child ad Govindhan.

After a few years, Govindhan become as a loving child of that village. He did the whole works in that temple after he finfshes his works at temple he went to the village people house to help them in their domestic works so that every people in Srirangam they gave their foods to Govindhan. In the night Govindhan use to sleep at the "kovil Manadabam". He got up every day early morning and take bath at the pond of Srirangam temple. After he finishes his prayers in the temple gets the kovil prasadham as his breakfast. Govindhan was a dedicated and sincere boy. And also he loved the God Srinarayanan a lot. He thought the God as his soul. He always likes to give his services to the people who worship the God Narayanan. Because of that every day Gonidhan try to do any help to the people.

One day Govindh got up early in the morning and after he did his all the work at temple he searched to give his help to the temple people. But no one called Govindh to got help from him so Govindh got so sad and he sat at near the pond. It was getting very dark and the clouds seem to rain. After a few minutes there was a heavy rain came. Govindh got so sad and he went off the kovil mamdabam. At a long distance Govindh saw a poor man came with a dirty "kavi" dress. And also the poor man was very injured but he looks like a priest. So,Govindh got so happy and went near to that old person. He asked him "do you need any help Aiyah". That person told "yes" and he asked some food. But yet Govindh didn't eat any food. After the old man ate the food he thanked Govindh and he blessed him then Gonindh got so hungry and tired. At the end Govindh got unconscious and he fell in the chief priest of that temple and he gave first aid for Govindh. After Govindh got normal he saw the real face of God Narayanan and he got so happy.

So, by this story we can clearly understand that "service to man is the service to God"

B.Thivyaa
Holy Family Convent

The Short Story which got the first place in the Inter School Competition (Senior)

LOVE ALL SERVE ALL

"Religion is the rule of Life" This is a famous saying regarding religion. It is the way we live our life. It is the way we select our paths to achieve our goals. Simply, religion is life and life is religion. Though there are many religions in the world, all of them tell us the way to reach the Almighty God. The story below elaborates very vividly. What a person should do and shouldn`t do to reach the heaven.

Once upon a time, there lived a man named Priyan in a rural area. He was always thinking of God and lived a life according to the path led by Hindu leaders. According to the famous saying `the service to mankind is the service to God` he spent all his wealth doing well to his fellow men. He helped his men in all possible ways. He never let anyone done. He tried his best to make the others happy. In return, he was also happy and satisfied. He was not jealous of anyone. He was happy by the growth of his fellow men. The people of the village liked him very much and were very faithful to him. He not only loved his men but also the inanimate creatures. He loved nature. He was happy to see the flowers bloom in the morning which were like the happy faces of small children, when they see their parents.
He with all his wealth,all his mind and time did many good deeds like giving job opportunities to the unemployed, He built a small Ashram for the poor and needy people and did many more things, which made the village people think that he was God, who has come to this world to liberate them from all their sorrows and hardships. More than everything he loved them all. He loved them from the bottom of his heart. He was ready to anything for his people. But, he never expected even a word of praise from them. He didn`t expect anything in return from them. His only thought was to help them. To redeem them from their sorrows and hardships.

On the other hand, in the same village there lived a very rich , proud,and naughty man named Tharshan. He also loved his men and did many good things to help them. But, he had an undeclared objective in his mind he did all the good deeds with the intention of making a reputation and gaining recognition for himself. He very well knew that in order to reach heaven, you should do adequate good deeds. He did good deeds for the sake of doing. Not with his mind and will. He always compared himself with the other men and wanted to do something that the others didn't do. When Tharshan and Priyan were both leading a life in two contrast means; one day death rattled their gates they both passed away. Priyan was taken to heaven by the angels and Tharshan to hell by the friend. The soul of Priyan was laid to rest and was granted eternal peace but not Tharshan. When Tharshan questioned the almighty God,"I did more good deeds than anyone did. I helped my fellow men, I treated them like my own sisters and brothers then why am I in hell?"Then god answered,

"You, served your men because you wanted them to respect you. You wanted to gain recognition and after all you wanted to reach heaven. You never served anyone with true love, with true affection. So, the punishment you get is to suffer in hell."

This story shows us how they both reached heaven and hell after their death. Love is not something means the love that can be measured. Love commonly means that love that exists between a mother and child, a brother and sister, a father and a child and after all between a young girl and a young boy. Love is a mingled feeling of affection, understanding, trust, hope, helpfulness and happiness. True love can be identified if someone lives in a way like the saying "your tears are my tears, your happiness is my happiness and then your life is my life."

We, as human being should love each other. It is said that this unconditional love can change the whole world. Can change anything and everything. Can change anyone and everyone from good to best and from bad to worst.

As, true Hindu children of lord Shiva and Uma it is our duty to help the needy, the poor, the old and everyone who needs our help. He/she may be rich ,may be proud, would have hurt us before, would have done something bad to us, but ,we should be always ready to serve them love them be a comfort to them and to make their lives a better one.

We, human being cannot see, touch or hear God. We can reach him only through the services done to mankind .This is what said in Tamil as "Makkal sevaye mahesan sevai." That is what we do to other human being is what we do to God. There is no point in worshipping God from morning till night and building up kovils, statues and many more in order to symbolize the faith in God if we don't have love in our hearts, love for other human being, love for nature and the mankind and will serve others. So, let us read the above story as an example and start to love and serve others from today. "Love all serve all."

S.Rushanthan
Wijayaratnam Hindu Central College

பாடசாலைகளுக்கிடையிலான கீழ்பிரிவில் முதலாமிடம் பெற்ற சிறுகதை

பேராசை பெரு நட்டம்

ஒரு ஊரில் ஒரு பணக்காரரும் அவருக்கு நான்கு ஆண்பிள்ளைகளும் என வாழ்ந்து வந்தனர். அப் பணக்காரன் அவனது பிள்ளைகளை தாயில்லாமல் மிகவும் செல்லமாக வளர்த்துவிட்டான். பிள்ளைகளுக்கு வேண்டியவற்றை கைகளுக்கே செய்து கொடுத்தான் நன்றாகப் படிக்க வைத்தான். ஆனால் அவன் எல்லாவற்றையும் பிள்ளைகள் கேட்டவுடனே செய்து கொடுப்பதால் பிள்ளைகள் சோம்பேறி ஆகிவிடுவார்களோ எனப் பயந்தான் அவனுக்கும் வயதாகிக்கொண்டே வந்தது. ஆதலால் தான் இறந்த பிறகு தனது பிள்ளைகள் பணத்தை ஊதாரித்தனமாக செலவு செய்து விடுவார்களோ என அஞ்சினான். அவனது முதலாவது மகன் எல்லோரையும் விட சற்று விபரம் தெரிந்தவன், பணத்தை அளவாக செலவு செய்வான் : பொறுப்பானவனும் ஆவான். ஆதலால் அனைத்து பொறுப்பையும் அவனிடம் ஒப்படைத்து அவனை மற்றைய பிள்ளைகளையும் கரை சேர்க்கும்படி கூற எண்ணினான்.

அடுத்த நாள் காலை அனைத்து பிள்ளைகளையும் அழைத்து இவ்விடயத்தை கூறினான். இரண்டாவது மகனும், மூன்றாவது மகனும் மிக்க மகிழ்ச்சியுடன் ஒத்துக்கொண்டனர். ஆனால் கடைசிமகனோ அதற்கு உடன்படுவதாக இல்லை. அவன் "பெரிய அண்ணாவிற்கு பொறுப்பை ஒப்படைத்துவிட்டு நீங்கள் இறந்து விட்டீர்கள் என்றால் அவர் எம்மை ஏமாற்ற முடியுமல்லவா?" என்றான். அதை கேட்டு அவனது தந்தை "இவ்வாறு சண்டை ஏற்படுமென நான் நினைக்கவில்லை. ஒரு பொறுப்பானவரிடம் ஒப்படைக்க வேண்டும் என்று மாத்திரமே யோசித்தேன். பரவாயில்லை நீ இப்படி கூறியதால் நான் நால்வருக்கும் ஒரு சிறிய அளவு பணத்தை சமமாக பிரித்து தருகிறேன். யார் அதை நன்கு உபயோகப்படுத்துகின்றீர்களோ அவருக்கே எனது சொத்தை அதிகமாக கொடுப்பேன் என்றான். "அதைக் கேட்ட முதலாவது மகன் மற்றைய சகோதரர்களையும் அழைத்து நாம் ஒரு சிறிய தொழிலை சேர்ந்து செய்து அதில் எமக்கு கிடைக்கும் இலாபத்தை சமமாக பிரிப்போம்" என்றான். மற்றைய இரு சகோரர்களுமே அது மிகவும் சிறந்த யோசனை ஒற்றுமையே என்றென்றும் பலம் என்று கூறி ஒத்துக்கொணடனர். அப்போதும் பேராசை உள்ளத்தையும், வஞ்சக நெஞ்சையும் கொண்ட கடைசி சகோதரன் "நீங்கள் கூறுவதெல்லாம் வேலைக்காகாது நானே அதிக சொத்தை பெற வேண்டும்" என்று கூறி தனியாக சென்றான் மற்றைய மூவரும் தமக்கு தெரிந்த வேலையை செய்து கொண்டு ஒன்றாய் உண்டு பணத்தையும் சேமித்து வந்தனர். ஆனால் மற்றையவனோ தனக்கு தேவையான உணவுகளை மாத்திரம் வாங்கி உண்டு பணத்தையே முடித்து விட்டான். அவர்களது தந்தை கொடுத்த நாட்களும் முடிந்தன அனைவரும் தந்தையை நாடி வந்தனர் தந்தை ஒவ்வொருவராக "நீ என்ன செய்தாய்? எவ்வளவு சேமித்தாய்" என வினவினார். முதல் மூன்று மகன்மார்களும் "நாங்கள் ஒன்றாக இணைந்து ஒரு தொழிலைச் செய்தோம் அதில் எமக்கு தேவையான வசதிகளை செய்துகொண்டு, நீங்கள் கொடுத்த பணத்தை விட அதிகமாக சேமித்துள்ளோம்"

என்றனர். தந்தை கடைசி மகனை நோக்கி உன்னால்தான் இந்த போட்டியையே வைத்தேன். நீ என்ன செய்தாய்?" என்றார். அவன் திரு திருவென முழித்துக் கொண்டே "நான் எனக்கு தேவையான உணவுகளையும் மற்றைய வசதிகளையும் செய்தேன். ஆனால் நான் பணத்தை சேமிக்கவில்லை" என்றான்.

அவர்களது தந்தை "நான் அப்போதே கூறினேன், அனைவருக்கும் சொத்து சமமாக கிடைக்கும், நான் பெரிய மகனிடம் பொறுப்பை ஒப்படைக்கின்றேன் என ஆனால் கடைசி மகனாகிய நீ! நீயே சண்டை பிடித்து நீயே பேராசையடைந்து தற்போது பெரும் நட்டமும் நீயே அடைந்துவிட்டாய்" என்று கூறி சொத்தை முதல் மூவருக்கும் சற்று அதிகமாக அளித்து இறுதி மகனுக்கு கொஞ்சம் பணம் கொடுத்து இனிமேலாவது பேராசையடைந்து பெருந்துன்பம் அடையாதே! ஒழுங்காக வேலையை தேடிச் செய் என்றார். ஆனால் மற்றைய மூவரும் கடைசி சகோதரன் செய்ததை மறந்து அவனையும் சேர்த்துக் கொண்டு வேலை ஒன்றை சுயமாக ஆரம்பித்து மகிழ்ச்சியான வாழ்வை வாழ்ந்து வந்தனர்.

அதிகமாக ஆசைப்படுபவன் அழிந்துவிடுவான்...

M. அக்ஷனா
விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி
நீர்கொழும்பு.

With Best Compliments From :

NALAPAHAM

Veg / Non Veg Restaurant

No. 16, E. S. Fernando Mw,
Colombo - 06.
Tel : 0777-742068, 0779-940384

FRIDAY SPECIAL - Yellow Rice
SUNDAY SPECIAL - Odiyal Kool
PURIYANI - Wednesday, Saturday & Sundays

WE UNDERTAKE PARTY ORDERS

பாடசாலைகளுக்கிடையிலான போட்டியில் மத்திய பிரிவில் முதலாமிடம் பெற்ற சிறுகதை

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

அது ஓர் அழகிய பூஞ்சோலைக் கிராமம் இயற்கை வனப்புக்கள் சூழ ஓங்கி உயர்ந்த தென்னை மரங்களும், சிகரம் போன்றமலைச்சாரல்களும், பச்சைப்பசேலென உள்ள வயல்வெளிகளும், வற்றாத நதிகளும், வண்ணத்துப்பூச்சியைக் கண்டு கண்சிமிட்டும் மாஞ்சோலைகளும், வருவோர் மனதை கொள்ளை கொள்ளும் குன்றுகளும், மூக்கைத்துளைக்கும் மண்வாசன கொண்ட ஓர் அழகிய கிராமம். ஆனாலும் இப்படியான கிராமத்தில் வாழ்பவர் எவருக்கும் மன நிம்மதி இல்லை காரணம் சண்டை சச்சரவுகள், வாக்குவாதங்கள் போன்றவை. இதற்கு முக்கிய காரணம் அவ்வூரில் உள்ள மக்களே. உயர்ந்த தொழிலை செய்பவன் உயர்சாதி என்றும், செருப்புதைப்பவர், காடுவெட்டுபவர், உடைஅழுத்துபவர் போன்ற கூலிவேலை செய்பவர்கள் தாழ்ந்த சாதியினர் என்றும் கூறி ஊரை இரண்டாகப் பிரித்து ஒதுக்கி வைத்துள்ளனர்.

ஓர் நாள் ஒரு கூலிவேலை செய்பவனின் மகள் தண்ணீர் எடுப்பதற்காக பக்கத்து ஊர் ஆற்றங்கரைக்கு சென்றாள் பின்பு நீரை எடுத்துக்கொண்டு வரும் வழியில் அவ்வூர் பெரியவர் கண்டார். உடனே குடத்தைப் பிடுங்கி நீரை ஊற்றவிட்டு. நீ சாதாரண கூலிவேலை செய்பவரின் மகள் நீ இந்த ஊருக்கு வந்து தண்ணீர் எடுத்து எங்கள் சாதியனரை வெறுப்பேற்றுகின்றாயா? உனக்கு எவ்வளவு தைரியம் இருந்தால் இப்படியான ஓர் வேலை செய்திருப்பாய் இனி இந்த ஊர்ப்பக்கம் வந்தாய் என்றால், நீ உயிரோடு போகமாட்டாய் என்று கடும்சொற்களால் கூறி அனுப்பிவிட்டார்.

அப்பிள்ளை கண்ணீருடன் வீடுநோக்கிப்புறப்பட்டது. ஏன் நீ அழுது புலம்பிக்கொண்டு வராய் என்று அப்பிள்ளையின் அப்பா கோட்டார். இல்லையப்பா. கிணற்றில் நீர் இல்லை அதனால் ஆற்றங்கரைக்கு தண்ணீர் எடுப்பதற்காகச் சென்றேன் அதைக் கண்ட ஒருவர் தண்ணீர் குடத்தைப்பிடுங்கிவிட்டு, நான் கொண்டு வந்த நீரை கீழே ஊற்றி என்னை கடும் சொற்களால் பேசி அனுப்பி விட்டார். அப்பா அவர் யார் அப்பா அவர் ஏன் அப்படி செய்கின்றார் என்று அப்பிள்ளை கண்ணீருடன் கேட்டது. அதற்கு அவளின் அப்பா இது காலம் காலமாக நடந்துவரும் பிரச்சினை என்றார். அதற்கு அப்பிள்ளை ஏன் அப்பா என்று கேட்டது. இரு மகளே நான் கூறுகின்றேன் என்று வீட்டுத்திண்ணையில் அமர்ந்தார். அதை என் நாவினால் எப்படி சொல்வது என்று கண்ணீருடன் கூறினார். இவ்வூரில் உள்ளவர்கள் எல்லோரும் நல்லவர்கள் ஏழை பணக்காரர் என்ற பாகுபாடின்றி எல்லோருடனும் ஒற்றுமையாக இருந்தனர். உடனே அப்பிள்ளை அப்பொழுது ஏன் அப்பா இன்று ஊர் இரண்டாகப் பிரிந்திருக்கின்றது என்று கேட்டது. கொஞ்சம் பொறு என்று கூறத்தொடங்கினார். ஊர் ஒற்றுமையாக இருந்த வேளையில் இவ்வூரில் திருமணம் ஒன்று நடைபெற்றது.

இவ்வூர் தலைவரின் மகளுக்கும் எமது ஊரைசேர்ந்த ஓர் தச்சுவேலை செய்பவனின் மகனுக்கும் திருமணம் நிச்சயமாகின, அத்தலைவரின் சொந்தக்காரர்கள் பலர் இக்கிராமத்திற்கு வந்திருந்தனர். திருமணம் நடந்த பின்னர் எல்லோரும் சாப்பிடுவதற்காக மேசையில் அமர்ந்தனர். அப்பொழுது அத் தலைவரின் சொந்தக்காரர்கள் மாப்பிள்ளை என்ன வேலை செய்கின்றார் என்று அவ்வூர்

தலைவரிடம் கேட்டார். அவர் இங்குதான் பண்ணையாரிடம் கூலிவேலை செய்கின்றார் என்றார். அதற்கு அவரின் சொந்தக்காரர்கள் நாம் எவ்வளவு உயர்ந்த சாதியினர். அதுவும் இவ்வூர் தலைவரின் மகளை எப்படி சாதாரண கூலிவேலை செய்பவனுக்கு திருமணம் செய்து வைத்தீர்கள் என்று கேட்டார்கள்.

ஏன் மாப்பிள்ளை நன்றாகப்படித்திருக்கின்றார், அவருக்கு திருமணம் செய்து வைத்தால் கணக்கு வழக்கு வேலைகளை செய்வார் என்றார். அதற்கு அவரின் சொந்தக்காரர்கள் நாம் எவ்வளவு உயர்ந்த குல சாதியினர் எமது மகளுக்கு போய் சாதாரண கூலிவேலை செய்பவன் அதுவும் தாழ்ந்த சாதியினர் அவனைப்போய் திருமணம் செய்துவைத்திருக்கின்றாய் நம்மமரியாதை என்னவாவது நாம் எப்படி நகரத்திற்கு சென்று தலைகாட்டமுடியும் நமது சாதியில் ஒருத்தன் கிடைக்கவில்லையா? இப்படி ஒரு திருமணத்தை எமது சாதியில் கண்டதே இல்லை. இவ்வூரில் தாழ்ந்த சாதியினரை ஒதுக்கி வைக்க மாட்டார்களா? என்று கேட்டார்கள். அதற்கு நாங்கள் அப்படியெல்லாம் செய்வதில்லை என்று கூறினோம். இப்படியான ஓர் ஊரை பார்த்ததே இல்லை என்றார்கள் வந்தவர்கள்.

இவற்றையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த மாப்பிள்ளை தாங்கள் தாழ்ந்த சாதியினர் என்று, உடனே விஷம் குடித்து உயிரை மாய்த்துக்கொண்டான். அதிலிருந்து இவ்வூர் இரண்டாக பிரிந்தது. நாங்கள் எத்றகாகவும் அவ்வூர் பக்கம் செல்வதில்லை அவர்களும் வருவதில்லை. அப்படி எதுவும் நடைபெற்றால் இவ்வூரில் சண்டைதான் ஏற்படும் என்று கவலையுடன் கூறினார். அதைக்கேட்ட அப்பிள்ளை இதற்கு விடிவுகாலமே இல்லையா அப்பா நாம் எப்போது அவ்வூருக்கு செல்வது, எப்படி ஒற்றுமையாக வாழ்வது என்று கேட்டாள், அதற்கு அப்பிள்ளையின் அப்பா இதற்கு கடவுள்தான் வரம் தரவேண்டும் என்று கூறிவிட்டுச் சென்றார்.

ஓர் நாள் அவ்வூருக்கு ஆசிரியர் ஒருவர் வந்தார் பாடசாலையில் சில மாணவர்கள் கீழே அமர்ந்திருந்தானர் சிலமாணவர்கள் மேலே அமர்ந்திருந்தனர். அவருக்கு ஒன்றும் புரியவில்லை ஏன் இவ்வாறு அமர்ந்திருக்கின்றீர்கள் என்று கோட்டார். அதற்கு ஒரு பிள்ளை எழும்பி அவர்கள் உயர்ந்த சாதியினர். இவர்கள் தாழ்ந்த சாதியினர் என்று கூறினார். ஆசிரியருக்கு ஒன்றும் புரியில்லை. சரி எல்லோரும் பாடத்தை கவனியுங்கள் என்று பாடம் கற்பித்தார்.

ஓர் நாள் பூங்சோலை கிராமத்தில் கோயில் நகை, பணம் சிலைகள் என்பவற்றை திருடுவதற்காக வேறு ஊரில் இருந்து கள்வர் கூட்டம் ஒன்று ஊரிற்குள் நுளைந்தது. அப்பொழுது இராத்திரி எல்லோரும் உறங்கிக்கொண்டிருந்தனர். நாய்கள் மிகவும் சத்தமாக குரைத்தது. உடனே அவ்வூர்த் தலைவர் பார்வையிடுவதற்காக சென்றார். செல்லும் வழியில் கோயில் கதவு திறந்திருந்தது. கோவிலினுள் சென்று பார்த்தபோது கள்வர்கள் நகைகள், பொருட்கள் அனைத்தையும் மூட்டையில் கட்டிக்கொண்டிருந்தனர் உடனே எல்லோரும் ஓடிவாருங்கள் என்று கத்தினார். அவ்வூரில் உள்ளவர்கள் ஒன்றும் புரியாமல் ஓடிவந்தனர். அதைக்கண்ட திருடர்கள் அவர்களை அடித்து, அவர்களை கம்பு, கட்டை என்பவற்றால் காயப்படுத்தினர். ஓடி

வந்த எல்லோரும் கீழே அடிபட்டுக் கிடந்தனர்.

இதைக்கண்ட ஆசிரியர் மிகவும் கவலைப்பட்டார். உடனே அவருக்கு ஊரில் ஒதுக்கிவைத்த மக்கள் ஞாபகம் வந்தது. அவர்கள் எல்லோரையும் அழைத்து திருடர்களை எப்படியாவாது கண்டுபிடித்து கோயில் சொத்துக்களை பெறலாம் என்று எண்ணி அங்கு சென்று உடனே எல்லோரும் வாருங்கள் அங்கு கோயிலில் பெரிய பிரச்சினை நடக்கின்றது என்றார். அதற்கு அவர்கள் நாங்கள் கோயிலுக்கே செல்வதில்லை, அதுவும் நாங்கள் தாழ்ந்த சாதியினர் நாங்கள் வரமாட்டோம் என்றனர். அவ் ஆசிரியருக்கு கோபம் வந்தது. அது என்ன உயர்ந்த சாதி, தாழ்ந்தசாதி நீங்கள் பழையகோபத்தை மறந்துவிடுங்கள். நீங்கள் இவ்வூர் மக்கள் இவ்வளவு காலமாக ஒற்றுமையாக இருந்தீர்கள் தானே அதை முதலில் நினைத்துப்பாருங்கள். அவர்கள் உங்களுக்கு எவ்வளவு உதவி செய்திருப்பார்கள். இவ்வாறு ஊர் இரண்டாகப் பிரிந்திருந்தால் ஏனையோருக்கு உங்கள் மீது பயம் இல்லாமல் போய்விடும் பின்பு இந்த இடத்தை நீங்கள் இழக்க நேரிடும் ஒன்றுபட்டால் தான் உண்டு வாழ்வு இல்லையென்றால் இவ்வாழ்க்கையையே வாழமுடியாது என்று கூறினார். அதைக்கேட்டு மனம் மாற்றமடைந்து எல்லோரும் ஓடினார்கள். ஓடிச்சென்று திருடர்களைப்பிடித்து பொருட்கள் எல்லாவற்றையும் பெற்றுக்கொண்டனர். அவ் ஆசிரியர் நடந்தவற்றை அவ்வூர் தலைவரிடம் கூறினார். பின்பு எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒற்றுமையாக வாழ்ந்தனர்.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பதை எல்லோரும் புரிந்து கொண்டனர்.

T. மைதிலி
கணபதி இந்து மகளிர் மகாவித்தியாலயம்
கொட்டாஞ்சேனை

Well wishes from

S. NITHARSHANAN
4C

பாடசாலைகளுக்கிடையிலான போட்டியில் மேற்பிரிவில் முதலாமிடம் பெற்ற சிறுகதை

"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்"

புழுதியும், அனல் கக்கும் அகோர வெயிலும் மனிதரை மட்டுமன்றி விலங்குகளையும் அசௌகரியத்திற்கு உள்ளாக்கியிருக்க வேண்டும். வெம்மையைத் தணித்துக் கொண்டு, தம்மீது படிந்திருந்த புழுதியைப் போக்குவதற்காகவோ என்னவோ, காக்கைகள் தூர்ந்து போயிருந்த குளத்திலே குளித்துக் கொண்டிருந்தன. அங்கிருந்து பார்த்தால் தெரியும். அகதி மக்களின் வாழ்விடங்கள், தொடர் வீடுகள், அவற்றின் மீது விரித்திருந்த தகரங்கள், சூரியக் கதிர்களை உள்வாங்கி மின்னிக்கொண்டிருந்தன வாழ்ந்து கெட்ட மனிதர்கள் என்று கூறமுடியாது. ஊழ்வினைப் பயனால் வாழ்வைத் தொலைத்த சனங்கள்... எங்கும் அகோரம்.

முட்கம்பிகளுக்குள் அடைக்கப்பட்ட அந்த பிரதேசத்திலே, கூட்டத்தோடு கூட்டமாக வாழும் நிலையில் ஒரு குடும்பம். "அம்மா பசிக்குது, பால் தாங்கோ" என்றது இரண்டு வயதுக்குழந்தை. குழந்தை தானே அதற்குத் தெரியுமா? நாட்டுச் சூழ்நிலை. வசந்தியின் உதடுகள் ஒட்டிக்கொண்டன. வார்த்தைகள் வெளிவரவில்லை. "எல்லாம் காலம் செய்த கோலம். "கடவுள் செய்த குற்றம்". தூரத்தே இடிந்து கைவிடப்பட்ட முருகன் கோயில், அதுவும் அம்முகாமிற்குள்ளேயே அமைந்திருந்தது தன் உள்ளக்குமுறல்களை மானசீகமாக முருகனிடம் சமர்ப்பித்தாள் வசந்தி.
"உனக்கென்ன முருகா, நீயும் அகதியா?... என்று கூட அவள் நினைத்திருக்கக்கூடும். இங்கு யுத்த அவலம் என்றால் முருகனுக்கு தஞ்சம் புக இடமா இல்லை. தங்குவதற்கு "ஆறுபடை வீடு கொண்ட குமரன் அல்லவா அவன் எண்ணற்ற நைவேத்தியங்கள், பூஜைகள், அபிஷேகங்கள், பாலபிஷே..." வசந்தியின் நா வேதனை மிகுதியால் வார்த்தைக்களைத் தொடரமுடியாமல் தவித்தது. குடம் குடமாக பாலபிஷேகம் ஆண்டவனுக்கு, பாலின்றி பட்டினியால் வாடும் மழலைகளின் அழுகுரல், ஆண்டவனுக்கு எட்டாதிருப்பது ஏனோ? தெரியவில்லை.

கல்வியில் உயரவேண்டும் என்ற ஆயிரம் கனவுகளுடன் "மண்ணில் நல்ல வணணம் வாழலாம்" என்ற நோக்கோடு எத்துணை சவால்களைக் கடந்து வந்தும் பலனில்லை. யுத்த சூழ்நிலை அங்கு சுற்றித்திரியும் காக்கைகளுக்கிருக்கும் சுதந்திரம், மனிதர்களுக்கு இல்லாமற் போய்விட்டது. தன் காதலனையே கரம் பிடித்து, சொந்த ஊரிலேயே சுற்றம் சூழ மகிழ்ச்சியாக வாழ்ந்த வசந்தியின் நிலை, இன்று தடம் புரண்டு விட்டது.
கண்ணீர்த்துளிகளைத் துடைத்துக் கொண்டு உள்ளே நுழைந்தாள். பால் வேண்டியழுத பிள்ளை பசியின் பிடியிலே கண்ணயர்ந்து கொண்டிருந்தது. அங்கும் இங்கும் இடம்பெயர்ந்து, அகதியாக சொந்த பந்தங்களையும் தொலைத்தாலும், "வாழ வேண்டும்" என்ற குறிக்கோள் மாறிவிடவில்லை என்றாலும் "தன் பிள்ளையின் பசியை ஒரு தாயால் சகிக்க முடியுமா?...
கதிரவன் மறைந்து கொண்டிருக்க, காரிருள் மெல்ல மெல்ல சூழ்ந்து

கொண்டிருந்தது. பௌர்ணமி நிலவு ஒளி வீசிக்கொண்டிருந்தது. இருந்தாலும், அந்த கொட்டில் வீட்டில் விளக்கு சுடர்விட்டு எரிந்து கொண்டிருந்து. தன் கவலைகளையெல்லாம் ஒரு புறம் தள்ளிவிட்டு மூத்த மகன் சுந்தரிற்கு, எஞ்சியிருந்த பழஞ்சோற்றை ஊட்டினாள் வசந்தி தன் தாயின் மனவேதனைகள், அகதி முகாம் வாழ்வின் ஆறாத வடுக்கள் என்பன சுந்தரின் தோற்றத்திலே நன்கு வெளிப்பட்டன.

அகதி முகாமினுள்ளும் கலைமகன் கடாட்சம் இருந்தது அங்கிருந்த மாணவர்கள் கல்வி கற்க ஓலையால் வேயப்பட்ட கொட்டில்கள் இன்றும் சில தினங்களில் புலமை பரிசில் பரீட்சை, பூரண சந்திரனின் ஒளி போதவில்லை என்று குப்பி விளக்கின் ஒளியில் தன் பாடங்களை மீட்டிப்பார்த்தான். அந்த முருகன் கோவிலிலும் ஓர் விளக்கு பிரகாசித்துக்கொண்டிருந்தது. ஆனாலும் மனித வாழ்வில் ஒளியில்லை.

நித்திரைக்குச் சென்ற சுந்தரை சுற்றி நினைவுள் வட்டமிட்டன. நண்பகல் தாண்டியபோது, தன் தம்பி ஏக்கத்தோடு பால் கேட்கையில், தன் தாய் அடைந்த வேதனை என்பனவையெல்லாம் அவனை வெகுவாகப் பாதித்திருந்தது. சிறுவயதில் அவன் படித்த ஓர் கதை "பன்றிக்குட்டிகளின் பசிப்பிணியைப் போக்க, தாய் பன்றியாக வடிவங்கொண்டு, பாலூட்டி, பசிப்பிணி துடைத்த பரம் பொருளின் கதை அகதி முகாமை நோக்கி ஆண்டவனே வர அஞ்சுகிறான்.

சுந்தரின் கனவுகள் பலித்துவிட்டன. அவன் எதிர்பார்த்தவை வீண்போகவில்லை. கடுமையாகப் படித்ததால், அகில இலங்கை ரீதியிலே கூடிய மதிப் பெண்களைப் பெற்று, "ஜனாதிபதி புலமைப் பரிசில் விருதிற்கு" தெரிவு செய்யப்பட்டிருந்தான். இருந்தாலும் தன் குடும்ப நிலையை எண்ணிக்கலங்கினான். தந்தையையும் இழந்து, உடைமைகளைப் பறிகொடுத்து வாழவேண்டிய நிலை. தமிழன் தன், தன்மானத்தை அடகு வைத்துவிட்டான், சூழ்நிலைதான் காரணம். அது எப்போது மீட்கப்படும் என்பது கேள்விக் குறிதான்...
கொழும்பிற்கு வந்த முதல் நாள், தன் திறமைக்கான உழைப்புக்கான விருதைப் பெற்றுக்கொள்ள தலைநகரிற்கு வந்திருந்த சுந்தரின் கண்கள் எங்கோ தரித்துவிட்டன. ஸ்ரீ பொன்னம்பலவானேசர் வருடாந்த பாற்குட பூஜை என்ற வாசகம் தெரிந்து தன் தம்பி பால் கேட்டழுத சம்பவம் ஞாபகத்திற்கு வந்தது.

ஆண்டவனுக்கு பாலால் அபிஷேகம் தேவையில்லை பாலின்றி தவிக்கும் குழந்தைகளின் பசியை முதலில் போக்குங்கள் "குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று..."
மனிதனின் அவலங்கள் தொடரும் வரையில், தமிழரின் நிலைகுலைந்த வாழ்வு சீர்செய்யப்படும் வரையில், "மண்ணில் நல்ல வண்ணம் வாழ முடியுமா?" இறைவனே பதிலளிக்கட்டும்....

S. விராஜ் ஷேவின்
விஜயரட்ணம் இந்து மத்திய கல்லூரி
நீர்கொழும்பு

பாடசாலைக்குள்ளான போட்டியில் மத்திய பிரிவில் முதலாமிடம் பெற்ற கவிதை

வண்ணக்கனவுகள்

சின்னஞ்சிறு வயதினிலே
வண்ண வண்ணக் கனவுகளாய்
எழுந்திட்ட எண்ணங்கள்
பசுமரத்தில் பதிந்த ஆணிகள்

கடந்து செல்லும் நிமிடங்களில்
எழுந்த அந்த எண்ணங்கள்
தடம் பதித்தன மனதிலே
வண்ணக் கனவுகளாய்

கனவுகள் கலைத்தோடும்
காலங்கள் கைவிடும்
நாட்கள் வருமென்று
நினைத்ததில்லை எந்தன் மனது.

எமக்கெதிராய் பெரிய சீற்றம் - என்
கனவுகளில் பாரிய மாற்றம்
இதுதான் -
வாழ்க்கை எனும் கணக்கின் தேற்றம்

செல் வீசும் சத்தத்தின் நடுவில்
சொல் சேர்க்கத் துடித்தது நெஞ்சு
பட்ட துன்பம் நிறைந்த போதும்
கனவுதனைக் கைவிடவில்லை.

இரும்புக் கூட்டுக்குள்
முடக்கப்பட்டேன் - ஆனாலும்
கனவுகள் முடங்கவில்லை
வானின் பறந்தன.

வானில் பறந்தன 'ஹெலி'கள்
காலில் விழுந்தன 'செல்'கள்
காதில் கேட்டன ஓலங்கள். இவை
காலம் செய்த ஜாலங்கள்

கனவுகள் கலையப்படவில்லை
வண்ணங்கள் கரைந்துவிட்டன.

நிலையில்லா வாழ்வுதனில்
என் கனவுகள் தான் நிலைத்திடுமோ?
எண்ணங்கள் கிட்டிடுமோ?
என் சொந்த ஊர் கண்ணில் பட்டிமோ?

S. அர்ஜுன்குமார்
10 "D"

With Best Compliments From :

LOTUSSE ACADEMY

Kotahena, Colombo - 13,
Tel : 2421166

With Best Compliments From :

M. SEYON

With Best Compliments From :

M. S. SENTHURAN

With Best Compliments From :

SIVA COMPUTERS & ELECTRONICS (PVT) LTD.

14/2-3, First Cross Street,
Second Floor,
(Spencer House Building)
Colombo - 11, Sri Lanka.
Tel : 011-2385177
Fax : 011-2386757
E-mail : sivacomp@sltnet.lk
MSN : siva_computer@hotmail.com

பாடசாலைக்குள்ளான போட்டியில் மேற்பிரிவில் முதலாமிடம் பெற்ற கவிதை

சுதந்திரமே உன் விலை என்ன?

சுதந்திரம்,
தமிழனின் எட்டாக்கனி
கொட்டாவி விட்டு விட்டே
களைத்துப்போய் விட்டான்

ஆற்றிலிருந்து மீண்டு
சேற்றிலே விழுந்துவிட்டான்
நாயிடம் மீண்டு
நரியிடம் மாட்டிக்கொண்டான்

எங்கள் சிறைகளுக்கு
இடமாற்றம்
அவர்களின் வலயத்திலிருந்து
இவர்களின் வலயத்திற்கு

அடைக்கலம் கொடுத்த முகாம்கள்
அடைத்து வைத்து அழகு பார்க்கின்றன

தமிழினம்
ஆளப்பிறந்த இனம்
மன்னிக்கவும்
அடுத்தவன் ஆளப்பிறந்த இனம்
நேற்று அவர்கள்
இன்று இவர்கள்
நாளை எவர்கள்?

சுதந்திரம்,
அண்ணார்ந்து பாத்தே
கழுத்து சுழுக்கிவிட்டது.
எட்டாத உயரத்திலிருந்து
எட்டிப் பார்த்து
சிரிக்கிறது...

J. ஹர்சாந்
11 "D"

பாடசாலைக்குள்ளான போட்டியில் கீழ்பிரிவில் முதலாமிடம் பெற்ற கட்டுரை

சிவ சின்னங்கள்

சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயம் சைவ சமயம் ஆகும். இச் சைவசமய ஒழுக்கங்களில் இன்றியமையாதது எமது சமயத்துக்குரிய சின்னங்களாகிய சிவ சின்னங்களை நாம் அணிந்தால், அவை எமது அஞ்ஞானத்தைப் போக்கி, எம்மைத் தீமைகளிலிருந்து பாதுகாப்பதுடன் இறைவனையும், இறைவன் உயிர்கள் மீது கொண்டுள்ள அளவில்லாத கருணையையும் எமக்கு நினைவு படுத்துகின்றன. சிவ சின்னங்களாகத் திருநீறு, உருத்திராக்கம், சந்தணம், குங்குமம், பஞ்சாட்சர மந்திரம் ஆகியவை காணப்படுகின்றன. முதலில் நாம் திருநீற்றைப் பற்றிய தகவல்களைப் பார்ப்போம்.

சிவ சின்னங்களுள் ஒன்றாகிய திருநீற்றுக்கு 'விபூதி, பசிதம், பசுமம், இரட்சை, ஷாரம்' ஆகிய பெயர்களும் உண்டு. தன்னை அணிவோருக்கு மேலான செல்வத்தைத் தருவதால் விபூதி என்ற பெயரிலும், ஒளியைத் தருவதால் பசிதம் என்றும் தன்னைத் தரிக்கும் எல்லா உயிர்களின் பாவங்களையும் எரித்து நீறாக்குவதனால் பசுமம் என்றும், தன்னைத் தரிக்கும் உயிர்களைக் காத்து இரட்சிப்பதனால் இரட்சை எனவும் ஆன்மாக்களின் மலங்களை நீக்குவதால் ஷாரம் என்றும் திருநீறு அழைக்கப்படுகின்றது.
குற்றமற்ற பசுவின் சாணத்தை எரிக்கும் போது கிடைக்கும் வெண்ணிறமான திருநீற்றையே நாம் அணிய வேண்டும். வெள்ளை நிறம் தூய்மைக்கு அடையாளம். எனவே நாம் திருநீற்றை அணிவதால் எமது அகமும், புறமும் தூய்மை அடைகின்றன.
திருநீற்றை நாம் பத்திரப்படுத்தி வைக்கும் போது ஒரு புதிய பாத்திரத்தை எடுத்து அதனுள் திருநீற்றை இட்டு நறுமணமுள்ள மலர்களைத் தூவி வைத்திருக்க வேண்டும்.
நாம் அணியத் தேவையான அளவு திருநீற்றை மட்டும் தனியாக எடுத்துப் பட்டுப்பையிலேனும் [illegible] த்திலேனும் வைத்திருக்கலாம். திருநீற்றை வைத்திருக்கும் இடம் சிவாலயமாகவும் திருநீறு சிவனாகவும் மதிக்கப்படும் என்று பெரியோர் கூறுவர்
திருநீற்றை நாம் இரண்டு முறைகளில் அணியலாம். முதலாவது உத்தூளணம் ஆகும். திருநீற்றைப் பரவிப் பூசுதலையே இம்முறை குறிக்கும். இரண்டாவது முறை 'திரிபுண்டரம்' ஆகும். திருநீற்றைக் குழைத்து மூன்று குறிகளாகக் குறித்தலையே இம்முறை குறிக்கும் திட்சை பெற்றவர்கள் மாத்திரமே இவ்வாறு திருநீற்றை அணியத் தகுதியுடையவர்களாவர் இம்முறையில் திருநீற்றைப் பூசும் போது குறிகள் விளையாதும், இடையறாகும், ஒன்றை ஒன்று தீண்டாமலும், ஒவ்வோர் அங்குல இடைவெளியிலும் இருக்க வேண்டும். திரிபுண்டர முறையில் திருநீற்றை அணியும் போது நாம் உச்சி, நெற்றி, மார்பு, கொப்பூழ், முழங்கால்கள் இரண்டு, விலாப்புறங்கள் இரண்டு, முதுகு, கழுத்து ஆகிய பதினாறு இடங்களிலும் விபூதியைத் தரிக்கலாம்.
விபூதியைத் தரிக்கும்போது நாம் உத்தம திக்குகளான வடக்கு முகமாகவேனும்,

கிழக்கு முகமாகவேனும் நின்று விபூதியைத் தரிக்க வேண்டும். அத்துடன் நாம் விபூதியை அணியும்போது இறை சிந்தனையுடன் விபூதி நிலத்திலே சிந்தா வண்ணம் அண்ணாந்து "சிவ சிவ என்று கூறியவாறு அணிய வேண்டும். விபூதி நிலத்திலே சிந்திவிட்டால், விபூதியை எடுத்துவிட்டு அந்த இடத்தைச் சுத்தி செய்ய வேண்டும்.
இங்கு சாணம் ஆன்மாவையும் சாணத்திலுள்ள அழுக்குகள் ஆன்மாவோடு கூடிய கலங்களையும், நெருப்பு திருவருளையும், எரிதல் திருவருட் பதித்தலையும் சாணம் எரிந்து நீறாகியவுடன் உண்டாகும் சுத்தமான திருநீறு ஆன்ம மலங்கள் நீங்கி வரும் பரிசுத்தமான ஆன்மாவையும் குறிக்கின்றன.

திருநீற்றின் மகிமைகளைப் பற்றித் திருஞானசம்பந்தர் அருளிய திருநீற்றுப் பதிகத்தில் விரிவாகவும் வேறு சில நூல்களில் பரவலாகவும் கூறப்பட்டுள்ளது.
சிவபெருமானும், வானுலகத் தேவர்களும் திருநீற்றை அணிந்து இருப்பதாக இறைவனே நேரில் கண்ட சிவனடியார்கள் கூறியுள்ளனர். தேவர்கள் திருநீற்றை அணிந்து இருப்பதையே திருஞானசம்பந்தர், "வானவர் மேலது நீறு" என்றும் "மேலுறைத் தேவர்கள் மெய்யது வெண்பொடி நீறு" என்றும் பாடியுள்ளார்.

சிவபொருமான் திருநீறு அணிந்திருத்தலைத் திருஞானசம்பந்தர் "காடுடைய சுடலைப் பொடி பூசி" என்று தனது தேவாரத்தில் பாடியுள்ளார். காடுடைய சுடலைப் பொடி பூசி என்பது, "சாணாத்தால் செய்யப்பட்ட எருக்கட்டிகள் சுடுகாட்டில் அடுக்கப்பட்டு பின் அவை எரித்தும் உண்டாகி திருநீற்றைப் பூசி" என்று பொருள்படும். ஈறைவனும், தேவர்களும் திருநீற்றை அணிந்திருப்பதால் நாமும் திருநீற்றை அணிய வேண்டும்.

குரு, சிவனடியார் முதலியோர் திருநீற்றைத் தந்தால் நாம் அமைதியாக, அடக்கத்துடன் எமக்குத் தந்த சிவனடியாரையோ அல்லது குருவையோ வணங்கி இரு கைகளையும் நீட்டித் திருநீற்றை வாங்கி அணிய வேண்டும்.
திருநீற்றை நாம் சந்தியகாலங்கள் மூன்றிலும் (காலை, உச்சி, மாலை) , நித்திரைக்கு முன்னரும் , பின்னரும், சூரிய உதயத்தின் போது, சூரிய அஸ்தமனத்தின் போதும், உணவுக்கு முன்னும், பின்னும், நீராடிய பின்னரும், பல்துலக்கிய பின்னரும், பூசைகளின் போதும், எமது கடமைகளைச் செய்யப் போகும் போதும், சிறப்பு நிகழ்ச்சிகளின் போதும் கட்டாயமாக அணிய வேண்டும்.

இப்போது நாம் உத்திராக்கத்தைப் பற்றிச் சில தகவல்களைப் பார்ப்போம்.
உருத்திராக்கம் என்பது உத்திரனது கண் எனப் பொருள் படும். திரிபுரத்தசுரர்களால் பல துன்பங்களுக்கு உள்ளான தேவர்கள் சிவபெருமானிடம் சென்று முறையிட்டனர். இதனால் கேட்ட சிவபெருமானின் மூன்று கண்களிலிருந்தும் சிந்திய மணிகளையே 'உருத்திராக்கம்' என்பர். இதனை அணிவதால் நாம் சைவ நெறியிலிருந்து பிறழாமற் காக்கப்படுவோம். அத்துடன் இது இறைவன் உயிர்களின் மீது கொண்டுள்ள பெருங் கருணையையும் எமக்கு நினைவு படுத்துகின்றது. இதனை அணியாமல் பூசை செய்வோர் பயனைப் பெறாது ஒழிவர்.

உருத்திராக்கம் பொன் நிறம், கரு நிறம், கபில நிறம், ஆகிய நிறங்களில் காணப்படுகின்றது. ஒரு முகம் முதல் பதினாறு முகங்களையுடைய உருத்திராக்க வகைகள் இருக்கின்றன. ஒவ்வொரு முகத்திற்கும் ஒரு அதிதேவதை இருப்பதாகக் கூறப்படுகின்றது. ஒரே இன உருத்திராக்க மணிகளாலான மாலைகளே அணியத் தக்கவை ஆகும். சுமங்கலிகளுக்குத் திருமாங்கலயம் புனிதமானது போலச், சிவனடியார்களுக்கு உருத்திராக்கம் புனிதமானது ஆகும். அத்துடன், நாம் குங்குமம், சந்தணம் ஆகிய சிவசின்னங்களையும் அணிய வேண்டும். இவற்றை நாம் திருநீற்றின் மேல் தரிக்கலாகாது. இவற்றை நாம் புருவ நடுவில் தரிக்கலாம்.
புரவநடுவில் தான் பல நரம்புகள் சந்திக்கின்றன. இங்கு நாம் குளிர்மையான சந்தணத்தை அணிவதால் வழமையாகச் சூடாகி இருக்கும் நரம்புகள் குளிர்மையடையும் சந்தணதின் மேல் குங்குமம் அணியப் படுகின்றது.
மற்றைய சிவசின்னமாகிய 'பஞ்சாட்சர மந்திரத்தை' நாம் உச்சரிக்க வேண்டும். நாம் சிவசின்னங்களை அணிந்து, பாவங்களைச் செய்யாமல் அனைத்துச் செல்லங்களையும் பெற்று வாழ்வாங்கு வாழ்வோமாக!

B. ஹரிஸ்
8 "D"

With Best Compliments From :

The Royal Bakery

202,Galle Road,
Wellawatta, Colombo - 06, Sri Lanka.
E-mail : bandula@Igo.lk
Web : www.royalbakery.lk

Phone : 2500991, 2589176, 2588476
Fax : 2589176
Mobile : 0777-350099

Best Wishes From

◆

M. PIRAVEEN
10C

&

M. THANUSHAN
7C

சிவசக்தி
2010

With Best Compliments From :

ARUN NAVARATNARAJAH
1D

GOOD LUCK FROM

P. MITHUSHAN
8 'C'

Best Wishes From

M. MADUSHAN
7 'C'

Well Wishers

B. BALAMURALI

சிவசக்தி
2010

Best Wishes From

M. MADUSHAN

7 'C'

With Best Compliments From :

SHREE DAVE TEX

Dealers in Textiles Specialist in India wedding
Cotton Saree, Shalwar Kamees, Choly Kit

188 2/N, Aslam Market,
Keyzer Street,
Colombo - 11.

176 1/46, 1st Floor,
Attarmahal, Super Market,
Keyzer Street, Colombo - 11.

Well Wishers

With Best Compliments From

K. VENUGANAN

1D

விஜய்
2010

பாடசாலைக்குள்ளான போட்டியில் மத்திய பிரிவில் முதலாமிடம் பெற்ற சிறுகதை

தன்வினை தன்னைச் சுடும்

கும்மிருட்டில் விளக்கொளியில் அவள் ஏதோ ஒன்றைத் தேடிக் கொண்டு இருந்தாள். விளக்கின் ஒளி ஒரு பக்கம் வெளிச்சம் கொடுக்க அங்கு ஒரு பக்கம் மின்மினிப்பூச்சிகள் விட்டுவிட்டு ஒளிந்தன. அவளின் மனதில் "நான் ஒரு எழுதப் படிக்கத் தெரியாத ஆள்தான். அதுக்கா என்ட மகனையும் மேல படிக்க அனுப்ப மாட்டாரா? முதல் பெண்சாதிண்ட மகன் என்ரு அவனை மட்டும் தூக்கிப் பிக்கிறாரே" தீடீரென்று ஏதோ ஒன்றைக் கண்ணுற்றவளாய் தன் கருவிழிகள் இரண்டையும் அசைக்காமல் கிழே குனிந்தாள். பின் ஒரு கிழமைக்கு முன் வீட்டில் நடந்ததை யோசித்தாள்.

"என்ட மகனை ஏன்" அனுப்பேவா? என்று கத்தினாள். "செல்லம்மா! ஏப்ப பார்த்தாலும் கத்திக்கொண்டு இருக்காதே" என் செல்லம்மாவின் கணவன் கோபத்தில் கத்தினான். "பின்ன, உங்கட முதல் பெர்சாதின்ட மகனை அனுப்புறத்துக்கு எவ்வளவு கஷ்டப்படுகிறீர்கள்? அவனைப் படிக்க வைக்குறதுக்கு என்ட மகன் ரகுவைப் படிப்பிக்கலாமே." ஏன செல்லம்மா கூற, "அவன் நல்லாய் படிப்பான், அனா ரகு படிக்க மாட்டானே. ரகுவை அனுப்புறதை விட குமாரை அனுப்புறது நல்லம்" என செல்லம்மாவின் கணவன் பதிலளித்துவிட்டு கையிலிருந்த கோப்பையை மேசையில் பலமான சத்தத்துடன் வைத்தான். "ரகுவை 'இங்லனட்' இற்கு அனுப்பினா அவனும் ஒழுங்காப் படிப்பான்." செல்லம்மாவுடன் விவாதம் புரிய இஷ்டம் இல்லாமல் கோபத்தின் தன் அறைக்குச் சென்றான்.

ஞாபகங்களை மீட்டெடுத்த செல்லம்மா, ஏதோ யூசித்தவளாய் அலுமாரியில் இருந்த பத்திரங்களை விளக்கொளியின் மூலம் உற்றுக் கவனித்தாள். வாயில் ஏதோ முணுமுணுத்துக்கொண்டு, அந்தப் பத்தரங்களுடன் கதிரையில் அமர்ந்தாள். "தனியா விட்டுட்டு ஊருக்கு வேற போய்ட்டீனம். 'கரன்ட்' உம் மழை பெய்றதால ஒழுங்கா வரேல என்று நினைக்கிறேன். ஆப்பவே 'ட்ரிப்' இல பிரச்சினை என்று சொன்னனான். கடைசிவரைக்கும் அவர் என்றும் செய்யெல. இப்ப மழை பெர்சு சோட்ட ஆயிட்டு." என்று மனதில் கருவிக்கொண்டு இருந்தாள். பின் "நான் என்ன சொன்னாலும் செய்றது இல்ல. அனா குமார் சொன்னா மட்டும் எல்லாம் செய்றது." பின் பத்திரங்களைப் பார்த்தவாறே தன் கண்களை மூடினாள். மீண்டும் அவனது மனதில் நினைவலைகள் பாயத் தொடங்கின.

செல்லம்மாவுடன் விவாதம் புரிய இஷ்டம் இல்லாமல் தன் அறைக்குள் சென்ற முருகேசனை செல்லம்மா பின் தொடர்ந்தாள். "உங்கள முடிவை சொல்லுங்கோ! ரகுரைவயா? குமாரையா? அனுப்புறது?" என செல்லம்மா சற்று தணிந்த குரலில் கேட்டாள். முருகேசன் கோபமாக செல்லம்மாவை முறைத்துப் பார்த்தான். செல்லம்மாவும் நிலைமையை அறிந்து சிறிது நேரம் அமைதியாகவே இருந்தாள்.

"அப்பா! அப்பா! என குமார் வீட்டுக்குள் நுழைந்தான். குமாரின் குரலைக் கேட்டதும் ஏதோ வெறுப்பு வந்தவளாய் செல்லம்மா முகத்தைச் சுளித்துக்கொண்டு அறைக்குள்ளேயே நின்றாள். முருகேசன் குமாரின் அருகில் சென்று, "என்னது"? என வினவினான். "அப்பா! ரவி மாமா குடுத்துவிட்டார்". என்று ஒரு பையை

முருகேசனிடம் குமார் கொடுத்து விட்டு அருகில் இருந்த கதிரையில் இரந்தான். பின் "அப்பா! இலண்டன் போறதுக்குத் தேவையான எல்லா டொக்யூமன்றும் இதுல இருகாம் "என குமார் கூறினான். "அப்படியா!" என முருகேசன் கூறிவிட்டு அறைக்குள் கலைதோய்ந்த முகத்தில் புன்னகையை வரவழைத்துக் கொண்டு சென்றான். குமார் அங்கேயே இருந்தாள்.

"என்னதாம்!" என செல்லம்மா ஆவலுடன் கேட்டாள். முருகேசனும் அதைப் பற்றிக் கூறினான். அவன் கூறியதும் சில நிமிடங்களில் அறைக்குள்ளே போர் மூண்டது. இறுதியாக "செல்லம்மா'! வுாயை மூடு எப்ப பார்த்தாலும் ஏன் இப்படி இருக்கிறாய்!" என முருகேசன் கத்திவிட்டு அறையில் இருந்து வெளியேறினான்.
இவ்வாறே செல்லம்மாவின் நினைவலைகள் ஓய்ந்தன. பின் ஏதோ கோபம் வந்தவளாய் அநதப் பத்திரங்களை எரித்தான். "இன்னும் கொஞ்ச நேரத்தில் வந்துடுவீனம். என்ன நடக்குதுண்டு பார்ப்போம்" என முணுமுணுத்தாள்.

"அம்மா! அம்மா!" என ரகு வீட்டிற்குள் நுழைந்தான். "என்னப்பா நீ மட்டும் வந்திருக்கிறாய்?" "அப்பாவும், அண்ணாவும் நாளைக்கு விடிய தான் வருவீனம்". "அப்படியா? அந்த இரண்டு பேரும் வரப்போயினம்?" என செல்லம்மா கூறிவிட்டு முகங்சுளித்தாள். "அம்மா! உங்களுக்கொன்று தெரியுமா? அப்பாவும், அண்ணாவும் கதைத்து என்னையே 'லண்டன்'இற்கு அனுப்ப முடிவெடுத்துட்டீனம்." ஏன ரகு கூற, செல்லம்மா திகைத்தாள். "அதுமட்டமில்லை அம்மா! அன்றைக்கு ரவி மாமா கொடுத்த "டொக்யூமண்டஸ்" ஐ எடுத்துக்கொண்டு நான் நாளைக்கு எம்பர்சிக்குப் போகணும். அதெல்லாம் எங்கம்மா இருக்குது? ஏன ரகு கூற, திகைத்தவளாய் செல்லம்மா தான் சுட்டு எரித்த சாம்பலை விளக்கொளியில் பார்த்தாள். அந்த சாம்பல் அவள் மனதைச் சுட்டது.

J. மேருஜான்
10 "D"

With Best Compliments From :

M. HARI RAMANA GOKULA

4C

பாடசாலைக்குள்ளான போட்டியில் மேற்பிரிவில் முதலாமிடம் பெற்ற சிறுகதை

வேலியே பயிரை மேய்ந்தது

கடை மூடும் நேரம் வேலுவிற்கு அந்த நாள் வேலை அலுத்துப் போய்விட்டது. மீண்டும் பணம் சேர்த்து கடையை மீள அமைத்துவிட அவனுக்கு போதும் என்று ஆகிவிட்டது. இதில் அவனது நண்பன் செய்த துரோகம் இன்னும் கண்முன் எரிந்து கொண்டிருந்தது. அவனால் எவ்வாறு எனக்கு இப்படி செய்யமுடியும்? எவ்வாறு? ஏன்! துரோகி...

வேலு கடையின் கதவை தாப்பாள் இட்டுக்கொண்டான். மீண்டும் ஒரு முறை பூட்டிவிட்டேனா என ஐயத்துடன் பூட்டை இழுத்துப்பார்த்தான். மீண்டும் ஒருமுறை எனது கடையை இழக்க விரும்பவில்லை அவன். ரோட்டோரமாக வீட்டை நோக்கி நடந்து சென்றான். இன்னும் சந்திரனின் துரோகம் மனதை விட்டு அகலவில்லை. மறக்கு முயற்சி செய்தும் பலனில்லை. "வேலு! அதைப் பற்றி நினைக்காதே, உனக்கு எவ்வளவோ பிரச்சினை இருக்குது. அதையெல்லாம் விட்டுவிட்டு எதற்கு அதைப்பற்றி நினைக்கிறாய்." வேலு தனக்குத் தானே கூறிக்கொண்டான். ஆனால் எண்ணங்கள் அவனை சில வருடங்கள் அழைத்துச் சென்றன. அவனை மீறியே சம்பவங்கள் பல எவன் மனதில் தோன்றின. துரோகியின் முகம்... அந்த தீ பறக்கும் கண்கள்... எல்லாம் நினைவிற்கு வந்தன.

அப்போது வேலு துள்ளலும் கும்மாளமுமான இளமை காலத்தை வாழந்திருந்தான். தனது சைக்கிளின் பெடல்களை மிகவும் துள்ளலுடன் மிதித்துக் கொண்டிருந்தான். டீக்கடையில் கேட்ட ரேடியோப்பாடல் அவனின் கும்மாளத்தை அதிகரித்தது. இன்னும் நல்ல வியாபாரம் தான்! பணம் கொட்டோ கொட்டென்று கொட்டப் போகுது. தங்கையின் கலியாணம்... வெளுத்துக்கட்டிடலாம்.

அப்போது அவன் கடை இன்று உள்ளதைப் போல் இருக்கவில்லை. அரிசி மூட்டைகளும், வெங்காய மூட்டைகளும் என ஸ்டோர்ஸே நிரம்பியிருந்தது. அவன் சென்ற மாதம் வாங்கியிருந்த "இலக்ட்ரோனிக்" தராசு இன்னும் அப்படியே இருந்தது. காரணம் வேலு அதை தினமும் துடைத்து பாதுகாத்து வைத்திருந்தான். அவனது அப்பாவின் காலத்தில் கடையில் சாதாரண தராசே இருந்தது. அவனது அப்பாவின் இறப்பிற்கு பின் கடை இவனைத்தான் பின்பு இவனது முக்கிய நோக்கம் அந்த "இலக்ட்ரோனிக்" தராசை வாங்குவதே. அதை நிறைவேற்றிவிட்டான். அந்த கும்மாளம் தான் அவனை இவ்வாறு சைக்கிள் ஓட்டவைத்தது.

கடையண்டே வந்தான். பெரிய கடைதான். அவனைப் பொறுத்தவரையில் ஒரே குறை. கடையின் பெயரை, ஒரு போட்டில் அச்சடித்து மாட்டவேண்டும். அதற்கு பணமும் சேர்க்க வேண்டும் "குகன் ஸ்டோர்ஸ்" அப்பாவின் பெயரிலேயே கடைவைக்க வேண்டும் என்பது அவனது நோக்கம்.

"என்ன அண்ணா; வெள்ளனயே வந்திட்டியள்" சந்திரனின் குரல் கேட்டது. சைக்களை நிறுத்திவிட்டு வேலு நிமிர்ந்து பார்த்தான்.

"வெள்ளன வந்தது கஸ்டமா இருக்கோ?"
"இல்லையண்ணா, கொஞ்சம் பிந்தி வந்திருந்தீங்க என்றால் கடையை சுருட்டிக்கொண்டு போயிருக்கலாமே"
"நினைப்புதான்"

கடையில் வேலுவும் சந்திரனும்தான், சந்திரனின் அப்பாவும் அம்மாவும் இறந்ததன் பின் அந்த பதினாறு வயது பிள்ளையை தனது சொந்தத் தம்பியாக எண்ணி கடையில் அமர்த்திக்கொண்டான். உண்மையில் சந்திரன் அவனின் ஒன்றுவிட்ட தம்பிதான். அவனோடு வேலை செய்வதும் ஒரு வித கும்மாளம் தான். வேலு இல்லாத போது கடையைப்பர்த்துக் கொள்வதும் அவனதான். நம்பிக்கையான பிள்ளை. அவ்வளவு காலமும் பிறகு?

மாதம் செல்லச்செல்ல சந்திரனின் நடத்தையில் மாறுதலைக்கண்டான் வேலு. என்றும் இல்லாதது போல் தனது நண்பர்களை கூட்டிவந்தான் கடைக்கு. அவனுக்கு என்னைவிட்டால் வேறுயார்?

மேலும் சில மாதங்கள் சென்றன. வேலு பஸ்ஸில் ஊருக்கு வந்துகொண்டிருந்தான். அம்மாக்கு சுகமில்லையாம் என்னவோ ஏதோ, கடவுளே ஒன்றும் நடந்திருக்கக் கூடாது. வீட்டுக்கு வந்தான். வீடு திறந்திருந்தது. பயந்துகொண்டு உள்ளே சென்றான். வீடு முழுவதும் சபைமல் வாசனை. யார் சமைக்கமுடியும்? அம்மா! அம்மா சமைத்துக்கொண்டிருந்தாள். அவளுக்கு எதுவுமில்லை! பின்ன யார்? எழுதியது?.. அந்தகடிதம் பொய்யோ?

ஒரு கிழமை விரைந்தோடியது மீண்டும் கடைக்கு திரும்பிவந்தான். மூன்று மணித்தியால பயணம், களைப்பு, பசி எல்லாம் அவனை சூழந்திருந்தன. கடைக்கு வந்தான் கடை மூடியிருந்தது. 'சந்திரன் எங்கே" இன்று கடையை மூடுவது பற்றி அவன் எதுவும் சொல்லவில்லையே! ஆனால் கடைபூட்டியில்லை. பூட்டும் இல்லை கதவைத்திறந்தான்!

இன்று அவன் மீண்டும் கதவை திறந்தான். எல்லாம் சரியாய் இருந்தன. எதுவும் காணாமல் போகவில்லை. சந்திரனும் இல்லை. பழைய அப்பாவின் தாரசு தொங்கிக்கொண்டிருந்தது. கதவை பூட்டிவிட்டு, மீண்டும் வீட்டை நோக்கி நடந்தான். இன்னும் கொஞ்சகாசுதான் மீண்டும் "இலக்ட்ரோனிக்" தராசு வாங்கிவிடலாம், கொஞ்ச காசுதான் சேர்க்க இருக்கு சேர்த்துவிடலாம்... துரோகி! வேலி...!

M. சாகித்தியன்
11 "D"

பாடசாலைக்குள்ளான போட்டியில் மத்திய பிரிவில் முதலாமிடம் பெற்ற கட்டுரை

நாட்டார் தெய்வங்கள்

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தின் முன் தோன்றியது எங்கள் சைவசமயம். காலத்தால் அழியாதது எங்கள் சைவம். குல்லிலே பொறித்த எழுத்தைப் போல பன்னெடுங்காலமாக இவ்வுலகத்தை விட்டு நீங்காது பல்வேறு மக்களின் மனதிலும் இடம்பெற்றுள்ள சிறப்பு மிக்க மதமே எங்கள் சைவசமயமாகும். மூவேந்தரால் போற்றி வளர்க்கப்பட்டு பலராலும் பேணிப்பாதுகாக்கப்பட்டு போற்றப்பட்டு வரும் எல்லையிலா புகழ் பெற்ற சமயமே சைவமாகும். புல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக இவ்வுலகத்தில் சைவம் நிலைபெற்றிருப்பதற்கு புலவர்களையும் அறிஞர்களையும் மட்டுமன்றி படிப்பறிவற்ற பாமரமக்களையும் அப்புகழ் சாரும்.
"அகர உயரி போர அறிவாசி எங்கும் நிகரில் இறைநிற்கும் நிறைந்து" என்ற திருவருட்பயன் கூற்றை அடிப்படையாகக் கொண்டு இறைவனானவன் படித்தவர் மட்டுமன்றி பாமரமக்களின் மனங்களிலும் நிலைத்துள்ளான் என்ற உண்மையை அறிய முடிகிறது.

எளிமையானதும் அழகானதும் சாந்தமானதுமான வாழ்க்கையை நடத்துபவர்கள் பாமர நாட்டார் மக்கள். நாட்டார் மக்களதும் வாழ்வு மட்டுமன்றி அவர்களது பழக்கவழக்கங்களும் வழிபாட்டு முறைகளும் வேறுபட்டவை. ஆகமத்தில் விதிக்கப்பட்ட கடவுள்களன்றி தமக்கென எளிமையான வழிபாட்டு தெய்வங்களை உருவாக்கி, அத்தெய்வங்களுக்கு சிறிய வழிபாட்டிடங்கள், எளிமையான வழிபாட்டுமுறைகள், சடங்குகளை நடாத்தி ஒரு சிறப்பான தெய்வவழிபாட்டை நாட்டார் மக்கள் மேற்கொள்கின்றனர். கிராமப்புறங்களிலேயும் காடுகளுக்கிடையேயும் தனித்து வாழும் நாட்டார் மக்கள் தமக்கு மிருகங்களாலும் ஏனைய அமானுஷ்ய சக்திகளாலும் ஏற்படும் பாதிப்பகளிலிருந்து விடுபட காவற்தெய்வங்களை தக்கும் குல தெய்வங்களாக்கி அத்தெய்வங்களுக்கு சிறிய கட்டிடங்களை ஆற்றோரங்களிலும் வயல்களிற்கு இடையேயும் அமைத்து அக்கட்டிடங்களை வழிபாட்டிடங்களாக்கி அங்கு தாமே பூசாரிகளாகி தமது நாட்டார் நியதிப்படி பூசை நடாத்தி வழிபாட்டில் ஈடுபடுகின்றனர்.
நாட்டார் தெய்வங்களி அண் தெய்வங்களும், பெண் தெய்வங்களும் அடங்குவர். ஆத்தெய்வங்களிலே காவற் தெய்வங்கள், குளிர்த்தி தெய்வங்கள், குலதெய்வங்கள் எனவும் பாகுபடுத்தியுள்ளனர். இலங்கையின் வடகிழக்கு பிரதேசங்களிலும் இந்தியாவிலும் ஐயனார், காத்தவராயன், வைரவர் முதலிய ஆண் காவற்தெய்வங்களை தம் குலதெய்வங்களாக்கி வழிபாடுசெய்கின்றனர். இத்தெய்வங்கள் மட்டுமன்றி முனியாண்டு, அண்ணமார் முதலிய ஆண் குலதெய்வங்களை வழிபாடு செய்கின்றனர். கண்ணகியையும் காளியையும் நநச்சிமார் முதலிய பெண் தெய்வங்களை காவற்தெய்வங்காளக வழிபாடு செய்கின்றனர். மாரியம்மன் முதலிய பெண் தெய்வங்கள் தமக்கு குளிர்ச்சியை தரும் தெய்வங்களாக வழிபாடு செய்கின்றனர். இம்மக்கள் தமக்கு நோய்நொடிகள் ஏற்படும்போது துன்பங்கள் ஏற்படும்போதும் விவசாயம் முதலியவற்றில் சிறந்த

விளைச்சர் கிடைக்கவும் இத்தெய்வங்களை கண்கண்ட தெய்வங்களாக வழிபடுகின்றனர். துன்பங்களில் மட்டுமன்றி இன்பம் வரும் வேளையிலும் இவர்கள் தம் நாட்டார் தெய்வங்களை மறக்காது அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக பல்வேறு சடங்குகளை மேற்கொள்கின்றனர்.
நாட்டார் மக்கள் படிப்பறிவற்றவர்களாயினும் நன்றியுணர்வு, பயபக்தி, இறைபக்தி, பாசம், அன்பு, கருணை போன்ற சிறந்த குணங்களை நம்பியே கொண்டவர்கள். தமக்கு சிறந்தவிளைச்சாலையும் இன்பமான வாழ்வையும் தந்ததற்கு நன்றிகூற நாட்டார் தெய்வங்களுக்கு சடங்குகளைச் செய்கின்றனர். நாட்டார் மக்கள் அதிகபணத்தை கொண்டிராதவர்களகையால் தமக்கு விளைச்சல்களில் கிடைக்கும் நெல், மரக்கறிகளை வைத்து தம் தெய்வங்களுக்கு பொங்கல், மடை, சடங்கு போன்ற சடங்குகளை மேற்கொள்கின்றனர். ஊரிலுள்ள பலர் ஒன்று சேர்ந்து சடங்கும் பந்தல்கள் இட்டு வழிபாட்டிடங்களை அலங்கரித்து பொங்கல் பொங்குவர், மடை படைவர், சடங்குகளை மேற்கொள்வர். இவை மட்டுமன்றி தமது தொழில்களில் சிறப்பு பெற உதவியதற்கு விவசாயிகள் பொலிச்சடங்கு, முளைப்புச்சடங்கு முதலியவற்றை மேற்கொண்டு நன்றி செலுத்துவதுடன் ஏனையோர் விஜயதசமி முதலிய தினங்களில் ஆயுத பூசைகளையும் மேற்கொள்கின்றனர்.

"நன்றி மறப்ப நன்றன்று. நன்நல்லது
அன்றே மறப்ப நன்று"

என்ற திருக்குறளுக்குச் சான்றாம் நாட்டார் மக்களின் சடங்குகள் அமைந்துள்ளது.

எளிமையினதும் சாந்தத்தினதும் சிகரமாக விளங்கும் பாமரமக்கள், இறைவன் தூணிலுமிருப்பான், துரும்பிலுமிருப்பான்" போன்ற நல்வாக்குகளுக்கு சான்றாய் திகழ்கின்றனர். நாட்டார் மக்களது வழிபாட்டு முறைள் இன்று நகரமயப்படுத்தலாலும் தொழில்நுட்ப முன்னேற்றத்தாலும் பின்னடைவை எதிர்நோக்கியுள்ளதோடு சில சில தெய்வங்களும் சில சில வழிபாட்டு முறைகளும் இன்று அழிந்து வருகின்றன. இத்தகைய எளிமையும் பரந்த சிறப்பையும் உடைய நாட்டார் தெய்வங்களும் வழிபாட்டு முறைகளும் அழியாமல் பாதுகாக்க வேண்டியது அனைத்து சைவர்களினதும் தலையாய பொறுப்பாகும். இலங்கையின் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் திருகோணமலை முதலிய பிரதேசங்களில் வாழும் சைவர்களதும் இந்தியாவில் வாழும் சைவர்களதும் பாரம்பரிய சிறப்பாயமையும் நாட்டார் வழிபாடு அழியாமல் பாதுகாப்போமாக!
"அன்பே சிவம்"

S. நிரோஷன்
10 "C"

பாடசாலைக்குள்ளான போட்டியில் மேற்பிரிவில் முதலாமிடம் பெற்ற கட்டுரை

ஆலய வழிபாடு

அவனி தன்னில் வந்துதித்த ஆயிரமாயிரமாம் படைப்புக்களில் ஆறறிவு கொண்டவன் மனிதனாகவே கருதப்படுகிறான். மனிதனானவன் நன்மதியை வென்று விண்வெளியை வெல்லத்தொடங்கி விட்டான். அவ்வாறு சிறப்புபெற்ற மனிதனை நல்வழிப்படுத்துவதே ஆலய வழிபாடு ஆகும்.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று"

என்பது ஆன்றோர் வாக்காகும். எமது முன்னோர்கள் சொன்ன வாக்கானது எமக்கு தெய்வ வாக்கு போன்றதாகும். அவர்கள் தமது அனுபவங்களையே எமக்கு தெரிவிப்பர்.

இப்போது நாம் ஆலயத்தைப்பற்றியும் அதன் வழிபாடு பற்றியும் விரிவாகப் பார்ப்போம். ஆன்மா ஒன்றிக்கும் இடம் ஆலயம் எனப்படும். ஆகவே இறைவனை வழிபடுவதற்குரிய சிறந்த இடமாகவும் ஆலயம் காணப்படும்.

ஆலயத்திற்கு நாம் எவ்வாறு செல்லலாம்? எனப்பார்ப்போம். அதிகாலையில் துயிலெழுந்து பல்முகம் கழுவி குளித்து தோய்த்து உலர்ந்த ஆடை அணிந்து நாம் ஆலயம் செல்ல வேண்டும். ஆண்கள் வேட்டி அணிவது விரும்பத்தக்கது. பழம், பாக்கு வெற்றிலை, தேங்காய் என்பவற்றை தட்டில் இட்டு கையால் தட்டை பிடித்து வயிற்றிற்கு நேரே அதை வைத்து கொண்டு செல்ல வேண்டும்.

ஆலயம் செல்லும்போது முதலில் தூலலிங்கத்தை கண்டவுடன் அதை வணங்க வேண்டும் பின், ஆலயததிற்குள் கால் கழுவிச் சென்று முதல் வணக்கத்திற்குரிய பிள்ளையாரை வழங்க வேண்டும்.

"ஐந்து கரத்தனை ஆனை முகத்தினை
இந்தி நிலப்பினை போலும் எயிற்றனை
நந்தி மகந்தனை யானைக் கொழுந்தினை
புந்தியில் வையிற்றடி போற்றுகின்றறோமே"

பின் கோயில் உள்ள இறைவனை வணங்கிவிட்டு இறுதியில் சண்டேசுவரரை வணங்க வேண்டும். அவரை மூன்று முறை கைதட்டிவிட்டு, வணங்குதல் எமக்கு பல்வேறு வகையில் பயன்தரும்.

ஆலய வழிபாட்டால் கிடைக்கும் பயன்கள் யாவை என அடுத்துப் பார்ப்போம். ஆலய வழிபாட்டால் எமது மனது நிறைவடையும் மனதில் மகிழ்ச்சி

பொங்கும், ஆலயத்தின் சிறப்புக்கள், மகிமைகள் என்பவற்றை அறியாலம். இறைவனின் பேரருள் எமக்கு கிடைத்து எமது வாழ்வு இன்பம் நிறைந்ததாக அமையும்.

இறை அடியார்கள் அனைவரும் இறைவனை வணங்கியே அதாவது ஆலய வழிபாடு செய்தே முக்தி என்ற பேரின்ப நிலையை அடைந்தனர். உதாரணமாக சிவ அடியார்களான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் போன்றோரை குறிப்பிடலாம்.

ஆலய வழிபாட்டின் போது நாம் செய்யத்தாகாத செயல்களும் காணப்படுகின்றன. அதாவது ஆலயத்தினுள் கதைத்தல், ஆலய வழிபாட்டின் போது நாம் செயயத்தாகாத செயல்களும் காணப்படுகின்றன. அதாவது ஆலயத்தினுள் கதைத்தல், ஆலயத்தினுள் காலை நீட்டி உட்காருதல், தலைமயிரை விரித்து விடுதல், கோயிலிற்குள் ஓடி ஆடித்திரிதல், மற்றும் விக்கிரகங்களை திரைச்சீலையால் மறைத்த போது அதனை வழிபடுதல் என்பவற்றை குறிப்பிடலாம்.

எனவே இவற்றை தவிர்த்து இறைவனை வழிபடவேண்டும். இவ்வாறு வழிபடுவதன் மூலம் முக்தி என்ற பேரின்பதை பெற முடியும். ஆலய வழிபாடே ஒருவனை நல்மனிதனாக்கி ஒருவரின் உயர்ச்சிக்கு வித்திடும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

ஆலயம் தொழுவோம்
விக்கினம் தீர்ப்போம்.

S. ஸ்ரீகுனேஷன்
12 கணிதப்பிரிவு

With Best Compliments From :

T. VISAKAN

With Best Compliments From

HIRANJAN BALAKUMAR

சிவசக்தி
2010

With Best Compliments From :

N. YASHVANTHAN

9 'C'

With Best Compliments From :

Y. DINESH

With Best Compliments From :

MANOJ EXPRESS SERVICES - DOMESTIC COURIER AND DOMESTIC CARGO

MANOJ HOLIDAY INN
181, MANIPAY ROAD, JAFFNA. TEL : 021-2221131

MANOJ HARDWARE AND ELECTRICALS - KILINOCHI AND JAFFNA

HEAD OFFICE :
67/A, WOLFENDHAL STREET, COLOMBO - 15.
TEL : 2390128 FAX : 2399650
E-MAIL : manojtours@yahoo.com Hotline : 0777-517019

தீபாவளி
2010

With Best Compliments From

D. SUDHESHAN

TROPHIES

AND

AWARD SPONCER

சிவசக்தி
2010

With Best Compliments From

P. RAGUWARAN

சிவசக்தி
2010

Inter Grade Competition

Pannisai

Grade 3"C"

1st Place	-	S.Srishangar
2nd Place	-	S.Abishek
3rd Place	-	R.Nicesh

Grade 3"D"

1st Place	-	S.Piranavan
2nd Place	-	J.Adchayan
3rd Place	-	K.Marutheesan

Grade 4

1st Place	-	S.Nitharshanan
2nd Place	-	C.Veespathip
3rd Place	-	A.M.Kumaran
		Y.Kowmaran

Grade 5

1st Place	-	S.Anantha Narayanan
2nd Place	-	J.Vithushigan
3rd Place	-	K.Sabeshan
		M.Vipooshan

Speech

Grade 4"C"

1st Place	-	Vidooshan
Krishnakumar		
2nd Place	-	Ramana Moorali
3rd Place	-	Kaushall Manoharan

Grade 4"D"

1st Place	-	Rishigeshan Srikumar
2nd Place	-	Sangeeth Sadharuban
3rd Place	-	Kreshaan Sivadasan
		Srikaran Karthigesu

Thirukural mananam

Grade 3"C"

1st Place	-	Vaidesh Balakrishnan

Grade 3"D"

1st Place	-	Kavienan Jagtheesan
2nd Place	-	Tarakeishwar Suganthan
3rd Place	-	Sathushan Thavendren

Essay

Grade 4"C"

1st Place	-	V.Tharanesh
2nd Place	-	N.Nishok

Grade 4"D"

1st Place	-	A.Ashwin Sai
2nd Place	-	S.Sathyan
3rd Place	-	K.Aswanth

Essay

Junior

1st Place	-	B.Harriesh
2nd Place	-	S.Rukshonth
3rd Place	-	S.Sharma
		T.Duwaragan

Inter Mediate

1st Place	-	S.Niroshan
2nd Place	-	J.Kavin Kashvanth
3rd Place	-	S.Balagajan

Senior

1st Place	-	S.Sriguneshan
2nd Place	-	Y.Thirukumaran
3rd Place	-	S.Anushan

Short Story

Inter Mediate

1st Place	-	J.Mayrujaan
2nd Place	-	V.Duwaragesh
3rd Place	-	T.Amirthan
		N.Thiloshan

Senior

1st Place	-	M.Saahiththiyan
2nd Place	-	J.Thiviyan

Poetry

Intermediate

1st Place	-	S.Arjun Kumar
2nd Place	-	S.Ladhurshan
3rd Place	-	Y.Pranavan

Senior

1st Place	-	J.Harshanth
2nd Place	-	V.Vithushan
3rd Place	-	B.Ajan

Sahalagala Valli Malai

Grade - 4

1st Place	-	S.Nitharshan
2nd Place	-	S.Vispathim
3rd Place	-	Y.Gowmaran
		S.Sathyan

Junior

1st Place	-	A.Sanchayan
2nd Place	-	W.A.Avineash
3rd Place	-	T.Mayooran

Intermediate

1st Place	-	A.Senthuran
2nd Place	-	S.Prashanth
3rd Place	-	.Harisuthan
		J.Arushan

Natchinthanai

Junior

1st Place	-	A.G.Balaratnarajah
2nd Place	-	T.Mayuran
3rd Place	-	N.Senthuran
		A.Sanchayan

Intermediate

1st Place	-	N.Thiloshan
2nd Place	-	T.Kantharuban
3rd Place	-	S.Prashanth

Pannisai

Junior

1st Place	-	S.Shyam Santhosh
2nd Place	-	A.Sanchayan
3rd Place	-	W.A.Avineash
		B.Gokul

Intermediate

1st Place	-	J.Praveen
2nd Place	-	A.Senthuran
3rd Place	-	Y.Mithushan

With Best Compliments From :

B. GURUBARAN

8C

Our Sincere Thanks to.....

- *Mr. P. Sridharan for honouring this occasion with his presences the Chief Guest,*
- *Our Principal Mr. H. A. Upali Gunasekara for this whole hearted support,*
- *For our Teacher In Charge Mrs. L. Thavakumar and other Assistant Teacher In Charges for standing by us and giving us all the encouragement and support,*
- *The old boys who have helped us when necessary,*
- *The sponsoring companies and personals who have helped us in the correct situation,*
- *All representatives and students of other schools who have participated in this "Inter School Competitions" and the judges,*
- *R. Yogathasan and S. Gowtharaam for helping us respectively in Type setting and Graphics,*
- *G.R.S Printers for having printed the Certificates, Invitations and Souvenirs,*
- *All providers of sounds, lights, decoration, food and drinks*
- *All the parents who have granted their support to hold such an event,*
- *All patrons who have come to grace this occasion,*

"Our Feeling of gratitude is immeasurable"

Hindu Students' Union
Royal College.
(2010 / 2011)

We are proud to

Celebrate 175 years

of

Excellence

சிவசக்தி
2010

சிவசக்தி
2010

MAHARAJA FOOD PRODUCTS SHOP

www.gtventer.com

Fresh Fruit & Vegetables

THE REAL CHOICE

18/3 Dr. E. A. Cooray mawatha,Wellawatte,Colombo-00600,Sri Lanka.
Tel: +94-11-2360926, +94-11-2360916 Fax: +94-11-2361139
E-mail : maharaja@gtventer.com
Web: www.maharajafoodproduct.com